# சட்டக்கதிர்

சட்ட மாத இதழ்

SATTAKADIR TAMIL MONTHLY

25 SILVER JUBILEE 1992 - 2016-17 வெள்ளி விழா ஆண்டு

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அறங்கூறாயங்கள் அறமே செய்யட்டும்"

செப்டம்பர் 2026 | புரட்டாசித் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 34 | September - 2026 | Issue - 11 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026


SATTAKADIR

- **இணையவழியில் நீதிமன்ற நடவடிக்கைகளை அனைவரும் பார்க்கும் காலம் வரவேண்டும்** – தலையங்கம்

- **ஓய்விற்குப் பின் மறுபணி நியமனம் பெற்ற அதிகாரிகளின் ஊதிய நிர்ணயம் போன்றவற்றை வழக்கமான அதிகாரிகளிடமிருந்து தனித்து நடத்தலாம்** – இந்திய உச்சநீதிமன்றம்

- **மாநகராட்சிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றலில் சொத்துரிமையர்களின் பாதையுரிமையை மறுக்கக் கூடாது.** – சென்னை உயர்நீதிமன்றம்

- **பாகப்பிரிவினை வழக்கில் சட்டப்படி நிரூபிக்கப்படாத உயில் மற்றும் தானப் பத்திரங்கள் செல்லாது.** – சென்னை உயர்நீதிமன்றம்

- **நிலம் கையகப்படுத்துதலும் அதில் அரசாங்கங்களுக்கான அதிகாரமும்** – சென்னை உயர்நீதிமன்றம்

- **விண்ணப்பத்தில் ஏற்பட்ட சிறிய பிழையை சுட்டிக்காட்டி பணி நியமனத்தை மறுப்பது சட்டவிரோதம் மனுதாரரை 'மறுவாழ்வு ஆலோசகராக' நியமிக்க உத்தரவு.** – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு)

- **மனுதரப்பை விசாரிக்காதது சட்ட நடவடிக்கையை பயனற்றதாக்கும்** – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்)

## முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்


ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,



www.sattakadir.com http://epaper.sattakadir.com


VIT®
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
At VIT, we believe it is crucial to provide students with an environment that positively influences their thoughts, stimulates their interest and encourages learning in different settings. Our programmes are structured in line with the changing times. Our faculty and infrastructure are geared to be future ready. And, our students learn and imbibe lifelong values that equip them to be futuristic.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in vituniversity VIT_univ vellore-institute-of-technology vellore_vit VITUniversityVellore

# சட்டக்கதிர்
தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்

செப்டம்பர் 2026 http://epaper.sattakadir.com புரட்டாசித் திங்கள் இதழ் 2026


பொருளடக்கம்


1. இணையவழியில் நீதிமன்ற நடவடிக்கைகளை அனைவரும் பார்க்கும் காலம் வரவேண்டும் – தலையங்கம் 5

2. ஓய்விற்குப் பின் மறுபணி நியமனம் பெற்ற அதிகாரிகளின் ஊதிய நிர்ணயம் போன்றவற்றை வழக்கமான அதிகாரிகளிடமிருந்து தனித்து நடத்தலாம் – இந்திய உச்சநீதிமன்றம் 7

3. சொத்து பற்றுகையும் சட்ட நடைமுறையும் – சென்னை உயர்நீதிமன்றம் 18

4. மாநகராட்சிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றலில் சொத்துரிமையர்களின் பாதையுரிமையை மறுக்கக் கூடாது – சென்னை உயர்நீதிமன்றம் 25

5. பாகப்பிரிவினை வழக்கில் சட்டப்படி நிரூபிக்கப்படாத உயில் மற்றும் தானப் பத்திரங்கள் செல்லாது – சென்னை உயர்நீதிமன்றம் 33

6. நிலம் கையகப்படுத்துதலும் அதில் அரசாங்கங்களுக்கான அதிகாரமும் – சென்னை உயர்நீதிமன்றம் 42

7. விண்ணப்பத்தில் ஏற்பட்ட சிறிய பிழையை சுட்டிக்காட்டி பணி நியமனத்தை மறுப்பது சட்டவிரோதம் மனுதாரரை 'மறுவாழ்வு ஆலோசகராக' நியமிக்க உத்தரவு. – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு) 50

8. மனுதரப்பை விசாரிக்காதது சட்ட நடவடிக்கையை பயனற்றதாக்கும் – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்) 54

9. உங்களைப் பற்றி அனைத்தையும் அறிந்த, ஆனால் நீங்கள் இந்தியரா என்பதை மட்டும் அறியாத அரசு – ரித்விக் சௌத்ரி 62

10. 1996ஆம் ஆண்டு மெட்ராஸ் மாநகர் (பெயர் மாற்றம்) சட்டம் – த.நா. மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 69

11. 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் – த.நா. மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 70

12. 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின் கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டம் – த.நா. மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 77

# சட்டக்கதிர்

*ஆசிரியர் வெளியிடுபவர்:*
முனைவர் வே.இரா.சே.சம்பத்

*சிறப்பு ஆலோசனைக் குழு:*
*மூத்த வழக்கறிஞர்கள்:*
திரு.ஆர்.காந்தி
திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்
டாக்டர் எ. தியாகராஜன்

*சட்ட/தமிழ் வல்லுநர்கள்:*
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

*வழக்கறிஞர்கள்:*
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி
திரு. எஸ். பாலமுருகன்

*சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:*
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

*டெல்லி உச்சநீதிமன்றத் தொடர்பாளர்:*
திருமதி இந்திரா, வழக்கறிஞர்

*மொழி பெயர்ப்பாளர் குழு:*
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன்

*அலுவலகப் பணிக்குழு:*
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்

*வடிவமைப்பு:* வாசன் அச்சகம், சென்னை


| சந்தா விவரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | ₹ 75 | US $ 3 |
| ஆண்டுச் சந்தா | ₹ 900 | US $ 25 |
| வாழ்நாள் சந்தா | ₹ 10,000 | US $ 250 |
| காப்பாளர் சந்தா | ₹ 25,000 | US $ 500 |

சந்தாத் தொகையைச் ''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை **(Money Order)** மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


# சட்டக்கதிர் வெளியீடுகள்

| | |
|---|---|
| சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு (12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு) | ரூ.1200/- |
| நீதிமன்றங்களில் தமிழ் | ரூ.500/- |
| தமிழ்நாட்டில் நீதிமுறைகள் (அச்சில்) | ரூ.500/- |
| சட்டவல்லுனர் பார்வையில் அண்ணா | ரூ.500/- |
| தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி | ரூ.500/- |
| சட்டமும் சமுதாயமும் (அச்சில்) | ரூ.150/- |
| சென்னையிலிருந்து உலகை நோக்கி | ரூ.200/- |
| உன்னுள் என்னைப் பார் | ரூ.150/- |
| உலகெங்கும் கலைஞர் | ரூ.300/- |
| "International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report" (English) | Rs.500/- |

''**சட்டக்கதிர்**'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com




**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம். சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!**

# சட்டக்கதிர்

"முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு"

புரட்டாசித் திங்கள் இதழ்

சட்டம் – 34 செப்டம்பர் 2026 கதிர் – 11

## இணையவழியில் நீதிமன்ற நடவடிக்கைகளை அனைவரும் பார்க்கும் காலம் வரவேண்டும்

கடந்த இரண்டு ஆண்டுகளாக உச்ச நீதிமன்றங்களிலும், உயர்நீதிமன்றத்திலும் பெரும்பாலும் இணையவழியில் தான் வழக்குகள் விசாரிக்கப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நீதிமன்றங்களில் வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் மற்றும் வழக்காடிகள் பார்க்கக் கூடிய வசதி செய்யப்பட்டிருக்கிறது. வழக்கறிஞர்கள் மட்டுமே பேசக்கூடிய வாய்ப்பும், அதுவும் அந்தந்த வழக்கறிஞர்கள் பேசக்கூடிய வாய்ப்பும், வழக்காடிகள் பார்வையிடுகிற வாய்ப்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு அருமையான வாய்ப்பு. இதற்கான அனைத்து தொழில்நுட்ப வசதிகளும், அனைத்து உயர்நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் மிக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

தற்போது கொரானா தாக்கம் குறைந்துள்ள நிலையில்; வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்கு நேரில் சென்று வாதாடுகிறார்கள், இணைய வழியிலும் வாதாடுகிறார்கள். இது ஒரு சிறப்பான ஏற்பாடு ஆகும். அவரவர் வசதிக்கேற்ப நேரடியாகவும், இணைய வழியாகவும் நீதிபதியின் முன்பாகவும் வாதாட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் வெளி ஊரில் உள்ள வழக்கறிஞர்கள், சென்னைக்கு வரவேண்டிய அவசியமில்லை. அதுபோல உச்ச நீதிமன்றத்திற்கு செல்லக்கூடிய வழக்கறிஞர்களும் சென்னையில் இருந்து இணையவழியாக வாதாடலாம். தேவைப்பட்டால் வழக்கறிஞர்கள் நேரிலும் செல்லலாம் என்கிற வாய்ப்பு மிகவும் சிறப்பான ஒன்றாகும். இணைய வழியாக வாதாடினால் வழக்கறிஞர்களுக்கான போக்குவரத்து செலவுக் கட்டணத்தை வழக்காடிகள் தர தேவையில்லை. இதனால் பணவசதி குறைவாக உள்ளவர்களும் நீதிமன்ற கதவைத் தட்ட முடியும்.

இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இன்டர்நெட், சாப்ட்வேர் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி நிரந்தர இணையவழி வசதியாக மாற்ற, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மூத்த நீதிபதிகள் அடங்கிய குழு, நீதிமன்ற நடவடிக்கைகள் இனி வரும் காலங்களில் தொடர்ந்து இணையவழியாக யார் வேண்டுமானாலும் பார்க்கலாம் என்பதை ஏற்படுத்தித் தரவேண்டும். இதனால் நீதிமன்றங்களின் வெளிப்படையான தன்மை மேலும் மேலும் உறுதிப்படுத்தப்படும்.

தற்போது உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் இணைய வழியாக வழக்கறிஞர்கள் பயன்படுத்துவதற்கு உரிய அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே அதற்கான செலவு எதுவும் இல்லை. நடைமுறை செலவு மட்டும்தான். ஆகவே பார்வையாளர்கள் பார்க்கலாம். சம்பந்தப்பட்ட வழக்காடிகள் பார்க்கலாம் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் பேசலாம் என நிரந்தரமாய் வசதிகள் செய்து தரலாம்.

இனி வரும் காலங்களில் முழுக்க முழுக்க வழக்கறிஞர்கள் நேரடியாக வருகை தந்து, வழக்கு நடத்தலாம், இணைய வழியாகவும் வழக்கு நடத்தலாம். அதேநேரத்திலும் இணைய வழியில் வழக்காடிகளும், பார்வையாளர்களும் பார்ப்பதற்கு வசதிகள் தரப்படவேண்டும். அப்போதுதான் வழக்கறிஞர்கள் வாதம் நீதிமன்ற செயல்பாடுகள் மற்றும் நீதிபதிகளின் மேலாண்மை என அனைத்தும் வாதாடிகளும், பார்வையாளர்களும், வழக்கறிஞர்களும், சட்டக் கல்லூரி மாணவர்களும், பொதுமக்களும் இணைய வழியாக பார்க்கிற வாய்ப்பாக அமையும். இதன் மூலம் நீதித்துறையின் மாண்பும், சட்ட அறிவும், மேலும் மேலும் உயர்தன்மை அடையும்.

இதனுடைய தொடர்ச்சியாக கீழமை நீதிமன்றங்களிலும், மேலும் மேலும் இணைய வழியில் வாய்ப்புகளை ஏற்படுத்திட வேண்டும்.

இன்றைய கூட்டாட்சி இந்தியாவில் பலமொழி பல இனங்கள் வாழும் மிகப்பெரிய துணை கண்டத்தில் அனைவரும் சேர்ந்து வாழ அந்தந்த மாநில உரிமைகளை நிலைநாட்டி கொள்ள நீதிமன்ற நிர்வாகத்தில் நீதிமன்ற நடவடிக்கையில் வெளிப்படை தன்மையை உருவாக்க இணைய வழி வசதிகளை நிரந்தரமாக்க வேண்டும். மாநில உயர் நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழியை குறிப்பாக தமிழகத்தில் தமிழை உயர்நீதிமன்ற வழக்கு மொழியாக பயன்படுத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற வளர்ந்த நாடுகளில் தொலைக்காட்சி வழியாகவும் இணைய வழியாகவும் நீதிமன்ற நடவடிக்கைகளை பார்க்கிற வெளிப்படை தன்மையை மேலும் உறுதியாக்கும் படி அமைந்துள்ளது.

இதனால் இந்தியா போன்ற பல தேசிய இனங்களை கொண்ட கூட்டாட்சி நாட்டில் நீதித்துறையின் மாண்பு மேலும் மேலும் உயர்வு பெறும். இதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திட ஆளும் அரசாங்கமும், சட்டமன்ற உறப்பினர்கள் அந்தந்த சட்டமன்றத்தில் குறித்து தீர்மானம் நிறைவேற்று மத்திய சட்ட அமைச்சகத்திற்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் அனுப்ப வேண்டும். அதேபோல நாடாளுமன்றத்திலும் இதற்கான சட்டம் கொண்டு வரவேண்டும். உயர்நீதிமன்றங்களின் உரிய ஆலோசனைகளையும் பெற வேண்டும். உச்ச நீதிமன்றம் வெளிப்படை தன்மையை உறுதிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனை இன்றைய இளைய தலைமுறை மற்றும் பெருங்குடி மக்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள்.

– ஆசிரியர்

# ஓய்விற்குப் பின் மறுபணி நியமனம் பெற்ற அதிகாரிகளின் ஊதிய நிர்ணயம் போன்றவற்றை வழக்கமான அதிகாரிகளிடமிருந்து தனித்து நடத்தலாம்

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி எஸ்.வி.என்.பாட்டி,**
**மாண்புமிகு நீதிபதி என்.வி.அஞ்சாரியா**
**நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 193/2012**
**2026 LiveLaw (SC) 801**

**ஆர்.கே. யாதவ் மற்றும் மற்றொருவர் ...மனுதாரர்கள்**

–எதிர்–

**இந்திய ஒன்றியம் மற்றும் பிறர் ...எதிர்மனுதாரர்கள்**

## தீர்ப்பு

**நீதிபதி என்.வி.அஞ்சாரியா**

1. மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. நிஷாந்த் கிரிஷன் யாதவ் அவர்களின் வாதம் கேட்கப்பட்டது. இந்திய ஒன்றியம் மற்றும் அதன் அதிகாரிகளான 2 மற்றும் 3–வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் திருமதி அர்ச்சனா பதக் தவே ஆஜரானார். அவருக்கு உதவியாக பதிவுபெற்ற கற்றறிந்த வழக்கறிஞர் திரு. அம்ரிஷ் குமார் மற்றும் பிற வழக்கறிஞர்கள் ஆஜராகி வாதிட்டனர்.

2. ஊதிய விகிதங்களை நிர்ணயம் செய்வது தொடர்பான விஷயத்தில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14 மற்றும் 16–வது கூறுகளின் கீழ் உள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும், அரசியலமைப்புச் சட்டத்தின் 32–வது கூறின் கீழ் இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பைப் பயன்படுத்தியும், மனுதாரர்கள் இந்த மனுவில் பின்வரும் முக்கியப் பிரார்த்தனைகளை முன்வைத்துள்ளனர்:

(அ) பிற தீர்ப்பாயங்களுக்கு இணையாக, மத்திய அரசு தொழில் தீர்ப்பாயத்திற்கும் 6–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துமாறு 1–வது எதிர்மனுதாரருக்கு உத்தரவிடும் செயலுறுத்தும் வகையிலான நீதிப்பேராணையைப் பிறப்பிக்க வேண்டும்.

(ஆ) மேலும், உரிமையியல் நீதிப்பேராணை மனு எண் 1022/1989–இல் உள்ள இடையீட்டு மனு (I.A.) எண்கள் 276 மற்றும் 5–ல் இந்த மாண்புமிகு நீதிமன்றத்தால் முறையே 07.04.2010 மற்றும் 04.05.2010 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைக் கருத்தில் கொண்டு, 6–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1–வது மனுதாரரின் ஊதியத்தை நிர்ணயம் செய்ய 1–வது எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டும்.

(இ) எண் அ11015/1/2002–CLS&II வாயிலாக 16.01.2012 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய நீதிப்பேராணையைப் பிறப்பிக்க வேண்டும்.

3. தாங்கள் முறையே புது தில்லி மற்றும் ஹைதராபாத்தில் செயல்படும் மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டதாக மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாங்கள் தலைமை வகித்த தீர்ப்பாயங்கள், அரசியலமைப்புச் சட்டத்தின் 323–ஆ கூறுடன் இணைத்துப் படிக்கப்படும் 247–வது கூறின் பொருளின்படி மத்திய நீதிமன்றங்கள்/தீர்ப்பாயங்கள் என்று வாதிடப்பட்டது. மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம், வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், ரயில்வே உரிமை கோரல் தீர்ப்பாயம், கடன் மீட்புத் தீர்ப்பாயம், அந்நியச் செலாவணி பராமரிப்பு ஆணையம், நிறுவன சட்ட வாரியம

போன்ற பிற தீர்ப்பாயங்களும் அரசியலமைப்புச் சட்டத்தின் 247, 323-அ மற்றும் 323-ஆ கூறுகளின் வரம்பிற்குள் வரும் தீர்ப்பாயங்களாகும் என்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

3.1 ஒருபுறம் மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களும், மறுபுறம் மேற்கண்ட அனைத்து தீர்ப்பாயங்களும் ஒரே நிலையில் இருப்பதாகவும் மனுதாரர்கள் சமர்ப்பித்தனர். நிலைமை அவ்வாறு இருந்தபோதிலும், மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் மற்றும் வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் போன்ற பிற தீர்ப்பாயங்களின் அதிகாரிகளுக்கான 6-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது என்றும், இருப்பினும், மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை, அரசியலமைப்புச் சட்டத்தின் 233-வது கூறின் கீழ் மாநில அரசால் அமைக்கப்பட்ட மாவட்ட நீதிபதிகளின் நீதிமன்றங்களுக்கு இணையாக அவற்றையும் அரசாங்கம் கருதியது என்றும், அதற்கேற்ப ஊதிய அமைப்பு மற்றும் ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன என்றும் வாதிடப்பட்டது.

3.2 அனைத்து மாநிலங்களின் மாவட்ட நீதித்துறைகளுக்காக இந்த நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட நீதிபதி ஈ.பத்மநாபன் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஊதிய விகிதங்கள், மனுதாரர்களைப் போன்ற மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகளுக்கும் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் எதிர்மனுதாரரான இந்திய அரசு, சமமற்றவர்களைச் சமமானவர்களாகக் கருதியதுடன், தன்னிச்சையாக மனுதாரர்களை மாவட்ட நீதித்துறையுடன் இணைத்து, அவர்களுக்கு 6-வது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்களை மறுத்துள்ளதாக மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

3.3 மனுதாரர்களால் முன்வைக்கப்படும் சமமற்ற நடத்தை குறித்த வாதத்தின் அடிப்படை என்னவென்றால், அவர்களுக்கு 6-வது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்களை வழங்குவதற்குப் பதிலாக, மாவட்ட நீதித்துறைக்கு வழங்கப்படும் ஊதிய விகிதங்களுக்கு இணையாக நீதிபதி ஈ. பத்மநாபன் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஊதிய விகிதங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதேயாகும்.

3.4 அரசியலமைப்புச் சட்டத்தின் 247, 323-அ மற்றும் 323-ஆ ஆகிய கூறுகளின் கீழ் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களின் கீழோ அல்லது அரசியலமைப்புச் சட்டத்தின் 372-வது கூறால் பாதுகாக்கப்பட்ட தற்போதைய சட்டங்களின் கீழோ மத்திய அரசால் தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும், எனவே அவற்றை அரசியலமைப்புச் சட்டத்தின் 233 மற்றும் 234 கூறுகளின் கீழ் அல்லது அரசியலமைப்புச் சட்டத்தின் 323-ஆ கூறின் கீழ் வழங்கப்பட்ட ஒரு சட்டத்தின் கீழ் மாநில அரசால் அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களுக்கு இணையாக வைக்க முடியாது என்றும் எதிர்மனுதாரர்கள் வாதிடுகின்றனர். இதன் தொடர்ச்சியாக, மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களில் உள்ள தலைமை அதிகாரிகளுக்கு 6-வது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்களை வழங்காதது தன்னிச்சையானது மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் 14 மற்றும் 16-வது கூறுகளை மீறுவதாகும் என வாதிடப்பட்டது.

3.5 மாவட்ட நீதித்துறையின் ஊதியத் திருத்தத்திற்காக, இந்த நீதிமன்றம் நீதிபதி ஈ. பத்மநாபன் குழுவை நியமித்ததாகவும், அக்குழு தனது அறிக்கையில் மாவட்ட நீதிபதிக்கு (நுழைவு நிலை) ரூ.51550-1230-58930-1380-63070-ஐயும், மாவட்ட நீதிபதிக்கு (தேர்வு நிலை) ரூ.57700-1230-58930-1380-67210-1540-70290-ஐயும் பரிந்துரைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட நீதிபதிக்கான சிறப்பு கால முறை ஊதியம் ரூ.70290-1540-76450 எனப் பரிந்துரைக்கப்பட்டது. இந்த ஊதிய விகிதங்களே மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டன. டெல்லியில்,

6–வது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகள் ஒரு இடைக்கால நடவடிக்கையாக செயல் படுத்தப்பட்டதாக வாதிடப்பட்டது.

3.6 டெல்லி தேசியத் தலைநகர் பகுதி அரசின் நீதித்துறை அதிகாரியாக இருந்த 1–வது மனுதாரர், புது தில்லியின் மத்திய அரசு தொழில் தீர்ப்பாயத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப் பட்டு, 30.06.2009 வரை அயற்பணியில் 21.04.2009 அன்று பதவியேற்றுக் கொண்ட தாக மனுதாரர்கள் தெரிவித்தனர். 01.07.2009 முதல், 1–வது மனுதாரர் 65 வயது வரை பணியாற்றும் வகையில் மறு–வேலைவாய்ப்பு அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டார். அதன்படியே 2–வது மனுதாரரும் ஹைதராபாத் மத்திய அரசு தொழில் தீர்ப்பாயத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

3.7 மனுதாரர்களின் ஊதியம் ஒரு மாவட்ட நீதிபதிக்குக் கிடைக்கும் சிறப்பு கால முறை ஊதியத்திற்கு இணையாக நிர்ணயிக்கப்பட்டது. மத்திய குடிமைப் பணிகள் (திருத்தப்பட்ட ஊதிய) விதிகள், 2008–இல் செய்யப்பட்ட திருத்தங் களைச் சுட்டிக்காட்டும் கூடுதல் ஆவணங்களைச் சமர்ப்பிக்க மனுதாரர்கள் முற்பட்டனர், மேலும் அந்தத் திருத்தத்தின்படி, உயர் நிர்வாகத் தரத்தில் ஊதிய விகிதம் உயர்த்தப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் நீதிபதி ஈ. பத்மநாபன் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங் களின் தலைமை அதிகாரிகளுக்கான ஊதிய விகிதங்களுக்கான தேவையான உத்தரவுகளை எதிர்மனுதாரரான இந்திய ஒன்றியம் பிறப்பித்த தாகவும் தெரிவித்தனர். இதனால் அதிருப்தி யடைந்த மனுதாரர்கள் 6–வது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்களை வழங்கக் கோரி பல கோரிக்கை மனுக்களை அளித்தும் பலனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

4. இந்த மனுவும் அதிலுள்ள பிரார்த்தனை களும் 1–வது எதிர்மனுதாரரான இந்திய ஒன்றியத்தால் பதில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு எதிர்க்கப்பட்டன, அதில் பின்வரும் உண்மைகள் முன்னிலைப்படுத்தப்பட்டன:

(i) புது தில்லியின் மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றம் 1ல் தலைமை அதிகாரியாக 21.04.2009 முதல் மனுதாரர் நியமிக்கப்பட்டார். அவரது நியமனம் அவர் பணி ஓய்வு பெறும் நாளான 30.06.2009 வரை அயற்பணி அடிப்படையிலானது, அதன்பிறகு, 01.07.2009 முதல் அவர் மறு–வேலைவாய்ப்பு அடிப்படையில் நியமிக்கப் பட்டார்.

(ii) மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களில் தலைமை அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்ட நேரத்தில், டெல்லி நீதித்துறைப் பணிக்குப் பொருந்துவது போல ரூ.22,850–500–24,850 என்ற ஊதிய விகிதத்தில் மனுதாரர் தனது ஊதியத்தைப் பெற்று வந்தார்.

(iii) தொழில்துறை தகராறுகள் சட்டம், 1947–இன் விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட 22 மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்கள் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன, அவற்றில் 10 திட்டம்–சாரா மத்திய அரசு தொழில் தீர்ப்பாயங்கள் ஆகும். அதே சமயம் 12 திட்டமிட்ட மத்திய அரசு தொழில் தீர்ப்பாயங்கள் ஆகும்.

(iv) மும்பை மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றம்–ஐ மற்றும் கொல்கத்தா மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றம் ஆகியவை தேசியத் தீர்ப்பாயங்களாகச் செயல்படுகின்றன. இவற்றின் தலைமை அதிகாரிகளாகப் பணியி லிருக்கும் அல்லது ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள், அல்லது மாவட்ட நீதிபதியாகக் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் அனுபவ முள்ள பணியிலிருக்கும் அல்லது ஓய்வுபெற்ற மாவட்ட அல்லது கூடுதல் மாவட்ட நீதிபதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பொறுப்பு வகிக்கின்றனர்.

(v) உயர் நீதிமன்ற நீதிபதிகள் மட்டுமே தேசியத் தீர்ப்பாயங்களின் தலைமை அதிகாரி களாக நியமிக்கப்படுவதற்குத் தகுதி பெற்ற வர்கள் ஆவர். மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றத்தில் தலைமை

அதிகாரியாக மனுதாரர் மறு-வேலைவாய்ப்பு பெற்றபோது, அவர் பெற்ற ஊதியம் மேலே கூறப்பட்டபடி ரூ.22,850 என்ற விகிதத்தில் இருந்தது.

(vi) 6-வது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப மத்திய அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்கள் திருத்தப்பட்டதைத் தொடர்ந்து, தேசியத் தொழில் தீர்ப்பாயங்களைத் தவிர்த்து, மற்ற மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகளின் ஊதிய விகிதங்கள் குறித்தும், 6-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப அவற்றை மாற்றியமைக்க வேண்டுமா என்பது குறித்தும் ஆலோசனை வேண்டி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் இந்த விவகாரத்தை நீதித் துறைக்கு அனுப்பி வைத்தது.

(vii) முன்னதாக, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் 28.09.2005 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, ஷெட்டி கமிஷன் என்று அழைக்கப்பட்ட முதல் தேசிய நீதித்துறை ஊதியக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப மத்திய அரசு தொழில் தீர்ப்பாயத்தின் தலைமை அதிகாரிகளின் ஊதிய விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டன.

(viii) மனுதாரர்களைப் போன்ற தலைமை அதிகாரிகளின் ஊதிய விகிதங்கள் ஷெட்டி கமிஷனின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு 28.09.2005 தேதியிட்ட கடிதத்தின் மூலம் ஏற்கனவே திருத்தப்பட்டுள்ளன என்ற பின்னணியில், தற்போதைய ஊதியத் திருத்தம் ஷெட்டி கமிஷனின் பரிந்துரைகளின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டுமா அல்லது 6-வது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்களின்படி கணக்கிடப்பட வேண்டுமா என்பதை உறுதி செய்ய வேண்டியிருந்தது.

(ix) மாநில நீதித்துறையில் உள்ள மாவட்ட நீதிபதிகளின் ஊதிய விகிதங்களுக்கு இணையாக இந்த ஊதிய விகிதங்களைக் கொண்டு வருவ தற்காக, நிதி அமைச்சகத்தின் ஒப்புதலுடன் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ஷெட்டி கமிஷனின் பரிந்துரைகளுக்கு ஏற்ப மத்திய அரசு தொழில் தீர்ப்பாயங்களின் தலைமை அதிகாரிகளின் ஊதிய விகிதங்களைத் திருத்தியுள்ளதாக நீதித் துறை கவனித்தது.

(x) ஷெட்டி கமிஷனுக்குப் பிறகு மாவட்ட நீதிபதிகளுக்கு வழங்கப்பட்ட ஊதிய விகிதங்களுடன் இணைக்கப்பட்ட தலைமை அதிகாரிகளின் ஊதிய விகிதங்கள், ஊதியத் திருத்தம் குறித்து நீதிபதி ஈ. பத்மநாபன் குழு பரிந்துரைத்த பிறகு திருத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டன. மத்திய அரசு தொழில் தீர்ப்பாய தலைமை அதிகாரிக்கான திருத்தப்பட்ட ஊதிய விகிதங்கள், 16.01.2012 தேதியிட்ட நீதிபதி ஈ. பத்மநாபன் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளன.

(xi) திருத்தப்பட்ட ஊதிய அமைப்பு மனுதாரர்களுக்கும் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 1-வது மனுதாரர் ரூ. 67,000/- முதல் ரூ.79,000/- வரையிலான உயர் நிர்வாகத் தர ஊதிய விகிதத்தில் வைக்கப்பட்டுள்ளார், மேலும் அவரது இறுதி ஊதியம் அதற்கேற்ப நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4.1 அடுத்ததாக, மனுதாரர்கள் மறு-வேலைவாய்ப்பு பெற்ற நபர்கள் என்று எதிர்மனுதாரர்களால் வாதிடப்பட்டது. மத்திய குடிமைப் பணிகள் (மறு-வேலைவாய்ப்பு பெற்ற ஓய்வூதியதாரர்களின் ஊதிய நிர்ணயம்) ஆணைகள், 1986-இன்படி, மறு-வேலைவாய்ப்பு பெற்ற ஓய்வூதியதாரர்கள் தாங்கள் எந்தப் பதவியில் மீண்டும் பணியமர்த்தப்படுகிறார்களோ, அந்தப் பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதங்களில் மட்டுமே ஊதியம் பெற அனுமதிக்கப்படுவார்கள். மனுதாரர்களைப் போன்ற நபர்கள் தங்களது மறு-வேலைவாய்ப்பில் வகிக்கும் பதவிக்கான ஊதிய விகிதங்களுக்கு எந்தவொரு பாதுகாப்பும் வழங்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டது.

4.2 மும்பை மற்றும் கொல்கத்தாவில் உள்ள மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்கள் தேசியத் தீர்ப்பாயங்களாகச் செயல்படுகின்றன என்றும், அவற்றின் தலைமை அதிகாரிகளாக உயர் நீதிமன்ற நீதிபதிகள் அல்லது மாவட்ட நீதிபதி

யாக மூன்று ஆண்டுகள் பணியாற்றிய மாவட்ட/கூடுதல் மாவட்ட நீதிபதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. உயர்நீதிமன்ற நீதிபதிகள் மட்டுமே இப்பதவிக்குத் தகுதி பெற்றவர்கள் என்றும், மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகள் தங்களுக்கு 65 வயது நிறை வடையும் வரை அப்பதவியை வகிப்பார்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

4.3. தங்களுக்கு 6-வது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்களை வழங்கக் கோரி மனு தாரர்கள் அளித்த கோரிக்கை மனுவானது, நிதி அமைச்சகத்திற்கும் (செலவினத் துறை) மற்றும் பணியாளர் மற்றும் பயிற்சித் துறைக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்தார். இருப்பினும், மனு தாரர்களின் வகுப்பைச் சேர்ந்தவர்களின் அதாவது மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகளின் ஊதிய அமைப்பை மறுஆய்வு செய்யும் எண்ணம் அந்த இரண்டு துறைகளுக்கும் இல்லை.

5. மனுதாரர்கள் மற்றும் அவர்களைப் போன்ற மறு-வேலைவாய்ப்பு பெற்ற அதிகாரிகளின் ஊதிய விகிதங்களை நிர்ணயம் செய்வதில் உள்ள சமமற்ற மற்றும் தன்னிச்சையான நடவடிக்கை தொடர்பான வாதங்களை ஆராய்வதற்கு முன்பாக, கற்றறிந்த கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலால் வழங்கப்பட்ட மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகளுக்கு அனுமதிக்கப்படும் ஊதியம் மற்றும் படிகளின் காலவரிசை விவரங்கள் இங்கு முன்னிலைப் படுத்தப்படுகின்றன. இது ஊதிய விகிதங்களை வழங்குவதில் மனுதாரர்கள் எவ்வாறு நடத்தப் படுகிறார்கள் என்பதைப் பிரதிபலிக்கும்.

(i) 16.01.2012 தேதியிட்ட உத்தரவின்படி, நீதிபதி ஈ. பத்மநாபன் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஊதிய விகிதங்கள் அவர்களுக்குச் செயல்படுத்தப்பட்டன. அந்த ஊதிய விகிதங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பதவி | பத்மநாபன் ஆணையத்திற்கு முன் அனுமதிக்கப்பட்ட ஊதிய விகிதம் | பத்ம நாபன் ஆணையத்தின் பரிந்துரைகளின்படி திருத்தப்பட்ட ஊதிய விகிதம் -01.01.2006 முதல் |
|---|---|---|---|
| 1. | மாவட்ட நீதிபதி (நுழைவு நிலை) | ரூ. 16,750-400 -19250-450 -20500 | ரூ. 51,550-1230-58,930-1380 -63,070 |
| 2. | மாவட்ட நீதிபதி (தேர்வு நிலை) | ரூ.18,750-400 -19150-450-21850 -500-22,850 | ரூ. 57,700-1230 -58,930-1380 -67,210-1540 -70,290 |
| 3. | மாவட்ட நீதிபதி (சிறப்பு கால முறை ஊதியம்) | ரூ. 22,850-500 -24,850 | ரூ. 70,290-1540 -76,450 |

(ii) மத்திய அரசு ஊழியர்களுக்குப் பொருந்தக் கூடிய அகவிலைப்படி மற்றும் வீட்டு வாடகைப் படி ஆகியவை உரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்டன. பயணப்படி வழங்கப் பட்டதுடன், மத்திய அரசு சுகாதார திட்ட விதிகளின் கீழ் மருத்துவ வசதிகளும் நீட்டிக்கப் பட்டன. போக்குவரத்துப்படி நீதித்துறை அதிகாரிகளுக்கு அனுமதிக்கப்படவில்லை என்பதால், அது மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகளுக்கும் வழங்கப்படவில்லை.

(iii) 06.04.2015 தேதியிட்ட அறிவிப்பின் மூலம், தொழிலாளர் நீதிமன்றம், தொழில் தீர்ப்பாயம் மற்றும் தேசியத் தீர்ப்பாயத்தின் தலைமை அதிகாரிகள் (சம்பளம், படிகள் மற்றும் பிற சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்) விதிகள், 2015-ஐ மத்திய அரசு உருவாக்கியது. மேற்படி விதிகளின் விதி 4(2)-இன் கீழ், தலைமை அதிகாரியின் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. சமமான ஊதியத்தைப் பெறும் மத்திய அரசு ஊழியர்

களுக்குப் பொருந்தும் அதேமுறையில் அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, பயணப்படி மற்றும் மருத்துவச் சலுகைகள் ஆகியவை அனுமதிக்கப்பட்டன.

(iv) நிதிச் சட்டம், 2017 இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, தீர்ப்பாயம், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் பிற அதிகாரிகள் (உறுப்பினர் களின் தகுதிகள், அனுபவம் மற்றும் பிற சேவை நிபந்தனைகள்) விதிகள், 2017-ஐ அறிவித்து 01.06.2017 அன்று அறிவிப்பாணை வெளியிடப் பட்டது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட தொழில் தீர்ப்பாயத்தின் தலைமை அதிகாரிக்கு, 7-வது ஊதியக் குழுவின் நிலை 14-க்கு இணையான ரூ.1,44,200-2,18,200 சம்பளமாக வழங்கப் பட்டது.

(v) அதன்பிறகு, 12.02.2020 தேதியிட்ட அறிவிப்பின் மூலம், தீர்ப்பாயம், மேல்முறை யீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் பிற அதிகாரிகள் (உறுப்பினர்களின் தகுதிகள், அனுபவம் மற்றும் பிற சேவை நிபந்தனைகள்) விதிகள், 2020 உருவாக்கப்பட்டன. இது 2017-ஆம் ஆண்டின் விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட அதே ஊதிய விகிதங்களையே தலைமை அதிகாரிகளுக்கும் பரிந்துரைத்தது.

(vi) தீர்ப்பாயச் சீர்திருத்தங்கள் சட்டம், 2021 இயற்றப்பட்ட பிறகு, 15.09.2021 தேதியிட்ட அறிவிப்பாணை வெளியிடப்பட்டது, அதில் தீர்ப்பாய (சேவை நிபந்தனைகள்) விதிகள், 2021 எனப்படும் விதிகள் அறிவிக்கப்பட்டன. மேற்படி விதிகளின் விதி 10(3)-இன்படி, மத்திய அரசால் அமைக்கப்பட்ட தொழில் தீர்ப்பாயத்தின் தலைமை அதிகாரிக்கு ரூ.1,44,200 – 2,18,200 என்ற ஊதிய நிலையில் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என வழிவகை செய்யப் பட்டது.

(vii) மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகளுக்கு, அதே அளவிலான ஊதியத்தைப் பெறும் குரூப் 'ஏ' பதவியில் பணி யாற்றும் இந்திய அரசு அதிகாரிக்கு அனுமதிக்கப் படும் படிகள் மற்றும் சலுகைகளைப் பெறவும் உரிமை வழங்கப்பட்டது.

5.1 சுருக்கமாகச் சொல்வதானால், மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களில் தலைமை அதிகாரி பதவியை வகிக்கும் மனுதாரர்களின் வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகளுக்கான ஊதிய விகிதங்களை நிர்ணயிக்கவும் திருத்தியமைக்கவும் அவ்வப் போது சட்டப்பூர்வ விதிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

5.2 மனுதாரர்களின் ஒட்டுமொத்த வாதமும் என்னவென்றால், அரசியலமைப்புச் சட்டத்தின் 323ஆ கூறுடன் இணைத்துப் படிக்கப்படும் 247-வது கூறின் பொருளின்படி தீர்ப்பாயங் களாக விளங்கும் மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகளாக உள்ள தங்களை, மாவட்ட நீதித்துறை தொகுப்புடன் இணைத்து, மாவட்ட நீதித்துறைக்குப் பொருந்தக்கூடிய ஊதிய விகிதங்களை வழங்கி, 6-வது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்களை அவர்களுக்குத் தவறாக மறுத்துவிட்டனர் என்பதேயாகும்.

5.3. இந்த நிலையில், தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை அமைப்பது தொடர்பான தொழில்துறை தகராறுகள் சட்டம், 1947-இன் தொடர்புடைய விதிகளைக் கவனிக்கையில், இச்சட்டத்தின் பிரிவு 7 தொழிலாளர் நீதிமன்றங்கள் பற்றிக் கூறுகிறது. அதன்படி, இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த வொரு விஷயம் தொடர்பான தொழில்துறை தகராறுகளையும் விசாரித்துத் தீர்ப்பளிப்பதற்காகவும், இச்சட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் பிற பணிகளைச் செய்வதற்காகவும், தகுந்த அரசாங்கம் அதிகாரப் பூர்வ அரசிதழில் அறிவிப்பு வெளியிடுவதன் மூலம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர் நீதிமன்றங்களை அமைக்கலாம். உயர்நீதிமன்ற நீதிபதியாக இருப்பவர் அல்லது இருந்தவர் அல்லது மாவட்ட நீதிபதியாக அல்லது கூடுதல் மாவட்ட நீதிபதியாக மூன்று

ஆண்டுகளுக்குக் குறையாத காலம் பணி யாற்றிய ஒருவர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்படத் தகுதி யுடையவர் ஆவர். இந்தியாவில் ஏழு ஆண்டு களுக்குக் குறையாமல் ஏதேனும் நீதித்துறை பதவியை வகித்தவர், அல்லது மாகாணச் சட்டம் அல்லது மாநிலச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தொழிலாளர் நீதிமன்றத்தில் ஐந்து ஆண்டு களுக்குக் குறையாமல் தலைமை அதிகாரியாக இருந்தவரும் இதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.

5.3.1 தொ.தா.சட்டத்தின் பிரிவு 7அ, சட்டத்தின் இரண்டாவது அட்டவணை அல்லது மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள எந்தவொரு விஷயம் தொடர்பான தொழில்துறை தகராறுகளையும் விசாரித்துத் தீர்ப்பளிக்கும் நோக்கத்திற்காகத் தொழில் தீர்ப்பாயங்களை அமைப்பது பற்றிக் கூறுகிறது. உயர்நீதிமன்ற நீதிபதியாக இருப்பவர் அல்லது இருந்தவர் அல்லது மாவட்ட நீதிபதியாக அல்லது கூடுதல் மாவட்ட நீதிபதியாக மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத காலம் பணி யாற்றியவர்கள் ஆகியோரில் ஒருவரைத் தகுந்த அரசாங்கம் தலைமை அதிகாரியாக நியமிக்கலாம்.

5.3.2 இச்சட்டத்தின் 7B பிரிவு தேசியத் தீர்ப்பாயங்களை அமைப்பது பற்றிக் கூறுகிறது. மத்திய அரசாங்கத்தின் கருத்தின்படி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளை உள்ள டக்கிய அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் அமைந்துள்ள தொழில்துறை நிறுவனங்கள் ஆர்வம் கொண்டுள்ள அல்லது அத்தகைய தகராறுகளால் பாதிக்கப்படுகின்ற தன்மையுடைய தொழில்துறை தகராறுகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பதற்காக மத்திய அரசால் ஒரு தேசியத் தீர்ப்பாயம் அமைக்கப்படலாம். தேசியத் தீர்ப்பாயத்தின் தலைமை அதிகாரி மத்திய அரசால் நியமிக்கப்படுகிறார். தலைமை அதிகாரியாக நியமிக்கப்படுபவர் உயர்நீதிமன்றத்தின் தற்போதைய அல்லது முன்னாள் நீதிபதியாக இருக்க வேண்டும். மேலும், தேசியத் தீர்ப்பாயத்தின் நடவடிக்கைகளில் அதற்கு ஆலோசனை வழங்க மத்திய அரசு மேலும் இருவரை மதிப்பீட்டாளர் களாக நியமிக்கலாம்.

5.4. மனுதாரர்கள் மற்றும் அவர்களைப் போன்ற நிலையில் உள்ள நபர்களின் ஊதிய நிர்ணயம் மற்றும் ஊதிய அமைப்பின் வரலாற்றைக் காணும்போது, எதிர்மனுதாரர் களால் எதிர் பிரமாணப் பத்திரத்துடன் தாக்கல் செய்யப்பட்ட இந்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் 28.09.2005 தேதியிட்ட கடிதமானது, தொ.தா. சட்டத்தின் (தொழில்துறை தகராறுகள் சட்டம்) 7A பிரிவின் கீழ் மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களில் நியமிக்கப் பட்ட தலைமை அதிகாரிகளின் ஊதிய விகிதங்கள், முதல் தேசிய நீதித்துறை ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டதைக் காட்டுகிறது. மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களில் உள்ள தலைமை அதிகாரிகளுக்கு 01.07.1996 முதல் மாவட்ட நீதிபதிகளுக்குப் பொருந்தக்கூடிய திருத்தப்பட்ட ஊதிய விகிதங்கள் வழங்கப்பட்டன. அக்கால கட்டத்தில் அவை பின்வருமாறு நிர்ண யிக்கப்பட்டன:

- (i) மாவட்ட நீதிபதி (நுழைவு நிலை) – ரூ. 16,750–400–19,150–450–20,500/-
- (ii) மாவட்ட நீதிபதி (தேர்வு நிலை) – ரூ.18,750–400–19,150–450–21,850–500–22,850/-
- (iii) மாவட்ட நீதிபதி (சிறப்பு கால முறை ஊதியம்) – ரூ. 22,850–500–24,850/-

5.4.1 மேற்கூறிய கடிதத்தின் பத்தி 5–ல், ஓய்வுபெற்ற நீதித்துறை அதிகாரிகளைப் பொறுத்தவரை, மறு–வேலைவாய்ப்பு அடிப்படை யில் மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களில் தலைமை அதிகாரிகளாகப் பணியில் சேரும்போது, பணியில் சேரும் தேதி முதல் நடைமுறையில் உள்ள விதிகளின்படி திருத்தப்பட்ட ஊதிய

விகிதங்களில் அவர்களின் மொத்த ஓய்வூதியம் மற்றும் பிற பணி ஓய்வுச் சலுகைகளுக்கு இணையான ஓய்வூதியத்தைக் கணக்கில் கொண்டு ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என வழிவகை செய்யப்பட்டது. மேலும், பதில் பிரமாணப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட இந்திய அரசின் பணியாளர், பொதுக் குறைகள் மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின் (பணியாளர் மற்றும் பயிற்சித் துறை) 05.04.2010 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணை நகலானது, பணி ஓய்வு பெற்ற பின்னர் அரசுப் பணியில் மீண்டும் அமர்த்தப்பட்ட மற்றும் சிவில் மதிப்பீடு களில் ஊதியம் பெறுபவர்களுக்கு மத்திய குடிமைப் பணிகள் (திருத்தப்பட்ட ஊதிய) விதிகள், 2008-ஐப் பயன்படுத்துவது தொடர்பான விஷயத்தைக் கையாள்கிறது.

5.4.2 மத்திய அரசில் மறு-வேலைவாய்ப்பு பெற்ற ஓய்வுபெற்ற பணியாளர்கள் அல்லது அதிகாரிகளின் ஊதியத்தை நிர்ணயம் செய்வது தொடர்பான பிரச்சினை, செலவினத் துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசில் மறு-வேலைவாய்ப்பு பெறும் ஓய்வூதியதாரர்களின் ஊதிய நிர்ணயம், பணியாளர் நல அமைச்ச கத்தால் 31.07.1986 அன்று வெளியிடப்பட்ட மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட மத்திய குடிமைப் பணிகள் (மறு-வேலை வாய்ப்பு பெற்ற ஓய்வூதியதாரர்களின் ஊதிய நிர்ணயம்) ஆணைகள், 1986-இன்படி மேற்கொள்ளப் படும் எனத் தெளிவுபடுத்தப்பட்டது.

5.4.3 திருத்தப்பட்ட விதிகள், மறு-வேலை வாய்ப்பு பெற்ற நபர்களுக்கான ஊதிய விகிதம்/ ஊதிய அமைப்பைப் பெறுவதற்கான நடை முறை மற்றும் சிறப்புத் திட்டத்தைக் குறிப்பிட்டன. அந்த விதிகளின் சுருக்கத்தைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்:

(அ) மறு-வேலைவாய்ப்பு பெறும் ஓய்வூதிய தாரர்கள் தாங்கள் எந்தப் பதவியில் மீண்டும் பணியமர்த்தப்படுகிறார்களோ, அந்தப் பதவிக் காக நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதம்/ஊதிய அமைப்பில் மட்டுமே ஊதியம் பெற அனுமதிக்கப் படுவார்கள். பணி ஓய்வுக்கு முன்னர் அவர்கள் வகித்த பதவிக்கான ஊதிய விகிதங்களுக்கு/ ஊதிய அமைப்புக்கு எவ்விதப் பாதுகாப்பும் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) ஓய்வூதியம் முழுமையாகக் கணக்கில் கொள்ளப்படாத அனைத்து நேர்வுகளிலும், மறு-வேலைவாய்ப்புக்கான தொடக்க ஊதிய மானது, மத்திய குடிமைப் பணிகள் (திருத்தப் பட்ட ஊதிய) விதிகள், 2008-இன் முதல் அட்டவணையின் பகுதி அ, பிரிவு II-இல் அறிவிக்கப் பட்டுள்ளபடி, 1.1.2006 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ நியமிக்கப்பட்ட நேரடி நியமனதாரர்களுக்குப் பொருந்தக்கூடிய வகை யில், மறு-வேலைவாய்ப்புப் பதவிக்கான திருத்தப்பட்ட ஊதிய அமைப்பில் உள்ள நுழைவு ஊதியத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(இ) ஊதிய நிர்ணயத்திற்காக முழு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியச் சலுகைகள் முழுமையாகக் கணக்கில் கொள்ளாமல் விடப்படாத நேர்வு களில், மறு-வேலைவாய்ப்புக்கான தொடக்க அடிப்படை ஊதியமானது, ஓய்வு பெறுவதற்கு முன்னர் கடைசியாகப் பெற்ற அடிப்படை ஊதியத்தின் அதே நிலையில் நிர்ணயிக்கப்பட வேண்டும். இருப்பினும், அவருக்கு மறு-வேலை வாய்ப்புப் பதவிக்கான தர ஊதியம் வழங்கப்படும்.

(ஈ) அதிகபட்ச அடிப்படை ஊதியமானது, மறு-வேலைவாய்ப்புப் பதவிக்கான தர ஊதியம் மற்றும் ரூ. 67,000 என்ற ஊதியப் பட்டையில் உள்ள ஊதியம் (அதாவது PB-4 ஊதியப் பட்டையின் அதிகபட்ச அளவு) ஆகியவற்றின் கூட்டுத்தொகையைத் தாண்டக்கூடாது. இந்த அனைத்து நேர்வுகளிலும், ஓய்வூதியத்தில் கணக்கில் கொள்ள வேண்டிய பகுதி, அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்திலிருந்து கழிக்கப்படும்.

(உ) 55 வயதை அடைவதற்கு முன்னரே ஓய்வுபெற்று, அதன் பின்னர் மறு-வேலை வாய்ப்பு பெறும் நபர்களைப் பொறுத்தவரை, விதிகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி அவர்

களுக்கான தொடக்க ஊதிய நிர்ணயத்திற்கு, ஓய்வூதியம் (வ.வை.நிதி, பணிக்கொடை மற்றும் பிற வகையான பணி ஓய்வுச் சலுகைகள் உட்பட) கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.

5.4.4 மேலும், மறு–வேலைவாய்ப்பு பெற்ற ஓய்வூதியதாரரின் தொடக்க ஊதியம் நிர்ண யிக்கப்பட்டவுடன், மத்திய குடிமைப் பணிகள் (திருத்தப்பட்ட ஊதிய) விதிகள், 2008–இன் விதி 9 மற்றும் 10–இன்படி வழக்கமான ஊதிய உயர்வுகளைப் பெற அவர்கள் அனுமதிக்கப் படுவார்கள் எனவும் கருதப்பட்டது. திருத்தப்பட்ட ஊதிய அமைப்பில் பல்வேறு படிகளைப் பெறுவது, மறு–வேலைவாய்ப்புப் பதவியின் தர ஊதியம் அல்லது அடிப்படை ஊதியத்தின் அடிப் படையில் முறைப்படுத்தப்படும். பாதுகாப்புப் படை அதிகாரிகள்/பணியாளர்கள் சிவில் பதவி களில் மீண்டும் பணியமர்த்தப்படும்போது அவர்களுக்கான ஊதிய நிர்ணயமுறை குறித்துக் குறிப்பிடுகையில், அத்தகைய மறு–வேலை வாய்ப்பு பெற்ற ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியத்தில் ராணுவ சேவை ஊதியம் அடங்கும் என்பதால், சிவில் நிறுவனங்களில் பணிபுரியும்போது அவர் களுக்கு MSP வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது. 01.01.2006–க்கு முன்னர் மறு–வேலைவாய்ப்பு பெற்று, 01.01.2006 அன்று பணியில் இருந்த பணியாளர்கள்/ அதிகாரிகளின் ஊதிய நிர்ணயம் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு, மறு–வேலை வாய்ப்பு பெற்ற நபர்களுக்கான ஊதிய விகிதங்கள் மற்றும் அவற்றின் நிர்ணயம் ஒரு சிறப்புத் திட்டமாகக் கருதப்படுகிறது.

5.5. மனுதாரர்கள் மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங் களில் தலைமை அதிகாரி பதவியில் மறு–வேலை வாய்ப்பில் உள்ளனர் என்ற உண்மையில் எவ்வித முரண்பாடும் இல்லை. சொல்லப் போனால் அது மனுதாரர்களின் சொந்த வழக்காகவே உள்ளது. மறு–வேலை வாய்ப்புப் பதவியில் பணிபுரியும்போதே, அவர்கள் தங்களுக்கு 6–வது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்களை வழங்கக் கோருகின்றனர். இதிலி ருந்து என்ன தெளிவாகிறது என்றால், மனுதாரர்களைப் போன்ற மறு–வேலைவாய்ப்பு பெற்ற அதிகாரிகளின் வகுப்பினருக்குக் கிடைக்கும் ஊதிய விகிதங்களின் நிர்ணயம் மற்றும் ஊதிய அமைப்பின் முறை ஆகியவை மத்திய குடிமைப் பணிகள் (மறு–வேலை வாய்ப்பு பெற்ற ஓய்வூதியதாரர்களின் ஊதிய நிர்ணயம்) ஆணைகள், 1986–ஆல் நிர்வகிக்கப் படுகின்றன. வேறு விதமாகக் கூறினால், மறு–வேலைவாய்ப்பு பெற்று தங்களின் ஊதிய நிர்ணயத்திற்காக வேறுபட்ட சட்டப்பூர்வ ஆணை களால் நிர்வகிக்கப்படும் மனுதாரர்கள், தங்களுக்கு 6–வது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும், ஊதிய விகிதங்களை வழங்குவதில் தங்களை மாவட்ட நீதித்துறைக்கு இணையாக வைக்கக் கூடாது என்றும் வாதிடுகின்றனர்.

5.6. ஊதிய நிர்ணயம் என்பது ஒரு நிர்வாகச் செயல்பாடு என்பது நன்கு நிலைநாட்டப்பட்ட ஒன்றாகும். ‘உத்தரப் பிரதேச மாநிலம் மற்றும் பிறர் –எதிர்– ஜே.பி. சௌராசியா மற்றும் பிறர்’ என்ற வழக்கில், பிரமாணப் பத்திரங்கள் மற்றும் வாதங்களின் அடிப்படையில், ஊதிய விகிதங் களில் உள்ள வேறுபாடுகளின் நியாயத் தன்மையை மதிப்பிடுவதற்கும் ஒப்பிடுவதற்கும் நீதிமன்றங்கள் ஏற்றவை அல்ல என்றும், அத்தகைய விஷயங்களை நிர்வாகத்துறை யிடமே விட்டுவிடுவது சிறந்தது என்றும் நீதிமன்றம் கருதியது. தவறான நோக்கம் இருப்பதை நிரூபித்தால் ஒழிய, வல்லுநர் குழுக்கள் அல்லது ஊதியக் குழுக்களால் செய்யப் படும் ஊதிய விகிதங்களின் நிர்ணயத்தை நீதிமன்றம் மதிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

5.6.1 ‘இந்திய ஒன்றியம் –எதிர்– தினேஷன் கே.கே.’ என்ற வழக்கில், ஊதிய அமைப்பு தொடர்பான நீதிப் புனராய்வுப் பணியானது, நீதிப் புனராய்வின் வரம்பிலிருந்து முற்றிலும் விலக்கப்படவில்லை என்றாலும், வெளிப்படை யான முரண்பாடு இருந்தால் மட்டுமே நீதிமன்றங்கள் அதனை ஆராயலாம் என்று இந்த நீதிமன்றம் கூறியது. அந்த வழக்கில்,

ஊதியக் குழுவின் அறிக்கையிலேயே வெளிப் படையான வேறுபாடும் முரண்பாடும் இருப்பதை மத்திய அரசு நீதிமன்றத்தின் முன் ஒப்புக் கொண்டதன் அடிப்படையில், சம உரிமைக்கான கோரிக்கை நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டது.

5.6.2 இந்திய ஒன்றியம் –எதிர்– இந்திய கடற்படை சிவிலியன் வடிவமைப்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் மற்றொருவர்' என்ற வழக்கில், கடற்படையில் உள்ள இளநிலை வடிவமைப்பு அதிகாரிகள் மற்றும் சிவிலியன் தொழில்நுட்ப அதிகாரிகள் ஆகியோரை நிர்வகிக்கும் ஆள்சேர்ப்பு விதிகள் உள்ளிட்டவை வெவ்வேறாக இருந்த போதிலும், இளநிலை வடிவமைப்பு அதிகாரி களின் பதவியை சிவிலியன் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு இணையாகக் கருதி, அவர் களுக்குச் சமமான ஊதிய விகிதங்களை நிர்ணயம் செய்த தீர்ப்பாயத்தின் முடிவை இந்த நீதிமன்றம் ஏற்க மறுத்தது.

5.6.3 'இந்திய ஒன்றியம் –எதிர்– டி.வி.எல்.என். மல்லிகார்ஜுன ராவ்' என்ற வழக்கில், சட்டத்தின் பின்வரும் நிலைப்பாடு கவனிக்கப்பட்டது:

'பதவிகளை வகைப்படுத்துவதும், ஊதிய அமைப்பைத் தீர்மானிப்பதும் நிர்வாகத்துறை யின் பிரத்யேக அதிகார வரம்பிற்குள் வருகிறது. ஒரு குறிப்பிட்ட பணியில் குறிப்பிட்ட ஊதிய அமைப்பு மற்றும் தரத்தை நிர்ணயிப்பதில் நிர்வாகத்துறை கொண்டுள்ள அறிவுத்திறனை மேல்முறையீட்டில் ஆராயும் அதிகாரம் தீர்ப்பாயத்திற்கு இல்லை. ஒரு குறிப்பிட்ட பணி யில் ஒன்றுக்கு மேற்பட்ட தரங்கள் இருக்கலாம்.' (பத்தி 26).

6. அரசியலமைப்புச் சட்டத்தின் 14–வது கூறு வர்க்க ரீதியான சட்டமியற்றலைத் தடை செய்கிறது, ஆனால் சட்டமியற்றும் நோக்கங் களுக்காக நியாயமான வகைப்பாட்டை அது தடை செய்யவில்லை என்பது நன்கு நிலை நாட்டப்பட்ட ஒன்றாகும். இந்த வழக்கில் ஊதிய விகிதங்களைச் செயல்படுத்துவதற்காக உருவாக்கப் பட்ட வகைப்பாடானது, தர்க்கரீதியான மற்றும் தெளிவான வேறுபாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது; இது ஒரு குழுவாக இணைக்கப் பட்டவர்களை அக்குழுவில் இல்லாதவர்களிட மிருந்து வேறுபடுத்துகிறது. ஊதிய அமைப்பு மற்றும் ஊதிய நிர்ணயத்தைப் பயன்படுத்து வதற்காக மறு–வேலைவாய்ப்பு பெற்ற நபர் களைத் தனியாக வகைப்படுத்துவது, அரசிய லமைப்புச் சட்டத்தின் 16–வது கூறின் கீழ் உள்ள கொள்கைகளுடன் இணைத்துப் படிக்கப்படும் சமத்துவ விதியைச் செயல்படுத்துவதற்காக வகுக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் சோதனை களைத் தெளிவாகப் பூர்த்தி செய்கிறது.

6.1 'சரண்ஜித் லால் சௌத்ரி –எதிர்– இந்திய ஒன்றியம்' என்ற வழக்கில், சட்டபூர்வமான நோக்கங்களுக்காக நபர்களை வகைப்படுத்தும் அதிகாரத்தை அரசிடமிருந்து 14–வது கூறு பறிக்கவில்லை என்று கவனிக்கப்பட்டது. நோக்கம் தர்க்கரீதியானதாகவும் சட்டபூர்வமான தாகவும் இருந்தால், அத்தகைய வகைப்பாடு ஏதோ ஒரு வடிவத்தில் சமத்துவமின்மையை உருவாக்கினாலும், அது 14–வது கூறினை மீறுவதாக அமையாது. சமத்துவக் கொள்கை என்பது, தங்களின் இயல்பு, அடைவு அல்லது சூழ்நிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரே நிலையில் இல்லாத அனைத்து நபர் களுக்கும் ஒவ்வொரு சட்டமும் உலகளாவிய முறையில் பொருந்த வேண்டும் என்பதல்ல. வகுப்புகள் வெவ்வேறாக இருந்து, அவை செல்லுபடியாகும் வகையில் உருவாக்கப் பட்டிருந்தால், அவர்களுக்குத் தனித்தனி அணுகு முறை தேவைப்படும் மாறுபட்ட காரணிகள் பொருந்தும்.

6.2 மனுதாரர்களைப் போன்ற மறு–வேலை வாய்ப்பு பெற்ற அதிகாரிகள்/நபர்கள், அரசாங்கப் பணியில் உள்ள வழக்கமான அதிகாரிகளி லிருந்து கணிசமான வேறுபாட்டுடன் நிற்கின்றனர். பிற வகுப்புகளுக்கு இணையாகவும், அதே நிலையிலும் இல்லாத ஊதிய விகிதங்களைச் செயல்படுத்துவதற்காக, மறு–வேலைவாய்ப்பு பெற்ற வகுப்பினரை நியாயமான மற்றும் தர்க்க ரீதியான முறையில் தனியாக வகைப்படுத்த

முடியும். மறு–வேலைவாய்ப்பு பெற்றவுடன், அந்த அதிகாரிகள்/நபர்கள் அரசாங்கப் பணியில் உள்ள வழக்கமான அதிகாரிகளின் வகுப்புடன் ஒப்பிடும்போது ஒருபடித்தானவர்களாக இருப்பதில்லை.

6.3. மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகள் மாவட்ட நீதித்துறையில் உள்ள அதிகாரிகளுடன் தவறாக இணையாகக் கருதப்பட்டுள்ளனர் என்றும், இருவருக்கும் ஒரே ஊதிய விகிதங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படும் வாதத்திற்கு எவ்வித அடிப்படையும் இல்லை. மனுதாரர்களைப் போன்ற நபர்கள் தலைமை அதிகாரிகளாக நியமிக்கப்படும் தொழில் தீர்ப்பாயங்கள் அல்லது தொழிலாளர் நீதிமன்றங்கள் மாநிலத்திற்குள்ளேயே நிறுவப்படுகின்றன; மேலும் மும்பை மற்றும் கல்கத்தாவில் செயல்படும் தேசியத் தீர்ப்பாயங்களின் தலைமை அதிகாரிகளைத் தவிர, அத்தகைய தலைமை அதிகாரிகளை மாவட்ட நீதித்துறைக்கு இணையாகக் கருதுவது நியாயமானதே தவிர இதில் எவ்வித தன்னிச்சையான தன்மையும் இல்லை.

6.4. ஷெட்டி கமிஷன் போன்ற ஆணையங்களாலும், நீதிபதி ஈ.பத்மநாபன் குழுவின் பரிந்துரைகளாலும் இந்தச் சமப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது, இதுவே மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களின் தலைமை அதிகாரிகளுக்கு மாவட்ட நீதித்துறைக்கு இணையான ஊதிய விகிதத்தை நீட்டிப்பதற்கான அடிப்படையாகும். விவரங்களுடன் கூடிய மற்றும் அந்த விஷயத்தில் நிபுணத்துவம் பெற்ற வல்லுநர் குழுவால் தீர்க்கமாக எடுக்கப்பட்ட முடிவுக்கு முரணாக, வேறுபட்ட பார்வையைக் கையாள்வதிலிருந்து நீதிமன்றங்கள் விலகியிருக்க வேண்டும் என்பது ஒரு அடிப்படையான கொள்கையாகும்.

6.5 பதவிகளை வகைப்படுத்துதல் மற்றும் ஊதிய விகிதத்தை நிர்ணயம் செய்தல் தொடர்பான விஷயங்களில் நீதிப் புனராய்வு அதிகாரம் மிகவும் வரம்பிற்குட்பட்டது என்பது மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டும். ஏனெனில் பதவிகள் மற்றும் சம்பளங்களைச் சமப்படுத்துவது ஒரு சிக்கலான விஷயமாகும். இதனை ஒரு வல்லுநர் குழுவிடமே விட்டுவிடுவது சிறந்தது. இது, அந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்ற குழுக்களின் உதவியுடன் நிர்வாகத்துறையால் பயன்படுத்தப்படும் அதிகார வரம்பாகும்.

6.6 மேலே சிறப்பித்துக் காட்டப்பட்டுள்ளபடி, மனுதாரர்களின் ஊதிய அமைப்பு வடிவமைக்கப்பட்டு அவர்களுக்கான ஊதிய விகிதங்கள் வல்லுநர்களின் பரிந்துரைகளின்படியே வழங்கப்பட்டுள்ளன என்பது மட்டுமின்றி, ஊதிய விகிதங்கள் மற்றும் ஊதிய அமைப்புகளின் நோக்கத்திற்காக ஒருபுறம் பணி ஓய்வு வயதை எட்டிய பிறகு மறு–வேலைவாய்ப்பு அடிப்படையில் பணியமர்த்தப்படும் அரசு அதிகாரிகளை மாவட்ட நீதிபதிகளுடன் இணைத்து வகைப்படுத்துவதும், மறுபுறம் வழக்கமான வேலைவாய்ப்பில் உள்ள அரசு அதிகாரிகளை வகைப்படுத்துவதும் ஒரு நியாயமான வகைப்பாடே ஆகும்.

6.7. பணி ஓய்வுக்குப் பிறகு மீண்டும் மறு–வேலைவாய்ப்பு பெறும் அதிகாரிகள்/நபர்கள் ஒரு தனி வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவர். தங்களுக்கு 6–வது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்கள் கிடைக்க வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையை, அடிப்படை உரிமைகளின் அடிப்படையிலோ அல்லது வேறு எந்தக் காரணங்களின் அடிப்படையிலோ வலியுறுத்த எவ்வித ஆதாரமும் இல்லை. அவர்களை, வழக்கமாகப் பணிபுரிபவர்களிடமிருந்து தனியாகப் பிரித்து, மாவட்ட நீதித்துறைக்கு இணையாகக் கருதுவது, அரசியலமைப்புச் சட்டத்தின் 14–வது கூறின் கோட்பாடுகளையோ அல்லது 16–வது கூறின் தேவைகளையோ மீறுவதாகக் கூற முடியாது.

7. மேற்கூறிய அனைத்துக் காரணங்களின் அடிப்படையில், மனுதாரர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்க இயலாது. இந்த மனு எவ்வித முகாந்திரமும் அற்றது. எனவே இது தள்ளுபடி செய்யப்படுகிறது.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# சொத்து பற்றுகையும் சட்ட நடைமுறையும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி பி.பி.பாலாஜி**
**மே.வ.எண் 189/2025, உ.ப.ம.எண் 4215/2025**
**2026 செ.உ.ம.1323**
**30.3.2026**
**2026 (3) CTC 423**

**வி.எம்.தமிழ்ச்செல்வன் ...மேல்முறையீட்டாளர்**
**–எதிர்–**
**கருணாலயசாமி மேடம் நந்தவனம் மற்றும் பிறர் ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

ஆர். தியாகராஜன் மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

எஸ்.ரவிச்சந்திரன் எதிர்வழக்கீட்டாளர் 1இன் கூடுதல் அரசு வழக்குரைஞர். எதிர்வழக்கீட்டாளர் எண் 2க்காக எவரும் முன்னிலையாகவில்லை.

மே.வ. அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகையின்றி. ப.ம. முடிக்கப்பட்டது.

கோரிக்கை: மு.வ.எண் 622/2010, 28.08.2024 தேதியிடப்பட்டது.

IIஆம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (FACAT) கோப்பில்திருப்பூரில் உள்ளது. இதன் நி.வி.எண் 1/2023 கா.ம.எண் 90/2019 தள்ளுபடி செய்யப்பட்டது. இதில் வி.தொ.ச.இன் கட்டளை 4 விதி 1 மற்றும் பிரிவு 96இன்படி இவற்றின் ஆணை மற்றும் எதிர்க்கப்பட்ட ஆணையை தள்ளுபடி செய்யக் கோரி மேல்முறையீடு முன்னிடப்படுகிறது.

21.1.2026க்கு தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டு, 30.3.2026 அன்று வெளியிடப்பட்டது.

## தீர்ப்பு

1. வாதி தீர்ப்பாணை வைத்திருப்பவர் மேல்முறையீட்டாளர். நி.ம.எண் 1/2023இன் ஆணையினால் குறையுற்றவர், கா.ம.எண் 90/2019 மு.வ.எண்622/2010இல் இருந்தானது. இது திருப்பூரில் IIஆம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியில் கோப்பில் உள்ளது.

2. சுருக்கமான பொருண்மைகள்

மேல்முறையீட்டாளர், வாதியாக மு.வ.எண் 622/2010இனை குறித்தவகை நிறைவேற்றுகைக்காக முன்னிட்டுள்ளார். இதில் 21.11.2007 தேதியிடப்பட்ட விற்பனை உடன்படிக்கையினை செயற்படுத்தக் கோரப் பட்டது மற்றும் பிற இடைவிளைவான உய்திகளை எம்.எஸ்.பாலன் இதில் 2ஆம் எதிர்வாதியிடம் கோரியுள்ளார். 2ஆம் எதிர்வழக்கீட்டாளர் எதிர்வாதியாக இந்த வழக்கை எதிர்த்துள்ளார். இதன் விளைவாக விசாரணை நீதிமன்றம், 7.10.2016 தேதியிடப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மூலமாக வழக்கில் தீர்ப்பாணை பிறப்பித்து குறித்தவகை நிறைவேற்றுகையையும் அளித்துள்ளது. இதில் வாதியை ரூ.48,20,000/–ஐ வைப்பீடு செய்யக் கோரியுள்ளது. இது விற்பனை மறு பயனின் எஞ்சிய தொகையாகும். மேல்முறை யீட்டாளர், கா.ம.எண் 20/2017இனை முன்னிட்டுள்ளார் மற்றும் இந்த நீதிமன்றம் 8.10.2018 தேதியிட்ட விற்பனை ஆவணத்தை நிறைவேற்றியுள்ளது. அது ஆவண எண் 13083/2018 என்று பதிவு செய்துள்ளது. S.R.O. அவினாசியின் கோப்பில் உள்ளது. நிறைவேற்றுதல் மனுகையுடைமையை மீளப் பெறுவதற்காக, வாதி நி.ம.எண் 90/2019இனை முன்னிட்டுள்ளார் மற்றும் சொல்லப்பட்ட கா.ம.நடப்பில் உள்ள போது, மூன்றாம் தரப்பினர்கள் உ.வி.தொ.ச.இன் கட்டளை 21 விதி 38இன்படி விண்ணப்பத்தினை அளித்துள்ளனர். அத்தகைய 2 விண்ணப்பங்கள் முன்னிடப்பட்டன. ஒன்று சுரேசினால் (நி.வி.எண் 49/2018) மற்றொன்று சண்முகத்தினுடையது. (நி.வி.எண் 53/2018).

சொல்லப்பட்ட இரண்டு விண்ணப்பங்களும், உ.வி.மு.தொ.ச.இன் க.21. விதி 38இன்படி மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியினால் தள்ளுபடி செய்யப்பட்டது. இதேபோன்று பிற கோரிக்கைகள் மூன்றாம் தரப்பினர்களால் செய்யப்பட்டவையும் நிராகரிக்கப்பட்டன. 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் பொருண்மையின்படி, விண்ணப்பம் ஒன்றினை க21, விதி 58 உ.வி.தொ.ச.இன்படி முன்னிட்டுள்ளார். முந்திய கா.ம.எண் 20/2017, இதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும், 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் தன்னுடைய கோரிக்கையினைப் புதுப்பித்து, மேலும் ஒரு விண்ணப்பத்தினை கட்டளை 21 விதி 58 உ.வி.தொ.ச.இன்படி முன்னிட்டுள்ளார். நி.வி.எண் 1/2023இன் கா.ம. கையுடைமை மீளப் பெறுவதற்கானதில் அதாவது கா.ம.எண் 90/2019 சொல்லப்பட்ட நிறைவேற்றுதல் நீதிமன்றம். சொல்லப்பட்ட கா.ம.வினைத் தள்ளுபடி செய்தி உ.வி.தொ.ச.இன் கட்டளை 21, விதி 58இன் விண்ணப்பத்தினை அனுமதித்தது. அதே நேரத்தில் பல்வேறு பதி செய்யப்பட்ட ஆவணங்களை செல்லாததாக்கியது. அதாவது உயில் மற்றும் ஏற்பாட்டு ஆவணங்கள் மற்றும் பகர அதிகார ஆவணத்தை சொல்லப்பட்ட ஆணையினால் குறையுற்ற தீர்ப்பாணை பெற்ற வாதி, மேல்முறையீட்டாளரைச் செய்துள்ளார்.

3. திரு.ஆர்.தியாகராஜன் மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞரும் மற்றும் திரு.எஸ்.ரவிச்சந்திரன், கூடுதல் அரசு வழக்குரைஞரும் 1ஆம் எதிர் வழக்கீட்டாளருக்கானவரும் என்னால் கேட்டறியப் பட்டனர்.

4. திரு.ஆர்.தியாகராஜன், மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் முதலில் வாதிட்டதாவது நிறை வேற்றுதல் மனு கையுடைமை பெறுவதற்காக முன்னிடப்பட்டது. உ.வ.வி.மு.தொ.ச.இன் கட்டளை 21 விதி 58இன்படியான விண்ணப்பம் அந்த அளவில் செல்லத்தக்கதாகாது என்பது முதல் நிலையில் மற்றும் துரதிருஷ்டவசமாக, நிறைவேற்றுதல் நீதிமன்றம், இதனை மேல் நடத்துவது அதாவது இதனை உ.வி.தொ.ச.இன் படியான விண்ணப்பத்தைப் போன்று மற்றும் இதனை தவறான பொருண்மைகளின் துறை யின் அடிப்படையில் இதன்படி தீர்மானிக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகள் புறம் தள்ளப்பட்டன. வழக்கறிஞர் மேலும் கூறியதாவது, 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் நி.ம.எண் 20/2017இல் இதே போன்ற முயற்சி செய்தார் என்பது அதுவும் தள்ளுபடி செய்யப் பட்டது மற்றும் சொல்லப்பட்ட ஆணை அறுதி செய்யப்பட்டது என்பதும், 1ஆம் எதிர் வழக்கீட்டாளர், அந்த பிரச்சினையை மீண்டும் எழுப்புவதில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளார் என்பதும், அதாவது பிந்திய நி.ம. தொடர்பாக. அது கையுடைமையை மீளப்பெறுவதற்காக மட்டுமே முன்னிடப்பட்டது. இந்த நீதிமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட விற்பனை ஆவணப் பற்றிய எதிர்ப்பு எதுவும் இல்லாத நிலையில் இந்த வழக்கறிஞர் வாதிட்டதாவது நிறைவேற்றுதல் நீதிமன்றம் ஒரு தவறான மற்றும் முரண்பட்ட ஆணையை பிறப்பிக்க செயற்படுவதாக கூறப்பட்டது. அவர் மேலும் குறிப்பிட்டதாவது பல்வேறு பணிப்புரைகள் நிறைவேற்றுதல் நீதிமன்றத்தினால் அளிக்கப் பட்டது பற்றி மற்றும் கூறியதாவது. அவை 1ஆம் எதிர்வழக்கீட்டாளரால் முன்னிடப்பட்ட விண்ணப்பத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டதாக கூறப்பட்டது மற்றும் நிறைவேற்றுதல் நீதிமன்றத்திற்கு ஒரு உயிலினை செல்லாதாக்கும் அதிகாரம் இல்லை என்பது. அதாவது நிறைவேற்றப்பட்ட உயிலினை ரத்து செய்வது தொடர்பாக, பிற பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் நீங்கலாக அதாவது ஏற்பாட்டு ஆவணங்கள் மற்றும் பகர அதிகார ஆவணம்.

5. உ.வி.தொ.ச.இன் கட்டளை 21 விதி 58இன் கட்டளை பற்றி எனது கவனத்தை ஈர்ப்பதில், வழக்கறிஞர் பணிந்தளிப்பது இந்த வகைமுறை ஈர்க்கப்படுவது இதில் பற்றுகை செய்யப்படும்போது மட்டுமே என்பது மற்றும் தற்போதைய வழக்கின்படி அல்லது ஏற்கப்பட்ட வாறு, கோரப்பட்ட பற்றுகை எதுவும் இல்லை. இத்தகைய சூழ்நிலைகளில் இந்த விண்ணப்பமே செல்லத்தக்கதல்ல. அவர் இதன்படி கூறுவ தாவது இதில் கூறப்பட்டவாறான கூட்டுச்சதி எதுவும் இல்லை மற்றும் 1ஆம் எதிர் வழக்கீட்டாளர். அதாவது கோயில் சார்பாக எந்த அறக்கட்டளையும் இருப்பதாக அவர் நிரூபிக்கத் தவறியுள்ளார். நிறைவேற்றுதல் நீதிமன்றம்,

இந்த எதிர்ப்பு விண்ணப்பத்தினை அனுமதித்தி ருக்கக் கூடாது. எனவே, இவர் அந்த மேல்முறை யீட்டை அனுமதிக்க கோருகிறார்.

6. திரு.ஆர்.தியாகராஜன் மேலும் பணிந்த ளிப்பதாவது, 1ஆம் எதிர்வழக்கீட்டாளருக்காக முதல்நிலையில் எந்த அறக்கட்டளையும் இல்லை. அதாவது உரிமை கோருவதற்கு இது தொடர்பாக, அவர் என்னை தொடர்புற்ற அளிக்கப்பட்ட காட்சிகளை அளிப்பார். அவர் மேலும் கூறுவ தாவது, ஏற்கப்பட்டவாறு எதிர்வாதி, குறித்தவகை நிறைவேற்றுதலுக்கான வழக்கில், 2ஆம் எதிர் வழக்கீட்டாளர், இதில் சொத்தில் ஏற்கப்பட்ட கையுடைமை கொண்டுள்ளார் மற்றும் இதில் 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் தரப்பில் எந்த சான்றுக்கும் இடமேயில்லாததால் அந்தச் சொத்தின் பேரில், உரிமையே உரித்தமோ கோர முடியாது. மேலும் பணிந்தளிக்கப்படுவதாவது திரு.ஆர்.தங்கராஜன் எந்தப் பதிவேடுகளில் 1ஆம் எதிர்வழக்கீட்டாளரால் முன்னிடப்பட வில்லை. தாவாவில் உள்ள சொத்தில் உரிமை எதுவும் உள்ளதாக மெய்ப்பிப்பதற்கு மேலுமான வாதமாவது.

சந்தேகத்தால் மட்டுமே அல்லது ஐயத்தினை ஏற்பதில் அதாவது சொத்து கோயிலுக்கு சொந்தமானது என்பதால் 1ஆம் எதிர் வழக்கீட்டாளர் கையுடைமையை பெறுவதற்காக முன்னிடப்பட்ட நிறைவேற்றுதல் மனுவினை எதிர்க்க முடியாது. அதுவும் நீதிமன்றத்தினால், நிறைவேற்றப்பட்ட ஒரு விற்பனை ஆவணத்தை யொட்டி பிறப்பிக்கப்பட்ட குறித்தவகை நிறைவேற்றுகைத் தீர்ப்பாணை வழக்கறிஞர், உச்சநீதிமன்ற முடிவை ஆதாரமாகக் கொண்டுள்ளார். எல்.கே.பிரபு, எல்.கிருஷ்ணபிரபு இறப்பு அவர்களது ச.சா.மூலமாக –எதிர்– கே.டி.மாத்யூ தாம்பன் தாமஸ் மற்றும் பிறர், 2026 (1) த.த.வ. 113 (உச்.நீ.) மற்றும் இந்த நீதிமன்றம் மிருதுபாசினி –எதிர்– ஈஸ்வரமூர்த்தி மற்றும் பிறர், சி.எம்.எஸ். எண் 20/2009, 5.8.2011 தேதியிடப்பட்டது.

7. மாறாக, திரு.ரவிச்சந்திரன், கூடுதல் அரசு வழக்குரைஞர், 1ஆம் எதிர்வழக்கீட்டாளருக்கானவர் பணிந்தளிப்பது நிறைவேற்றுதல் நீதிமன்றம், சரியாகவே தரப்பினர்களால் அளிக்கப்பட்ட சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு, சொத்தானது அறக்கட்டளையாக 1ஆம் எதிர்வழக்கீட்டாள ருக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் எந்த வகை பராதீனம் அல்லது வில்லங்கம் அவ்வாறு உற்றடைவதை செய்வது விழலானதாகும் என்று முடிவெடுத்துள்ளது. எனவே அவர் கூறுவதாவது நிறைவேற்றுதல் நீதிமன்றத்தினால், எந்தத் தவறும் இழைக்கப்படவில்லை. அதாவது பல்வேறு ஆவணங்களை தள்ளுபடி செய்து, உ.வி.தொ.ச.இன் கட்டளை 21, விதி 58இன் படியான விண்ணப்பத்திதினை அனுமதிப்பதில், 16.4.1928 தேதியிடப்பட்ட ஏற்பாட்டு ஆவணத்தைக் குறிப்பிட்டுள்ளது மற்றும் அந்தக் கூறினைக் குறிப்பிட்டு சொல்லப்பட்ட சொத்தானது பராதீனம் செய்யப்படவோ, அல்லது வில்லங்கத்திற்கு உட்படுத்தப்படவோ முடியாது மற்றும் அவ்வாறு உள்ளபோது இந்த உயிலின் உள்ளடக்கம் சடயப்ப சுவாமியால் 5.9.1975இல் நிறைவேற்றப் பட்டது. கட்டாயமாக செல்லத்தக்கதல்ல. அந்த சொத்துக்களானது ஏற்கனவே தனித்தனியாக குறிப்பிடப்பட்டு வைக்கப்பட்டது. நந்தவனம் ஏற்படுத்தும் நோக்கத்திற்காக என்று அவர் குறிப்பிடுவதாவது அனைத்து புந்திய பராதீனங் களும் செல்லத்தக்கதல்ல விழலானதாகும் மற்றும் இல்லாதவையே. எனவே நிறைவேற்றுதல் நீதிமன்றம், எந்தக் கோரிக்கையும் வைக்காத போதும், அந்த உயிலினை தள்ளுபடி செய்தது. நீதியின்படியானதே மற்றும் தகுந்த அனைத்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்களும் அவை 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் சார்பாக மேற்குறிப்பு எழுதப்பட்டவை. அதன் முழுமையான மற்றும் உண்மையான செயற்பாட்டைப் பெறும் எனவே அவர் கோருவதாவது மேல்முறையீட்டை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று.

8. இருதரப்பு வழக்கறிஞர்களானதும் முன்னிடப் பட்ட பணிந்தனுப்புதல்களை நான் கவனமாக கருதுகை செய்துள்ளேன்.

9. தரப்பினர்களின் வழக்கறிஞர்கள் என்னால் கேட்டறியப்பட்ட பின்னர் நான் பின்வரும் குறிப்பு களை கருதுகைக்காக வனைகிறேன்.

உ.வி.தொ.ச.இன் க.21 விதி 58இன் படியான விண்ணப்பம் கையுடைமையை

மீளப்பெறுவதற்காக முன்னிடப்பட்ட நிறைவேற்றுதல் மனு செல்லத்தக்கதா?

10. இதில் பூசவில்லை மனுதாரர் 2ஆம் எதிர்வழக்கீட்டாளருக்கு எதிராக ஒரு குறித்தவகை நிறைவேற்றுதல் வழக்கை முன்னிட்டுள்ளார் என்பதில், அவர் தாவாவில் உள்ள சொத்தின் சட்டப்படியான சொந்தக்காரர் என்று உரிமை கோருகிறார். வழக்கானது வாதத்திற்குப் பின்னர் தீர்ப்பாணை பெற்றது மற்றும் அந்த தீர்ப்பாணை அறுதியாக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் அதன் பின்னர் நிறைவேற்றுகை நடவடிக்கை களைத் தொடங்கினார் மற்றும் தீர்ப்பாணையில் உள்ளவரைக் கட்டுகளுக்கு இணங்கிய பின்னர் இந்த நீதிமன்றம் ஒரு விற்பனை ஆவணத்தை மேல்முறையீட்டாளர் சார்பாக நிறைவேற்றியது. ஒரு பதிவு செய்யப்பட்ட முறையாவணம் மூலமாக நிறைவேற்றுதல் மனு முடிவுறுத்தப் பட்டது.

11. 2ஆம் எதிர்வாதியிடமிருந்து, சொத்தின் உடைமையை மீளப் பெறுவதற்காக, மேல் முறையீட்டாளர் நி.ம.எண் 90/2019இனை முன்னிட்டுள்ளார். சொல்லப்பட்ட நிறைவேற்றுதல் மனுவில் பல்வேறு மூன்றாம் தரப்பினர்கள் கோரிக்கை மனுக்களை முன்னிட்டனர். அவை யும் கூட தள்ளுபடி செய்யப்பட்டன. அத்தகை விண்ணப்பம் ஒன்று 1ஆம் எதிர்வழக்கீட்டாள ரால் முன்னிடப்பட்டது. இதில் உ.வி.தொ.ச.இன் கட்டளை 21, விதி 58 செயற்படுத்தல் கோரப் பட்டது. இதில் குறித்துரைக்கப்பட்ட முக்கியமான வாதமாவது திரு.ஆர்.தியாகராஜன் நிறைவேற்றுதல் மனுவில், கையுடைமை மீளப் பெறுவதற்காக முன்னிடப்பட்டது. உ.வி.தொ.ச.இன் கட்டளை 21 விதி 58இன் படியானது. இது செல்லத்தக்க தல்ல. இது தொடர்பாக தற்போதைய முடிவு ஆதாரமாகக்கப்பட்டது. அதாவது உச்சநீதிமன்ற வழக்கின் முடிவு எல்.கே.பிரவு வழக்கில்.

12. இதில் உச்சநீதிமன்றம் உ.வி.தொ.ச.இன் கட்டளை 21, விதி 58இன் வீச்சைப் பற்றிய கலந்தாய்வில் கூறப்பட்டதாவது. கட்டளை 21 விதி 58 விசாரிப்பு தொடர்பான செயற்பாடு சொத்தின் கோரிக்கை தீர்ப்பிற்கு முன்பே பற்றுகை செய்யப்பட்டது தொடர்பானது. உச்ச நீதிமன்றம் மேலும் கூறியதாவது உ.வி.தொ.ச.இன் கட்டளை 21இன் விதி 58 திருத்தப்பட்ட போதிலும் இது விசாரணையின் வீச்சினை விரிவுபடுத்தியுள்ளது. எனினும், விசாரணை முறையே வாதுரையின் அடிப்படையில் அமைதல் வேண்டும் மற்றும் சான்றுகள் பெறப்பட வேண்டும். மேலும் உச்சநீதிமன்றம் கூறியதாவது கோரிக்கை மனு கட்டளை 21 விதி 58 அல்லது கட்டளை 38இன் விதி 38இன் படியானது. இது விரிவாக்கப்பட அல்லது நீட்சி பெறச் செய்ய முடியாது. அதாவது பற்றுகை நடவடிக்கையிலுள்ள மாற்றும் வகையில். அதாவது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 53இன்படியான பொருட்டான விசாரணையாக.

13. இந்த வழக்கு, மிருதுளாயிணி வழக்கில் கூறியதாவது, கட்டளை 21 விதி 58 உ.வி.தொ.ச. செயற்படுத்தப்பட முடியாது. அதாவது சொத்து பற்றுகை செய்யப்பட்டது. ஏற்கனவே விற்கப்பட்டி ருக்கும்போது இந்த இரண்டு வழக்கின் முடிவு களும் தற்போதைய வழக்கின் பொருண்மை களுக்கு நன்றாகவே பொருந்தக் கூடியது.

14. முதலாவதாக, சொத்தில் பற்றுகை எதுவும் இல்லை. அது தற்போதைய வழக்கில், செய்யப்படவோ செயற்படுத்தப்படவோ இல்லை. ஏற்கப்பட்டவாறு எதிர்வழக்கீட்டாளர்களுக்கு இணங்கிய வகையில் எனவே, எனக்கு நிறைவேற்றுதல் நீதிமன்றத்தின் முன்பு, விசாரணை எதனையும் நடத்துவதற்கு இதில் வீச்சு இருப்பதாகத் தெரியவில்லை. அதாவது உ.வி.தொ.ச. சட்டத்தின் கட்டளை 21 விதி 58இன்படி 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் ஒரு தனிப்பட்ட உரிமையினை கோரியிருப்பாரா னாலும், 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் ஒரு தனிப் பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி யுள்ளது. அதன் உரிமையினை முறையாக போடப்பட்ட உரிமையியல் வழக்கின் மூலம் அவரது உரிமைகளை நிரூபித்தல் வேண்டும் மற்றும் உரிய விளம்புகை உய்திகளை கோரி யிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் உ.வி.தொ.ச.இன் கட்டளை 21 விதி 58இனை செயற்படுத்தி யுள்ளது. சரியற்றது மற்றும் மேல்முறை யீட்டாளருக்கு உடைமை உள்ளது. பொருண்மை

யின்படி 2ஆம் எதிர்வழக்கீட்டாளர் உடைமையை கொண்டுள்ளது ஏற்கப்பட்ட ஒன்று மற்றும் 1ஆம் எதிர்வழக்கீட்டாளரிடம் உடைமையும் கூட இல்லை.

15. மேலும், ஏற்கனவே, கலந்தாய்வு செய்யப் பட்டவாறு, நிறைவேற்றுதல் நீதிமன்றம், ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மேல்முறை யீட்டாளர், சார்பான விற்பனை ஆவணம், மற்றும் அதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கும். இதில் எந்த எதிர்ப்பும் சொல்லப்பட்ட விற்பனை ஆவணம் தொடர்பாக இல்லை. இதில் எந்த உரித்தமோ உரிமை மூல பாத்தியதையோ கோரப்படவில்லை. அதாவது மீளப்பெறுவ தற்காக முன்னிடப்பட்ட நிறைவேற்றுதல் மனு தள்ளுபடி செய்யப்படுவது, நீதிமன்றத்தின் தீர்ப்பாணைகள் அடிப்படையில் அதைப்பின் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணம் மேற்சொல்லப்பட்டவற்றின் கருத்தில் தெளிவாக்கப்படுவதாவது உ.வி.தொ.ச.இன் கட்டளை 21 இன் விதி 38 தவறாக புரிந்து கொள்ளப்பட்டது மற்றும் துரதிஷ்டவசமாக, நிறைவேற்றுதல் நீதிமன்றம் 1ஆம் எதிர் வழக்கீட்டாளரின் பகட்டான கோரிக்கையினால், ஏற்பட்டது. அந்தச் சொத்தானது கோயிலின் அறக்கட்டளைச் சொத்து மற்றும் கூறப்பட்ட தாவது விற்பனை உடன்படிக்கை மற்றும் முந்திய நடவடிக்கை செல்லத்தக்கதல்ல என்பது.

16. நிறைவேற்றுதல் நீதிமன்றம், உ.வி.தொ. ச.இன் கட்டளை 21 விதி 58இன்படி கோரப் பட்டவை தொடர்பான விண்ணப்பம் உ.வி.தொ. ச.இன் கட்டளை 21 விதி 58இன்படியான அதிகாரங்களைச் செலுத்தி வழங்கப்பட முடியாது என்பதை கண்டறிதல் வேண்டும். எனினும், துரதிருஷ்டவசமாக, நிறைவேற்றுதல் நீதிமன்றம், பல்வேறு ஆவணங்களை செல்லத் தக்கதல்ல என்று விளம்புகை செய்து நடவடிக்கை எடுத்துள்ளது. வித்தியாசமாக சடயப்பசுவாமியினால் நிறைவேற்றப்பட்ட உயிலும் கூட ரத்து செய்யப்பட்டதாக விளம்பப் பட்டது. எவரும், எந்த நீதிமன்றமும், ஒரு உயிலினை ரத்து செய்வதற்கான அதிகாரத்தை கொண்டிராது. ஒரு உயிலினை எவரும் ரத்து செய்ய இயலாத அதை எழுதியவர் மட்டுமே அதை ரத்து செய்ய இயலும். நீதிமன்றங்கள் உயிலினை உண்மையானதல்ல அல்லது சரியானதல்ல என்று மட்டுமே விளம்புகை செய்ய முடியும். ஆனால் இந்த நீதிமன்றம், உயிலினை ரத்து செய்ததாக விளம்புகை செய்ய முடியாது. இது போன்றே, உய்திகள் தனிப்பட்ட வழக்காக செய்யப்பட்டவை. உ.வி.தொ.ச.இன் கட்டளை 21 விதி 58இன்படி ஏற்கப்பட முடியாது.

17. அந்த நடவடிக்கைகளில் குறிப்பிடுவது தொடர்புற்றதாகும். அதாவது, உ.வி.தொ.ச.இன் பிரிவு 47இன்படியான தீர்ப்பாணை நிறைவேற்றப் படுதல் பற்றிய கேள்வி தொடர்பாக முயற்சி ஒன்று எடுக்கப்படும்போது, நிறைவேற்றுதல் நீதிமன்றம் முந்திய கா.ம.எண் 20/2017 தொடர்பாக முன்னிடப்பட்ட விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்தது. இதில் கா.ம.எண் 90/ 2019 ஒரு புதிய விண்ணப்பத்தினை முன்னிட சுதந்திரம் அளிக்கப்பட்டது. சொல்லப்பட்ட சுதந்திரம், இந்த நீதிமன்றத்தின் முன்பு, மனுதாரரால் எதிர்க்கப்பட்டது. உ.சீ.ம.எண் (NPD) எண் 248/2025. எனினும், சொல்லப்பட்ட உ.சீ.ம. அறுதியாக கேட்கப்படுவதற்காக, எடுத்துக் கொள்ளப்பட்டது. சிறு இந்த நீதிமன்ற கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. தற்போதைய மேல்முறையீடு, ஏற்கனவே முன்னிடப்பட்டது மற்றும் அது நடப்பில் உள்ளது. எனவே, இதில் நிறைவேற்றுதல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு தொடர்பாக, அவரது வாதங்களை எழுப்ப மேல்முறையீட்டாளருக்கு உரிமை வழக்கு, அதாவது தற்போதைய மேல்முறையீடு தொடர்பாக எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணை யினை எதிர்க்கும்.

18. 1ஆம் எதிர்வழக்கீட்டாளரால் கோரப்பட்ட உரிமை தொடர்பாக. அதன் மறுப்புகளை துணிபு களாகக் கொண்டு அவை உ.வி.தொ.ச.இன் கட்டளை 21 விதி 58இன்படி விண்ணப்பம் செல்லத்தக்கதாகக் கருதப்பட்டது. இதில் 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் போதியதுமானதும் மனநிறை வடையக் கூடியதுமான சான்றினை அளிக்கத் தவறியுள்ளார். அதாவது குறித்துரைக்கப்பட்ட கொடை உள்ளது பற்றி அல்லது அந்த நுதல்பொருளை 1ஆம் எதிர்வழக்கீட்டாளருக்குச் சென்றடைதல் பற்றி 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் வழக்கின் தரப்பினராக, இல்லாததாலும் அவர்

தீர்ப்புக் கடனாளியின் மூலம் கோரிக்கை செய்யாததாலும் அவர் பிரிவு 47இன்படியான விண்ணப்பத்தினை செயற்பட செய்ய முடியாது. இதனை அறிந்த இவர், நி.ம.எண் 20/ 2017இன்படி விண்ணப்பத்தினை முன்னிட 1ஆம் எதிர்வழக்கீட்டாளருக்கு ஞானம் பிறந்தது. ஆனால் பிரிவு 47இனைச் செயற்படுத்தாது. தற்போதைய வழக்கு உள்ளது. எனினும் 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் இருத்தும் ஓர் ஆணையை செயற்படுத்தினார். உ.வி.தொ.ச.இன் கட்டளை 21 விதி 58இனை செயற்படுத்தி இதில் சொத்து பற்றுகை செய்வது தொடர்பானது மட்டுமே. இது உரிமை மூல பாத்தியதை தொடர்பானதல்ல.

19. உ.வி.தொ.ச.இன் கட்டளை 21, விதி 58. இங்கு பின்வருமாறு அளிக்கப்படுகிறது. இது எளிதாகச் சுற்றுவதற்கானது.

‘‘58 சொத்துக்கள் பற்றுகை செல்லப்படுவது தொடர்பாக விசாரணைக் கோரிக்கைகள் அல்லது எதிர்ப்புகள் : (1) கோரிக்கை எதுவும் முன்னிடப்படுகிறவிடத்து அல்லது சொத்து எதனையும் பற்றுகை செய்தல் தொடர்பாக, எதிர்ப்பு எதுவும் செய்யப்படுகிறவிடத்து அது ஒரு தீர்ப்பாணை தொடர்பாக நிறைவேற்றுதலின் பற்றுகை செய்கிறவிடத்து அத்தகைய பற்றுகையில் அத்தகைய சொத்து பற்றுகை செய்ய கடப்பாடு இல்லை என்பதாக உள்ளபோது, நீதிமன்றம் அந்தக் கோரிக்கை அல்லது எதிர்ப்பின்பேரில், இந்த வகைமுறைகளுக் கிணங்க விசாரணை நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும். இதில் அடங்கியுள்ள வகைமுறையாவது வரம்புரையாக, அத்தகைய கோரிக்கை அல்லது மறுப்பு எதுவும் ஏற்கப்படுவதலாகாது.

(அ) கோரிக்கை அல்லது எதிர்ப்பு செய்யப்படுவதற்கு முன்பே, சொத்தானது விற்கப்பட்டிருக்கிறவிடத்து அல்லது

(ஆ) கோரிக்கை அல்லது எதிர்ப்பு வேண்டுமென்றே அல்லது சேவை இருக்கிறவிடத்து

(2) அனைத்து கேள்விகளும் பற்றுகை செய்யப்பட்ட சொத்தின் உரிமை, உரிமை மூல ஆவணம் அல்லது உரித்தம் உள்ளடங்கலான கேள்விகள்) ஒரு தரப்பினரின் அல்லது அவர்களது சார்பாளருக்கிடையே இந்த விதியின் படியும் மற்றும் விசாரணைக்கு தொடர்புற்றது மான கோரிக்கை அல்லது எதிர்ப்பு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் மற்றும் இது தனி வழக்கினால் அன்று.

(3) உள்விதி (2)இல் சுட்டப்பட்ட கேள்விகளைத் தீர்மானிப்பதன்பேரில், நீதிமன்றமானது, அத்தகைய தீர்மானத்திற்கிணங்க,

(அ) அந்தக் கோரிக்கையினை அல்லது எதிர்ப்பினை ஏற்று அனுமதித்து அந்தச் சொத்தினை முழுவதுமாக பற்றுகை செய்வதிலிருந்து நீக்கும் அல்லது அது தக்கதெனக் கருதுகிற அளவுக்கு நீக்கும் அல்லது

(ஆ) அந்தக் கோரிக்கையை அல்லது மறுப்பினை அனுமதிக்காது விட்டு விடும் அல்லது

(இ) எவரேனும் ஆள் சார்பான அடைமானம், பொறுப்பு அல்லது வேறு உரித்தம் எதற்கும் உட்பட்டு பற்றுகைவினைத் தொடரும் அல்லது

(ஈ) அது தக்கதெனக் கருதலாகிற, வழக்கின் சூழ்நிலைக்கு ஏற்ப அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கும்.

(4) இந்த விதியின்படி கோரிக்கை அல்லது எதிர்ப்பு எதுவும் விசாரிக்கப்படுகிறவிடத்து அதன் பேரில் செய்யப்படும் ஆணை மேல்முறையீட்டைப் போன்ற அதே வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு செயற்படும் அல்லது வேறு வகையில் இது ஒரு தீர்ப்பாணையாக இருந்தார் போன்று செயற்படும்.

(5) கோரிக்கை அல்லது எதிர்ப்பு எதுவும் இருக்கிறவிடத்து மற்றும் நீதிமன்றமானது, இந்த வகைமுறையின் உள் விதி (1)இன்படி, அதனை ஏற்க மறுக்கிறவிடத்து, அது எந்தத் தரப்பினருக்கு எதிராக, அத்தகைய ஆணை செய்யப்பட்டதோ அவர் ஒரு வழக்கினை முன்னிடலாம். அதன் மூலம் அவரது உரிமையை நிரூபிக்கலாம். அதாவது அவர் அந்த பூசலில் உள்ள கோருகிற உரிமையை மெய்ப்பிக்கலாம். ஆனால் அத்தகைய வழக்கின் முடிவு ஏதேனுமிருப்பின் அதற்கு உட்பட்டு அந்த கோரிக்கையை அல்லது எதிர்ப்பை மறுக்கிற ஆணை அறுதியானதாகும்.

20. உ.வி.மு.தொ.ச.இன் கட்டளை 21 விதி 58 திருத்தம் செய்யப்பட்ட பின்னர், உச்ச நீதிமன்றத்திலும் கூறப்பட்டவாறு, விசாரணை யின் வீச்சு விரிவடைந்துள்ளது. இந்த அடிப்படை தேவையானது. அதாவது இந்த விதியை செயற் படுத்த, அது ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்று வதில் சொத்து பற்றுகை செய்யப்பட்டிருக்கும் போது மட்டுமே செயற்படும். எனவே, சொத்து பற்றுகைக்கான தேவையானது ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றுவது கட்டாய மாக்கப்படும்போது உ.வி.தொ.ச.இன் விதி 58 செயற்படும் மற்றும் அப்போது மட்டுமே சொல்லப்பட்ட உ.வி.தொ.ச.இன் விதி 58இன் உள்ளது. பொருந்தும் இதில் விண்ணப்பத்தில் உள்ள அனைத்து கேள்விகளும் தீர்மானிக்கப் படும். எனவே, நிறைவேற்றுதல் நீதிமன்றம் தெளிவாக தவறாக இதைப் படித்து உ.வி.தொ. ச.இன் கட்டளை 21இன் விதி 58இனை தவறாகப் பயன்படுத்து உய்திகளை வழங்கி யுள்ளது. இது உ.வி.தொ.ச.இன் நோக்கம் மற்றும் வீச்சுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. மேலே சொல்லப்பட்ட காரணங்கள் அனைத்திற்காகவும் மேல்முறையீட்டாளர், வெற்றி பெற உரிமையு டையவர் ஆவார். இந்தக் குறிப்பு மேல்முறை யீட்டாளர் சார்பாக பதிலளிக்கப்படுகிறது.

21. அறுதியாக, மேல்முறையீடு வழக்கு அனுமதிக்கப்பட்டது மற்றும் நி.வி.எண் 1/2023 இடன் ஆணையில் கா.ம.எண் 90/2019 மு.வ. எண் 622/2010, 28.8.2024 தேதியிடப் பட்டது கோப்பில் உள்ளது. (FACAT) திருப்பூர், இது தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்வது, 1ஆம் எதிர்வழக்கீட்டாளரின் வழிக்கு தடையாகாது. அவர் தன்னிச்சையாக அவரது உரிமையை நிலைநாட்டியுள்ளார். அதாவது அவரது உரிமை மூல பாத்தியதை மற்றும் உரித்தம் தொடர்பாக உட்படுத்தப்பட்ட சொத்து, இவற்றை ஒரு தனி உரிமை வழக்கினை முன்னிட்டு சட்டத்தினால் அறியப்பட்ட முறையில் உரிமை பெற வேண்டும். இதுவும் காலவரம்பு சட்டத்திற்கு உட்பட்டு அது செயற்படுமானால் இதில் செலவுத் தொகை தொடர்பாக எந்த ஆணையும் இல்லை. தொடர்பு டைய உரிமையியல் பல்வகை மனு முடிக்கப் பட்டது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## வழக்குரைஞர்களுக்கான தகுதித் தேர்வுக்கு கூடுதல் மையம் அமைக்க வலியுறுத்தல்

சட்டப் படிப்பை முடித்து பார் கவுன்சிலில் பதிவு செய்தவர்கள் வழக்குரைஞராக பணி யாற்றுவதற்காக இந்திய பார் கவுன்சில் அகில இந்திய வழக்குரைஞர்கள் தேர்வை அவ்வப் போது நடத்தி வருகிறது. இந்த தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள், இந்தியாவில் உள்ள எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்குரைஞ ராக பணியாற்றும் தகுதியைப் பெறுகிறார்கள். வழக்குரைஞராக இந்த தகுதித் தேர்வு நவம்பர் 29–ஆம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான விண்ணப்பப் பதிவு தொடங்கிய நிலையில் அக்டோபர் 27–ஆம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்வுக்கு தமிழ்நாட்டில் சென்னை, கோவை, திருச்சி ஆகிய 3 நகரங்கள் மட்டுமே தேர்வு மையங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.

இத்தேர்வில், அனைத்து மாவட்டங்களை சேர்ந்த இளம் வழக்குரைஞர்கள் பங்கேற்கும் நிலையில் தமிழகத்தில் 3 நகரங்களில் மட்டும் தேர்வு மையங்களை அமைத்திருப்பதன் மூலம் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து தேர்வு மையங்களுக்கு செல்ல வேண்டியது உள்ளது.

எனவே, இந்தத் தேர்வை எழுதவிருக்கும் இளம் வழக்குரைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் போன்ற முக்கிய நகரங்களிலும் கூடுதல் தேர்வு மையங்களை அமைக்க தமிழ்நாடு பார் கவுன்சில் உறுப்பினர்கள், இந்திய பார் கவுன்சிலிடம் முறையிட்டு, தேர்வு மையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**நன்றி : தினத்தந்தி 24.8.2026**

# மாநகராட்சிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றலில் சொத்துரிமையர்களின் பாதையுரிமையை மறுக்கக் கூடாது

**சென்னை உயர்நீதிமன்றம்**

**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி ஆர்.விஜயகுமார்**

**உசீம (பிடி)(எம்டி) 827/2025 மற்றும் உபம (எம்டி) எண் 4426/2025**

**2025 (4) CTC 51**

**எம்.என்.பிரபாகரன் ...மனுதாரர்**

–எதிர்–

**1. அருள்மிகு மீனாக்சி சுந்தரேஸ்வரர் கோயில் சார்பாற்றம் அதன் செயல் அலுவலர்/இணை ஆணையர், மதுரை 2. அருள்மிகு தெப்பக்குளம் மாரியம்மன் கோயில் சார்பாற்றம் அதன் இணை ஆணையர், காமராஜர் சாலை (ராமனாதபுரம் சாலை) மதுரை 625 009. 3. மதுரை நகராண்மை கழகம் சார்பாற்றம் அதன் ஆணையர், அண்ணா மாளிகை, தல்லாகுளம், மதுரை ...எதிர்மனுதாரர்கள்**

மனுதாரரது வழக்குரைஞர் திரு.ஜே.பரதன்

எதிர்மனுதாரர்கள் வழக்குரைஞர்கள் எம 1 சார்பில் திரு.எஸ்.மனோகர். எம 2 சார்பில் திரு. கே.கே.கண்ணன்

**கோருகை**: மதுரை நகர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற கோப்பிலான முவ எண் 591/2019இல் வவி எண் 575/2019இல் இயற்றப்பட்ட 3.12.2019 தேதிய நிறைவேற்றல் ஆணையை உறுதியாக்கிக் கொண்டு மதுரை முதன்மை சார் நீதிமன்றத்தின் கோப்பிலான உபமே எண் 2/2020இல் உண்டான நிறைவேற்றத் தக்க ஆணையை நீக்கறவாக்கிட உரிமையியல் சீராய்வு மனு இந்திய அரசமைப்பு சாசன உறுப்பு 227 கீழ் தாக்கலானது.

16.4.2025 அன்று தள்ளிவைப்பான தீர்ப்புரை 30.4.2025 அன்று பகரப்பட்டது.

## ஆணை

அவரது இடைக்கால உறுத்துக்கட்டளை விண்ணப்பம் தள்ளுபடியானது உபமே எண் 2/2020இல் மதுரை முதன்மை சார் நீதிபதி யால் உறுதியானதற்கு சவாலிட்டுக் கொண்டு, மதுரை நகர முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கோப்பிலான முவ எண் 591/ 2019இன் வாதி இப்போதைய உரிமையியல் சீராய்வு மனுவை தாக்கலிட்டுள்ளார்.

(ஏ) பொருண்மை கட்டமைப்பு

2. தெப்பக்குளத்தை ஒட்டியிருந்து அட்டவணை யில் சொல்லப்பட்ட சொத்துக்களில் 1வது உருப்படியின் கிழக்கு எல்லையில் சுவர் எதனை யும் அல்லது வேலி வைப்பத்திலிருந்தும் 2வது உருப்படி வழியாக 1வது உருப்படியில் வாதி உள்நுழைவதையும் வெளியேறலையும் தடுப்பதி லிருந்து 1–2வது எதிர்வாதிகளை தடுத்து நிறுத்தும் நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பாணை கோரிக் கொண்டு மேலுள்ள வழக்கை இங்குள்ள சீராய்வு மனுதாரர் தாக்கலிட்டுள்ளார்.

3. 5.9.2017 தேதிய பதிவு ஆவணம் மூலமாக சொத்தின் முதலாவது உருப்படியை வாதி வாங்கியிருந்தார் என்பதை வழக்குரை உறுத்துக் கூற்றுகளை ஆழ்ந்து வாசித்தல் காட்டுகிறது. சொன்ன ஆவணம் கீழ் டி.எஸ். எண்225/2டியில் 1670 சதுரடியை அவர் வாங்கியிருந்தார். எல்லை பற்றிய ஆவண வாசகங்களில் காமராஜர் சாலை ராமனாதபுரம் சாலை வடக்கு எல்லையாக காட்டப்படுகிறது தெப்பக்குளம் மேல வீதி (சொன்ன தாவா சொத்து அட்டவணயின் 2வது உருப்படி) கீழக்கெல்லையாக காட்டப்படுகிறது. பிற இரு எல்லைகள் தனியாருக்கு சொந்தமானவை யாகும்.

4. வாதியின் கூற்றுப்படி காமராஜர் சாலை யும் தெப்பக்குளம் மேல வீதியும் பொது சாலை களாக உள்ளன. தெப்பக்குளம் மேல வீதியில்

வாதியினது சொத்தும் புன்னைவன திருமண மகால், கீதா நந்தகோபா மந்திர், தியாகராஜர் ஆசிரியர் பயிற்சி கல்லூரி ஸ்ரீமுத்தீஸ்வரர் கோயில், சித்தாஸ்ரம் மற்றும் மீனாக்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேனிலை பள்ளி ஆகிய பல்வேறு இதர சொத்துக்களும் அமைந்துள்ளன எனவும் உறுத்துக் கூறப் படுகிறது. தெப்பக்குள மேல வீதி அனுப்பானடி சாலையுடன் இணைந்துளளது.

5. இரண்டாவது உருப்படியாகும் தெப்பக்குள மேல வீதி புல எண் டி.எஸ் 210இல் அமைந்துள்ளது எனவும் அது பொது மக்களால் பிரயோகிக்கப்படும் பொது சாலையாக உள்ளது எனவும் நூற்றாண்டுகளுக்கு அதிகமாக வாகனங்களும் நகர் பேருந்துகளும் அதில் சென்று வந்து கொண்டிருக்கின்றன எனவும் மேலும் உறுத்து கூறப்படுகிறது. வீதி விளக்கு களை மாநகராட்சி நட்டிருந்து தெப்பக்குள மேல் வீதியின் ஒவ்வொரு பக்கத்திலும் பொது வடிகால் செல்கிறது எனவும் வாதிடப்படுகிறது. நகர பேருந்து நிறுத்துமிடமும் அமைந்துள்ளது. மதுரை மாகராட்சியால் பேருந்து நிழற்கொடை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. கீழ்புரத்தில் தெப்பக் குளம் மேல வீதியை ஒட்டியிருந்தும் வாதி உட்பட்ட அனைத்து சொத்து உரிமையாளர் களும் சொன்ன வீதி வழியாக உள்நுழைவுக்கும் வெளிச்செல்லலுக்கும் உரிமை கொண்டு உள்ளார்கள்.

6.1–2வது எதிர்வாதிகளின் அலுவலர்கள் சொத்துக்கு 9.10.2019 அன்று வந்து, அட்டவணையில் சொன்ன சொத்தின் 2வது உருப்படியாகும் கிழக்கெல்லையாகும் தெப்பக்குள் மேல் வீதியின் ஒரத்தில் ஒரு சுற்று சுவரை நிர்மானிக்க எத்தனித்தார்கள் என வாதியால் சொல்லப்படுகிறது. அத்தகைய சுற்று சுவர் கட்டப்பட்டுமானால் தெப்பக்குளம் மேல வீதிக்கு வாதி உள்நுழைவு மற்றும் வெளியேறல் எதனை யும் கொண்டிருக்க மாட்டார். ஒரு வீதியை அல்லது சாலையை அல்லது நெடுஞ்சாலையை ஒட்டிய சொத்தை கொண்டி ருக்கும் நபர் அவரது சொத்தை ஒவ்வொரு புள்ளியிலும் அணுகலுக்கு உரிமை கொண்டு உள்ளார் என மேலும் வாதிடப்படுகிறது. சுற்று சுவர் எழுப்ப தூண்களை நிர்மானித்திட 1–2வது எதிர்வாதியின் கீழ்நிலை யோர்கள் 11.10.2019 அன்று குழி தோண்ட ஆரம்பித்தார்கள். ஆகையால் இப்போதைய வழக்கு தாக்கலிடப்பட்டுள்ளது. வழக்குடன், இடைக்கால உறுத்துக் கட்டளை இயற்றப்பட்டு சுற்றுச் சுவரை எழுப்பிலிருந்து 1–2வது எதிர் வாதிகள் தடுத்து நிறுத்தப் பட்டாலொழிய அவர் மாபெரும் இடர்பாடுக்கு ஆளாவார் என் கோரிட்டுக் கொண்டு இடைக்கால உறுத்துக் கட்டளை விண்ணப்பமான வவி எண் 575/ 2019 தாக்கலானது.

7. வண்டியூர் கிராமத்திலுள்ள மாரியம்மன் கோவிலை சூழும் அனைத்து சாலைகளும் முதலாவது எதிர்வாதியை சேர்ந்தாகும் என வாதிட்டுக் கொண்டு எதிருரையை 1–2வது எதிர்வாதிகள் தாக்கலிட்டுள்ளார்கள். பராமரிப்பு நோக்கத்துக்காக மட்டுமே அந்த சாலைகள் 21.11.1956 அன்று மதுரை நகராட்சி கழகத்துக்கு குத்தகைக்கு விடப்பட்டன. சாலைகள், கழகத்துக்கு சொந்தமானவை அல்ல. சாலைக்கும் வாதியின் தனிப்பட்ட சொத்துக்கும் இடையான வெளியிடம் முதலாவது எதிர்வாதிக்கு சொந்த மானதாகும்.

8. இந்த சொத்துக்கள் குறித்து பல வழக்குகள் நகராண்மை கழகம் எதிராக கோயிலால் தாக்கலாகியிருந்து அந்த வழக்குகள் கோயிலுக்கு சாதகமாக முடிந்துள்ளன என மேலும் வாதிடப் பட்டது. நீபேம(எம்டி) எண் 23017/2018இல் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் இரு நீதியர் அமர்வால் வழங்கப்பட்ட பல்வேறு ஆணைகளில் ஆக்கிரமிப்பு அகற்றலுக்கும் பராமரிப்புக்கும் வசதிகளை உருவாக்கலுக்கும் கோயிலுக்கும் கழகத்துக்கும் பல்வேறு பணித்தல்கள் தரப்பட்டன எனவும் கூடுதலாக வாதிடப்பட்டது.. உசீ.ம) பிடி (எம்டி) எண் 827/ 2025இல் உண்டான இரு நீதியர் அமர்வு உத்தரவுகளை நிறைவேற்றலுக்காகவும் ஆக்கிரமிப்பு எதனையும் அகற்றலுக்காகவும் மட்டுமே சுற்று சுவர் எழுப்பலுக்கு முயற்சிக்கப் பட்டது. சொத்தின் 3வது உருப்படி மூலமாக

அணுகு வழியுரிமையை வாதி வைத்துக் கொண்டிருக்கவில்லை. எதிர்மாறாக. ராமனாத புரம் சாலை மூலமாக வாதி அணுகு வழிபெற வியலும். தெப்பகுளம் மேல வீதி மூலமான அணுகுவழி உரிமையை வாதியோ அல்லது வாதியின் உரிமைமூல முன்னவர்களோ கொண்டிருக்கவில்லை. தெப்பக்குள மேல வீதி மூலமான அணுகுவழியை கிரயப்பத்திரம் தெரிவிக்கிறது என்பது மட்டுமே வாதிக்கு எந்த உரிமையும் அளிக்காது. சொத்தின் உண்டாவது உருப்படி கோயிலுக்கு சொந்தமானது எனும் நிலைமையில் மெய்யான சொத்துரிமையருக்கு எதிராக உறுத்துக்கட்டளை பெறப்பட முடியாது. காமராஜர் சாலையிலிருந்து நேரடி அணுகு வழியை வாதி வைத்துக் கொண்டிருக்கிறார். ஆகையால் அவர் உரிமை விஷயமாக தெப்ப குளம் மேல வீதிக்கு அணுகுவழியை கோரிட முடியாது.

9. ஒவ்வொரு தரப்பிலும் வைக்கப்பட்ட பணிந்துரைகளையும் நீபேம (எம்டி) எண் 23017/2019இல் இரு நீதியர் அமர்வாலான தீர்ப்புரையையும் பரிசீலித்திருந்த பின்பாக வாதி அதில் தரப்பினராக இருந்தாலும் நீதிப்பேராணை மனுவில் உயர்நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட பணிப்புகளை அவர் மறைத்திருந்தார் எனும் முகாந்திரத்தில் இடைக்கால உறுத்துக்கட்டளை விண்ணப்பத்தை தள்ளுபடியாக்க விசாரணை நீதிமன்றமும் மேல்முறையீடு நீதிமன்றமும் முனைந்திருந்தன. வாதிக்கு சாதகமாக இடைக் கால உறுத்துக்கட்டளை அளிக்கு முன்பாக பொது நலனுரிமையும் பொது நன்மையும் பரிசீலிப்பில் கொள்ளப்பட வேண்டியதாகும் என கீழமை நீதிமன்றங்கள் மேலும் கண்டறிந்தன.

10. ராமனாதபுரம் சாலை மூலமாக அணுகு வழி அவருக்கு உண்டு என்பதை வாதி ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் கீழமை நீதிமன்றங்கள் கண்டறிந்துள்ளன. சொத்தின் 2வது உருப்படி பொது சொத்தாக இருக்க வில்லை எனவும் அது முதலாவது எதிர் மனுதாரர் கோயிலுக்கு பாத்தியப்பட்டது என்பதும் மேலும் காணப்பட்டது. இத்தகைய சந்தர்ப்பங் களில் தெப்பகுள மேல வீதிக்கு அணுகு வழியை உரிமை விஷயமாக வாதி கொள்ளவியலாது. வழக்கை முதல் நோக்கில் வாதி புலப்படுத்தி யிருக்கவில்லை எனவும் வாதிக்கு சாதகமான வசதியுடமை சமநிலை கிடையாது எனவும் கீழமை நீதிமன்றங்கள் கண்டறிந்தன.

11.மேலுள்ள தீர்ப்புகள் அடிப்படையில் இடைக்கால உறுத்துக்கட்டளை விண்ணப்பத்தை கீழமை நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்துள்ளன. அதற்கு சவாலிட்டுக் கொண்டு இப்போதைய உரிமையியல் சீராய்வு மனு வாதியால் தாக்க லாகியிருக்கிறது.

(பி) ஒவ்வொரு தரப்பு வழக்குரைஞராலான பணிந்துரைகள்.

12. சொத்தின் 1வது உருப்படி மூலை மனையாகவும் வடபுறத்தில் காமராஜர் சாலை மற்றும் கீழ்புறத்தில் தெப்பக்குளம் மேல வீதி ஆகும் இருவேறு சாலைகள் மூலமாக அணுகு வழியை கொண்டுள்ளது எனவும் மனுதாரரது வழக்குரைஞர் பணிந்துரைக்கிறார். மதுரை நகராண்மை கழக பதிவாவணங்கள் படியும் கூட இரு சாலைகளும் பொது சாலைகளாக உள்ளன. தெப்பக்குள் மேல வீதி பொது வீதியாக இருக்கும்போது, வடபுறத்தில் வேறொரு சாலை மூலமாக அவர் அணுகுவழி வைத்து கொண்டி ருக்கிறார் என்ற காரணத்தில் மட்டுமே சொன்ன வீதியிலிருந்து அவரது சொத்துக்கு அணுகுவழி மறுக்கப்பட முடியாது.

சி3. இடைக்கால உறுத்துக்கட்டளை விண்ணப்பத்தில் அவர்களது எதிருரையை நகராண்மை கழகம் தாக்கலிடலிருந்து வாதியினது வழக்கை ஏற்றிந்திருந்தார்கள். மதுரை மாநகராட்சிக்கு கோயிலால் சொத்து குத்தகையில் விடப்பட்ட போதிலும் அது ஒரு சாலையாகும் என அவர் மேலும் வாதிட்டிருந்தார். சொன்ன சாலை பராமரிப்புக்காக அது மதுரை மாநகராசிக்கு குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகைக்கு விட்ட சமயத்தில் வேறு சொத்து எதும் கோயிலால் தக்கவைக்கப்படவில்லை. சாலையோரம் மட்டும் விடுபாடுகியுள்ளது. ஆகையால் சொன் சொத்தும் மதுரை மாநகராட்சிக்கு மட்டுமே

குத்தகைக்கு விடப்பட்டிருப்பதாக பொருளறியப் பட வேண்டும். சாலையின் ஒவ்வொரு புறத்திலும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டிருந்து வடிகால் களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன எனவும் அவர் வாதிட்டிருந்தார். அந்த ஊடு சாலை மூலமாக வாகனங்கள் சென்று வந்து கொண்டிருக்கின்றன. இதததகைய சந்தர்ப்பங்களில் சொன்ன சாலை கோயிலை சேர்ந்த தனிப்பட்ட நிலமாக ஒருபோதும் பாவிக்கப்பட முடியாது.

14. கோயிலால் நம்புகையாகும் வழக்குகள் திருவிழாக்கள் போது மட்டுமே வைக்கப்படும் சில கடைகளது ஆக்கிரமிப்பு தொடர்பாக மட்டுமே உள்ளனவையாகும் என மனுதாரரின் வழக்குரைஞர் கூடுதலாக வாதிட்டிருந்தார். சாலை ஆக்கரமிப்பு செய்யப்பட்டால் மட்டுமே எதிர்த்திடலுக்கு கோயிலுக்கு பாத்தியதை உண்டு. அதை மதுரை மாநகராட்சிக்கு குத்தகைக்கு விட்ட பின்பாக தனியார் சொத்திலிருந்து சாலைக்கு அணுகு வழி குறித்த எதிர்ப்பு எதனையும் கோயில் எழுப்பவியலாது. உயர்நீதிமன்றத்தால் தானாகவே துவக்கப்பட்ட பொதுநல வழக்கு சலையின் ஆக்கரமிப்புகளை அகற்றலுக்கும் பராமரிப்புக்கும் மட்டுமே தொடர்புறுவதாகிறது என அவர் மேலும் வாதிட்டிருந்தார்.

15. நீதிப்பேராணை மனுவில் வாதி தரப்பின ராக இருந்தபோதிலும் அவருக்கு எதிராக கோருகை ஏதும் இருந்ததில்லை. அவருக்கு எதிராக உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. சாலையோரம் பற்றிய கோருகை எழுப்பிட முயற்சிக்கப்பட்டாலும் சொன்ன கேள்வியை ஆராய்ந்திட இரு நீதியர் அமர்வு மறுத்துள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட பணித்தல்களை வாதி மறைத்தி ருந்தார் எனும் முகாந்திரத்தில் இடைக்கால உறுத்துக்கட்டளை விண்ணப்பத்தை கீழமை நீதிபதிகள் தள்ளுபடியாக்கிருக்கக் கூடாது. உணமையில், உயர்நீதிமன்றத்தால் ஆன பணித்தல்களில் வாதி துயரடையவில்லை. பொது சலையில் ஆக்கிரமிப்பு செய்திட எந்த முயற்சியையும் வாதி செய்து கொண்டிருக்க வில்லை. தெப்பக்குள மேல வீதிக்கு அவர் அணுகுவழி மட்டுமே கோரிக் கொண்டி ருக்கிறார்.

16. மாறாக, சாலைகளை மதுரை மாநகராட்சிக்கு குத்தகையில் விட்ட சமயத்தில் வரம்புற்ற பரப்பு மட்டும் குத்தகையில் விடப்பட்டது என எதிர்வாதி கோயில் சார்பில் முன்னிலையான வழக்குரைஞர் வாதிட்டிருந்தார். எஞ்சிய பகுதி கோயிலால் தக்க வைக்கப்பட்டது. ஆகையால், அவர்களால் தக்க வைக்கப்பட அவர்களது சொத்தை இணைத்துக் கொண்டு சுற்று சுவர் நிர்மானிக்க கோயிலுக்கு உரிமையுண்டு. காமராஜர் சாலை மூலமாக அவருக்கு அணுகு வழி வைத்துக் கொண்டி ருக்கிறார் என் அவர் மேலும் வாதிட்டிருந்தார். ஆகையால் தெப்பக்குளம் மேல வீதிக்கு அணி வழி திறந்தடலுக்கு அவருக்கு தேவை ஏதுமில்லை. தேவைப்பாடு வசதியுரிமை ஏதும் கிடையாது. சாலை பொது சாலையாக இருக்காது எதிர்வாதிக்கு சொந்தமானதாக உள்ளபோது வாதி உரிமை விஷயமாக தெப்பகுளம் மேல வீதிக்கு அணுகுவழி கோரிட இயலாது.

17. பொது நல வழக்கில் உயர்நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட உத்தரவுகளை செயல்படுத்திட மட்டுமே சுற்றுச் சுவர் எழுப்பப்பட வேண்டிய தாகும் என எதிர்மனுதாரர் கோயில் சார்பிலான வழக்குரைஞர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார். ஆகையால் சொன்ன நீதிப் பேராணை மனு தரப்பினர்களில் ஒருவராக இருந்த வாதி, பணித்தல மறைந்து இப்போதைய வழக்கை வாதி தாக்கலிட்டிருந்தார். வசதியுரிமை சமநிலை வாதிக்கு ஆதரவாக இல்லை. அது விடுத்து வேறு சாலைக்கு அணுகுவழியை வாதி வைத்துக் கொண்டிருக்கும்போது சுற்றுச் சுவரை கட்டமைத்தல் அவருக்கு குந்தகம் எதனையும் ஏற்படுத்தாது. வழக்கு விசாரணைக்கு வழக்கு ஏற்றதாக உள்ளது எனவும் எழுவினா இறுதியாக தீர்மானிக்கப்பட இயன்று, வழக்குத் தீர்வுக்கு பணித்தல் நீதிமன்றத்தால் இயற்றப்படலாம் என அவர் மேலும் வாதிட்டிருந்தார். எனவே கீழமை நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட ஆணை தள்ளுபடி யாதலை அவர் வேண்டினார்.

18. இரு தரப்பினர்களையும் கேட்டறிந்து பதிவாவணங்களை ஆழ்ந்து வாசித்தேன்.

19.புல எண் 225/2டி இல் 1670 சதுரடி பரப்பை 5.9.2017 தேதிய பதிவான கிரைய ஆவண எண் 827/2025 கீழ் சொத்தின் 1வது உருப்படியை வாதி வாங்கியுள்ளார். சொன்ன கிரைய ஆவணம் படி வடபுரத்தில் காமராஜர் சாலையிலிருந்தும் கீழ்புரத்தில் தெப்பகுள மேல வீதியிலிருந்து அணுகுவழியையும் கொண்டிருக்கும் மூல மனையாக மனை உள்ளது. பு. எண் 225/2டி இல் உள்ள சொத்து வாதியின் தனி சொத்து என்பதில் தகராறில்லை. சொன்ன சொத்தில் கோருரிமை எதனையும் கோயில் எழுப்பியிருக்கவில்லை.

20. வண்டியூரிலுள்ள மதுரை தெப்பக்குளம் கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் உள்ள சாலைகளை குத்தகையில் விட்டுக் கொண்டு 21.11.1956 அன்று மதுரை மாநகராட்சியுடன் குத்தகை ஒப்பந்தத்தை முதலாவது எதிர்வாதி கோயில் செய்துள்ளது. சொன்ன குத்தகை ஆவண சரத்து () கீழ், குத்தகை கால அளவின் போது குத்தகை பெற்றவரிடம் உடைமை வழங்கப்பட்டது. வரையறுப்பான வளாகங்களில் சாலைகளை உருவாக்கி தனது செலவில் ஜல்லியிட்டு குத்தகை முடியும் வரை அதை பராமரிக்க வேண்டும்.

21. சொத்தை குத்தகைக்கு விடுதல் சமயத்தில் கூட அது சாலையாக இருந்தது என்பதை சொதது விவரணையை ஆழ்ந்து வாசித்தல் காட்டுகிறது. சொன்ன குத்தகை ஆவணத்தில் புலவெண் 225 மேற்கு எல்லையாக காட்டப்படுகிறது. இப்போதைய வழக்கு வாதியால் புல எண் 225 வாங்கப்பட்டது என்பது குறிக்கப்பட வேண்டியதாகும். ஆகையால் வாதியினது தனி சொத்துக்கும் மதுரை மாநகராட்சிக்கு குத்தகையில் விடப்பட்ட சொத்துக்கும் இடையில் வேறேது சொத்தும் அதன் பயன்பாடுக்காக முதலாவது எதிர்வாதி கோயிலால் தக்க வைக்கப்படவில்லை.

22. உறுத்துக் கட்டளை உறுதிமொழி ஆவணத்தின் பத்தி 10 கீழே தரப்படுகிறது.

''10. அட்டவணை சொத்துக்களில் சொல்லப்பட்டு 2வது உருப்படியாக காட்டப்படும் தெப்பக் குளம் மேல வீதி நகர புலவெண் 210இல் உள்ளடங்குகிறது என நான் பணிவாக சமர்ப்பிக்கிறேன். அது ஆதியில் பிட்டுமண் சாலையாக இருந்து பின்னக சிமெண்ட் சாலையாக மாற்றப்பட்டிருந்தது. சொன்ன பொது வீதி நூறாண்டுகளுக்கு மேலாக பொது மக்களாலும் வாகனங்களாலும் நகர பேருந்துகளாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சொன்ன மூன்றாவது எதிர்வாதி தெப்பக்குளம் மேல வீதியில் வீதி விளக்குகளை பொருத்தி யுள்ளது. மூன்றாவது எதிர்மனுதாரரிடம்/மூன்றாவது எதிர்வாதியிடம் உரிமையளிப்பாகும் பொது வடிகாலும் தெப்பக் குளம் மேல வீதியின் கீழ் ஓடுகிறது. சொன்ன வீதி மீது துருத்திக் கொண்டிருக்கும் பல்வேறு ஆளிறங்கு குழிகள் உள்ளன. சொன்ன வீதியில் பேருந்து நிறுத்தமும் உள்ளது. வீதியில் பேருத்து நிறுத்தமும் கட்டப் பட்டுள்ளது. தெப்பக்குள் மேல வீதியின் கீழ்புரத்தை ஒட்டி நான் உள்பட அனைத்து சொத்து உரிமையாளர்களும் சொன்ன வீதியை மட்டுமே உள்நுழைவு மற்றும் வெளியேறல் உரிமை வைத்திருக்கிறக்கிறார்கள். தெப்பக்குள மேல வீதி இருத்தலை காட்டிட கூகுளிலிருந்து பதிவிறக்கப்பட்ட ஒரு சுமாரான மனைபிரிவைவிட வரைபடத்தையும் புகைப் படங்களையும் நான் சமர்ப்பித்திருந்தேன்.''

23. உறுத்துக்கூற்று உறுதிமொழி ஆவணப் பத்தி 10இலிருந்து மேலே பொழிப்பாகிய உறுத்துக்கூற்றுகள் 1-2வது எதிர்வாதிகளால் தாக்கலான எதிருரையில் மறுக்கப்படவில்லை. ஆகையால் அரசு பேருந்து சென்று வரும் பொது சாலையாக தெப்பக்குள மேல வீதி உள்ளது என்பது தெளிவாகிறது. சொன்ன வீதியின் ஒவ்வொரு பக்கத்திலும் தெரு விளக்குகள் நிர்மானிக்கப்பட்டிருந்து வடிகால் கட்டப் பட்டுள்ளது. உண்மையில் ஒரு பேருந்து நிறுத்தமும் சொன்ன வீதியில் கட்டப்பட்டுள்ளது. அது விடுத்து தெப்பகுள மேல வீதி எதிர் பல்வேறு ஆளிறங்கு குழிகளும் ஒரு பள்ளியும் ஸ்ரீமுத்தீஸ்வரர் கோயில் எனும் ஆலயமும் அமைந்துள்ளன. ஆகையால் அது ஒரு தனியார்

சாலையாகும் எனும் 1–2வது எதிர்வாதிகளின் வாதம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது.

24. ஏற்றவாறு வடபுரத்தில் காமராஜர் சாலையிலிருந்து அவரது சாலைக்கு அணுகு வழியை வாதி கொண்டிருக்கும்போது கீழ் புரத்தில் தெப்பக்குளம் மேல வீதி மூலமாக அணுகுவழியை அவர் கோர முடியாது என 1–2வது எதிர்வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

25இல் அறிவிப்பான பாரத மாதா சங்கம் சார் அதன் செயலர் சுப்ரமணிய நாயக்கர் மற்றும் ஒருவர் –எதிர்– ரோஜா சுந்தரம் மற்றும் பிறர்) வழக்கு தீர்ப்புரையில் ஒத்த பணிந்து ரையை பரிசீலிக்க சந்தர்ப்பம் இந்த நீதிமன்றத்திற்கு கிட்டியது. பஜார் வீதி மூல அணுகுவழியை அங்குள்ள மேல்முறை யீட்டாளர்கள் கொண்டிருந்தபோது வினாயகர் கோயில் வீதி எனும் மற்றொரு வீதி வழியாக அவர்களது சொத்துக்கு அணுகுவழியை அவர்கள் கோர முடியாது என வாதிடப்பட்டது. சொன்ன தீர்ப்புரையின் பத்தி 10 கீழே தரப்படுகிறது.

''8. அப்படியே ஆனாலும் பஜார் வீதி மூலமாக அணுகுவழி பெறப்பட முடியும் எனவும் ஆகையால் பஜார் வீதி மூலனாக முதலாவது எதிர்மனுதாரரது ஆலைக்கு அணுகுவழி அடையப் படவியலும் எனவும் ஆகையால் ஏ டி இன் வடக்கில் சுந்தர வினாயகர் கோயில் வீதி மூலமாக அணுகுவழி முதலாவது எதிர்மனு தாரரருக்கு தேவையானதாகும் எனவும் மேல் முறையீட்டாளர்களது பொறுப்பு அல்ல. முன்னராக குறிப்படான தீர்ப்புரை வரிசைகளில நிலைநாட்டப்பட்டவாறுள்ள உரிமையை முதலாவது எதிர்மனுதாரர் சந்தேகமின்றி கொண்டிருக்கும் போது ஏடி நெடுகில் ஒவ்வொரு புள்ளிலி யிருந்தும் வடக்கில் சுந்தர வினாயகர் கோயிலுக்கு அவரது அணுகு வழியுரிமையஒய் முதலாவது எதிர்மனுதாரர் வற்புறுத்தவியலும். என்பது பின்வருவதாகும்.

26. சொன்ன தீர்ப்புரையை பின்பற்றிக் கொண்டு இல் அறிவிப்பான [கே.வி.கே. ஜனார்தனன் –எதிர்– தமிழ்நாடு அரசு சார்பாக: சேலம் ஆட்சியர் பிற மற்றும் மூவர்] வழக்கு தீர்ப்புரையின் இந்த நீதிமன்றத்தின் தனி நீதிபதி கீழ்வருமாறு தீர்ப்பிட்டுள்ளார்.

''9. அடுத்திருக்கும் இடத்துக்கு அணுகுவழி கொள்ளுவதை தடுத்திட பொது வீதியில் கட்டுமானம் எதனையும் ஏற்படுத்த அரசுக்கு நகராட்சிக்கு அல்லது உள்ளாட்சி மன்றத்துக்கு அனைத்து உரிமையும் கிடையாது என்பதை மேல் சொன்ன தீர்ப்புரைகளில் வகுக்கப்பட்ட விகிதாரங்களிலிருந்து தெளிவாகிறது. பொது வீதியை அடுத்திருக்கும் நில உரிமையாளருக்கு பொது வீதிக்கு அடுத்த அவரது அல்லது அவளது சொத்துக்கு புள்ளியிலும் அணுகு வழியுரிமை கொண்டிருக்கிறார் என்பது மீண்டுமீண்டுமாக தீர்ப்பாகியுள்ளது. மேலுள்ளதன் காரணமாக மனுதாரரது நிலத்துக்கும் தாவா வண்டி பாதைக்கும் இடையில் கட்டப்பட்ட இரும்பு வேலி சட்ட விரோதமானதாகும். அந்த காரணத்தில் மட்டுமே கோரப்பட்டவாறு உறுத்துக்கட்டளை உத்தரவுக்கு மனுதாரர்கள் பாத்திதையுள்ளவர்கள் ஆவார்கள் ..''

27. மேலே மேற்கோளாகும் உயர்நீதிமன்ற தீர்ப்புரை பரிசீலனையில், பொது சாலையை ஒட்டியிருக்கும் தனியார் சொத்தை ஒருவர் கொண்டிருக்கும் போதெல்லாம் அவரது சொத்தி லிருந்து ஒவ்வொரு புள்ளியிலிருந்தும் சொன்ன பொது பாதைக்கு அணுகுவழிக்கக அவருக்கு பாத்திதையுண்டு. ஒரு குறிப்பிட்ட புள்ளி யிலிருந்து அல்லது குறிப்பிட்ட சாலையி லிருந்து மட்டுமே அணுகுவழி தையார் சொத்துரிமையரருக்கு உண்டு என வாதிடப்பட முடியாது.

28. திருவிழா பருவகாலத்தின்போது சாலை யில் தற்காலிக கட்டுமானங்களை அல்லது சாலையில் கூடும் போடுதலுக்காக அல்லது அரசியல் கூட்டத்துக்காக மேடைகளை அமைப்பதை தடுத்திட மட்டுமே அந்த வழக்குகள் அனைத்தும் தாக்கலாகி என்பதை கோயிலால் நம்புகை யாகும் தீர்ப்புரைகள் தெளிவாக காட்டுகின்றன. ஆகையால் சாலைக்கு அணுகுவழி மட்டும்

கோரிடும் வாதிக்கு எதிராக இந்த தீர்ப்புரைகள் வைக்கப்பட முடியாது. முவ எண் 846/203இல் சாலையில் தற்காலிக கடைகளை ஏலமிடலி லிருந்து மாநகராட்சிக்கு எதிரான உறுத்துக் கட்டளை பெறுதலில் கோயில் வெற்றி கண்டது. ஆகையால் கோயில் வெற்றி கண்ட உரிமை யியல் வழக்குகள் எதனுக்கும் தெப்பகுளம் மேல் வீதியிலிருந்து அணுகுவழியுடன் சம்பந்தம் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகும்.

29. நீபேம(எம்டி) எண் 23017/2018 இல் உண்டான நீதிமன்றத்தின் ஆணைகளை வாதி மறைத்திருந்தார் எனும் முகாந்திரத்தில் உறுத்துக் கட்டளை விண்ணப்பத்தை தள்ளுபடியாக்க கீழமை நீதிமன்றங்கள் முனைந்திருந்தன. அந்த பகுதியிலுள்ள பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளையும் சேவைகளையும் வழங்கிடவும் வாகன நிறுத்தங்களுக்காக மட்டுமீறும் தொலை வசூலுக்கும் ஒப்பந்தரார் எதிராக முறையான நடவடிக்கை எடுத்தலுக்காக வருவாய் துறையினரையும் மாநகராட்சியையும் கோயிலையும் மின் வாரியத்தையும் பொ.ப.து அலுவலர்களையும் பணித்திடும் செயலுறுத்தல் பேராணைக்காக மட்டுமே உயர்நீதிமன்றத்தால் தன்னிச்சை நீதிப்பேராணை மனு துவக்கப் பட்டது என்பதை உத்தரவை ஆழ்ந்து வாசித்தல் தெரிவிக்கிறது.

3.0. 30.1.2019 அன்று இறுதியாணை மூலமாக நீதிப்பேராணை மனு தீர்வாக்கப்பட்டது. சொன்ன நீதிப்பேராணை மனுவில் வாதி தரப்பினராக இருக்கவில்லை. தெப்பகுளம் மேல வீதிக்கு அல்லது தெப்பகுளத்தை சுற்றியுள்ள வேறு வீதி எதனுக்கும் அணுகுவழியை தடுத்து நிறுத்திட எதுவகையான கட்டுமானத்தையும் செயற்படுத்துமாறு பணித்தல் ஏதும் இயற்றப் பட்டிருக்கவில்லை. ஆக்கரமிப்பு அகற்றலுக்காகவும் பொது மக்களுக்கு பல்வேறு வசதிகள் செய்த லுக்கும் மட்டுமே பணித்தல்கள் தரப்பட்டன,

31. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான தெப்பக்குளமும் மதுரை மாரியம்மன் தெப்பகுளத்தை சுற்றி யிருக்கும் சாலைகளையும் இடங்களையும் கோயிலுக்கு சொந்தமான இடங்களும் எவ்வகை யிலும் ஆக்கிரமிப்புன்றி உள்ளது என்பதை உறுதிப்படுத்திட எதிர்மனுதாரர்களை பணிக்கும் செயலுறுத்த நீதிப்பேராணை கோரிக் கொண்டு நீபேம (எம்டி) எண் 15961/2020ஐ திரு. ஜே.விஜய் ஆனந்த் என்பவர் தாக்கலிட்டுள்ளார்.

32.தெப்பக்குளம் மேல வீதியின் புல எண் 210 ஆன இரண்டாவது தாவா அட்டவணை சொத்தும் கோருகையின் பகுதியாகும் என்பதை கோருகையை ஆழ்ந்துவாசித்தல் வெளிப்படுத்து கிறது. சொன்ன நீதிப்பேராணை மனுவில் வழக்குரைஞர் ஆணையர் ஒருவர் நியமிக்கப் பட்டிருந்து திண்பண்டங்களை விற்கும் குழந்தை களுக்கு கேளிக்கைகள் காட்டும் சில கடைகள் தவிர தெப்பகுளத்தில் அல்லது அதை சுற்றிய சாலைகளில் ஆக்கிரமிப்பு ஏதும் கிடையாது என் சுட்டிக்காட்டி கொண்டு அவர் அறிக்கை தாக்க லிட்டுள்ளார். அதை பதிந்து கொண்டு நீதிப் பேராணை மனு தீர்வாக்கப்பட்டது. சொன்ன நீதிப்பேராணை மனுவில் சாலை மீது சில உரிமையிகளை கோயில் கொண்டுள்ளது எனவும் சாலையை அணுகுவழியாக பயன்படுத்தலி லிருந்து தனி நபர்களை அது தடுத்திட முடியும் எனவும் வாதிட்ட வழக்குரைஞரால் முயற்சிக்கப் பட்டது. எனினும், இந்திய அரசமைப்பு சாசன உறுப்பு 226 கீழான நடவடிக்கைகளில் சொன்ன எழுவினா பரிசீலிக்கப்பட முடியாது என இரு நீதியர் அமர்வு சுட்டிக்காட்டியிருந்தது. சொன்ன நீதிப்பேராணை மனுவில் 8வது எதிர்மனுதாரராக வாதி உள்ளார். ஆகையால் தெப்பக்குளத்தை சுற்றியுள்ள சுவரின் ஆக்கிர மிப்பை அகற்றலுக்காக மட்டுமே நீதிப் பேராணை மனு தாக்கலானது என்பது தெளிவாகிறது.

33. தற்செயலாக, சாலைக்கு அணுகுவழி அடைத்தலுக்கு அவர்களுக்கு சில உரிமைகள் உண்டு எனும் பணிந்துரை நீதிப்பேரானை மனுவில் கோயிலால் வைக்கப்பட்டது. சொன்ன வாதங்கள் உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்

பட்டு நீதிப்பேராணை மனு முடித்து வைக்கப் பட்டது. எனவே நீதிமன்றத்தில் இந்த தீர்ப்புரை களை முன்னிடாமை மறைத்தலாக பாவிக்கப்பட முடியாது என்பது தெளிவாகும். தரப்பினர் ஒருவருக்கு குந்தகமாக நேரவிருக்கும் பொருண்மைகள் மறைக்கப்பட்டால் மட்டுமே அது ஆதார பொருண்மை மறைத்தலாக கருதப் பட்டு பரிகாரம் மறுக்கப்படவியலும். ஆகையால், நீதிப்பேராணை மனுவில் இரு நீதியர் அமர்வால் இயற்றலான ஆணையை அவர் மறைத்திருந்தார் எனும் முகாந்திரத்தில் வாதிக்கு இடைக்கால ஆணைக்கு பாத்தியதை கிடையாது என தீர்ப்பை எட்ட் கீழமை நீதிமன்றங்கள் முடிவெடுத்தது சரியானது அல்ல.

34. தெப்பகுளம் மேல வீதி முதலாவது எதிர்மனுதாரர் கோயிலுக்கு சொந்தமானாலும் அவர்கள் அதை சாலை அமைத்தலுக்காக மதுரை மாநகராட்சிக்கு குத்தகையில் விட்டுள்ளார்கள் எனும் பொருண்மையை கீழமை நீதிமன்றங்கள் சரியாக சீர்தூக்கியிருக்க வில்லை. ஒவ்வொரு பக்கத்திலும் தெரு விளக்கு களையும் நிலத்தடி வடிகால் வசதியையும் சொன்ன வீதி கொண்டிருக்கிறது. சொன்ன வீதியிலிருந்து அரசு பேருந்துகள் சென்று வந்து கொண்டிருந்தும் பேருந்து நிறுத்தங்களும் நிர்மானிக்கப்பட்டுள்ளன. தெப்பகுளம் மேல் வீதியை எதிர்கொண்டு பல்வேறு கல்வி நிலையங்களும் கோயில்களும் அமைந்தி ருக்கின்றன. மதுரை நகராண்மைக் கழகத்தின் வலைதளத்தில் வீதி பொதுவீதியாக காட்டப் படுகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் சொன்ன வீதி பொது வீதியாக மட்டுமே பொருள் காணப் பட முடியும்

35. கழகத்துக்கு குத்தகையில் விடப்பட்ட சாலையின் எல்லையாக வாதியின் சொத்தாகும் புல எண் 225 காட்டப்படுகிறது என்பதை கழகத்துக்கு 21.11.1956 அன்று கோயிலால் நிறைவேற்றப்பட்ட குத்தகை ஆவணம் தெளிவாக வெளிப்படுத்துகிறது. சாலைக்கும் வாதியின் தனி சொத்துக்கு இடையில் வெளியிடம் கிடையாது என்பது தெளிவாகும். வாதியின் சொத்துக்கு முன்பாக மட்டுமே சுற்று சுவர் எழுப்பிட எதிர்வாதி கோயில் முயன்றுள்ளது. கழகத்துக்கு குத்தகையில் விடப்பட்ட மூன்று வேறு சாலைகள் நெடுகிலும் சொத்த்துக்கு முனபாக அல்ல. ஆகையால் பொது சாலைக்கு அணுகுவழி மறைத்தலுக்கு வாதியின் சொத்து தனித்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகும்.

36. தெப்பக்குள மேல வீதியில் வாதியின் சொத்துக்கு முன்பு சுற்றுச் சுவர் நிர்மானிப்பானால் அது சொன்ன சாலைக்கு வாதியின் அணுகு வழியை அடைக்கும். உறுத்துக்கட்டளை இயற்றப் பட்டாலன்றி வாதியின் உரிமை குந்தகத்தில் வைக்கப்படும். எதிர்மாறாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்குதல் எதிர்வாதி கோயிலுக்கு எவ்வகையிலும் குத்தகையாகாது. வசதியிருமை சமநிலையையும் வாதிக்கு நேர விருக்கும் குந்தகத்தையும் பரிசீலனையில் கொண்டு வழக்கு நிலுவையில் இடைக்கால உறுத்துக்கட்டளை வாதிக்கு சாதகமாக இயற்றப்படவியலும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

37. மேலே சொன்ன கலந்தாய்வுகள் பின்புல காரணமாக சீராய்வு மனுவில் குறையுறு வாகும் ஆணை நீக்கறவக்கப்பட்டு கோரப்பட்ட வாறும். உறுத்துக்கட்டளை வாதிக்கு சாதகமாக இருத்தல் வேண்டும். விவி எண் 575/2019 ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

38. அதற்கேற்ப இந்த உரிமையியல் சீராய்வு மனு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த நீதிமன்றத்தாலான கருத்துரைகள் எதனாலும் தாக்கமாகாது 31.10.2025 அன்று அல்லது முன் வழக்கை முடிக்குமாறு விசாரணை நீதிமன்றம் பணிக்கப்படுகிறது. செலவுத் தொகை யில்லை. விளைவாக தொடர்புறு பல்வகை முடித்து வைக்கப்படுஇறது.

**மொழியாக்கம்: பா.ஞானசேகரன்**

# பாகப்பிரிவினை வழக்கில் சட்டப்படி நிரூபிக்கப்படாத உயில் மற்றும் தானப் பத்திரங்கள் செல்லாது

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி சி.வி.கார்த்திகேயன்
2வது மே.மு.எண் 575/2000
தீர்ப்பு ஒத்திவைப்பு: 13-06-2025
தீர்ப்பு பகரப்பட்டது: 18-07-2025
(2025(6)CTC876)

1. பி.நாகராஜ் (காலமானார்) 2. சரஸ்வதி (எ) சரசா (காலமானார்)
3. பி.ராதா 4. என்.மனோஜ் 5. என்.மாஜோஷ் 6. மாரிமுத்து
7. ராஜேந்திரன் .. மேல்முறையீட்டாளர்கள்

(2011ஆம் ஆண்டின் மனு எண் 1 முதல் 3இல், 06.07.2015 நாளிட்ட உத்தரவின்படி, 1-வது மேல்முறையீட்டாளர் காலமானதால், அவரது சட்டப்பூர்வ வாரிசுகளாக மேல்முறையீட்டாளர்கள் 3 முதல் 5 வரையிலானோர் சேர்க்கப் பட்டுள்ளனர்.)

(2025ஆம் ஆண்டின் சி.எம்.பி.எண் 4318இல், 04.03.2025 நாளிட்ட உத்தரவின்படி, 2-வது மேல்முறையீட்டாளர் காலமானதால், அவரது சட்டப்பூர்வ வாரிசுகளாக மேல்முறையீட்டாளர்கள் 6 மற்றும் 7 ஆகியோர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.)

-எதிர்-

1. ராஜம்மாள் (காலமானார்), 2. தேவராஜ் 3. புஷ்பா
4. ரகுபதி ...எதிர்மனுதாரர்கள்

(2022ஆம் ஆண்டின் சி.எம்.பி.எண். 2448இல், 20.01.2025 நாளிட்ட உத்தரவின்படி, 1-வது எதிர்மனுதாரர் காலமானதால், அவரது சட்டப்பூர்வ வாரிசுகளாக எதிர் மனுதாரர்கள் 2 முதல் 4 வரையிலானோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.)

**வேண்டுகை**: கோவை II கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த அசல் வழக்கு எண் 380 / 2003 இல் 12.09.2005 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து, கோவை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த மேல்முறையீட்டு வழக்கு எண். 99 / 2006 இல் 06.01.2009 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக, உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 100-இன் கீழ் இந்த இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டாளர்களுக்காக: திரு. எஸ். முகுந்த், மூத்த வழக்கறிஞர்

எதிர்மனுதாரர்கள் 2 முதல் 4க்காக: திரு. என். பொன்ராஜ்

எதிர்மனுதாரர் 1: காலமானார்

## தீர்ப்பு

கோவை II கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த அசல் வழக்கு எண். 380 / 2003 இன் பிரதிவாதிகளே இந்த வழக்கின் மேல்முறையீட்டாளர்கள் ஆவர்.

2. இந்த இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருந்தபோது காலமான எதிர் மனுதாரர்/ராஜம்மாள் என்பவரால், இந்த இரண்டாம் மேல்முறையீட்டின் போது காலமான 1 மற்றும் 2-வது மேல்முறையீட்டாளர்களான முறையே பி. நாகராஜ் மற்றும் சரஸ்வதி என்கிற சரசா ஆகியோருக்கு எதிராக அசல் வழக்கு எண். 380/2003 தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கு, வழக்கு சொத்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை மூன்று சம

பாகங்களாகப் பிரித்து, அதில் ஒரு பாகத்தை எதிர்மனுதாரர்/வாதிக்கு ஒதுக்கீடு செய்யக் கோரியும், பிரதிவாதிகள்/மேல்முறையீட்டாளர்கள் வாடகைதாரர்களிடமிருந்து பெற்ற வருமானம் குறித்த உண்மையான மற்றும் முறையான கணக்குகளை சமர்ப்பிக்க உத்தரவிடக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கினை 12.09.2005 அன்று கோவை II கூடுதல் சார்பு நீதிமன்றம் பரிசீலித்து, 'அ' மற்றும் 'இ' சொத்து அட்டவணைகள் தொடர்பாக பகுதி தீர்ப்பளித்தது மற்றும் 'ஆ' சொத்து அட்டவணை தொடர்பான கோரிக்கையை தள்ளுபடி செய்தது. அந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து, மேல்முறை யீட்டாளர்கள் கோவை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 99/2006ஐ தாக்கல் செய்தனர். அதனைப் பரிசீலித்த நீதிமன்றம் 06.01.2009 நாளிட்ட தீர்ப்பின் மூலம் மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்து, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்தது. அந்த தீர்ப்பினை கேள்விக்குட்படுத்தி, பிரதி வாதிகள் இந்த தற்போதைய இரண்டாம் மேல் முறையீட்டை தாக்கல் செய்துள்ளனர்.

3. இந்த இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கானது 25.06.2009 அன்று பின்வரும் முக்கிய சட்டக் கேள்விகளின் அடிப்படையில் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது:

1. கீழ் நீதிமன்றங்கள் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 63(c) மற்றும் இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 68 ஆகிய விதிகளுக்கு உட்பட்டு நடக்கத் தவறி விட்டனவா?

2. ஒரு உயில் சட்டப்படி நிரூபிக்கப்பட்ட பிறகும், உயில் எழுதியவரின் வயது தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காகவும், அவரது மகன்களில் ஒருவரை வயது வந்தவர் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக இளவர் என்று குறிப்பிட்டுள்ளார் என்ற காரணத்திற்காகவும் அந்த உயிலை நிராகரித்தது சரியானதுதானா?

3. கொடை ஆவணங்களின் (சா.ஆ.பி4 மற்றும் சா.ஆ.பி5 ஆகிய தானப் பத்திரங்கள்) மூலம் பலன் பெற்றவர்கள் அதன்படி செயல் பட்டு அனுபவித்து வரும் நிலையில், அந்த தானப் பத்திரங்களின் செல்லுபடித்தன்மையை கீழமை நீதிமன்றங்கள் தீர்மானித்தது நியாய மானதுதானா?'

4. மேல்முறையீட்டாளர்களுக்காக ஆஜரான மதிப்புமிக்க மூத்த வழக்கறிஞர் திரு.எஸ். முகுந்த் அவர்களின் வாதங்களும், 2, 3 மற்றும் 4–வது எதிர்மனுதாரர்களுக்காக ஆஜரான மதிப்புமிக்க வழக்கறிஞர் திரு. என். பொன்ராஜ் அவர்களின் வாதங்களும் கேட்கப்பட்டன.

அசல் வழக்கு எண் 380/2003 (II) கூடுதல் சார்பு நீதிமன்றம், கோவை:

5. இந்த வழக்கு இரண்டாம் மேல்முறை யீட்டில் எதிர்மனுதாரராக இருந்த ராஜம்மாள் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது. வாதியான ராஜம்மாளும், பிரதிவாதிகளான நாகராஜ் மற்றும் சரஸ்வதி என்கிற சரசாவும் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் ஆவர்; இவர்களின் தாய் பட்டி யம்மாள் என்கிற அம்மாசியம்மாள் ஆவார். இவர்களுக்கு ராம போயன் என்ற மற்றொரு மகனும் இருந்தார். ராமபோயனும் பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாளும் தங்களது வாழ் நாளில், 04.11.1947 நாளிட்ட பதிவு செய்யப் பட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் 'அ' அட்டவணைச் சொத்தை கூட்டாக வாங்கியதாகக் கூறப் பட்டுள்ளது. 'அ' அட்டவணை சொத்து என்பது கோவை, சௌரிபாளையம் வார்டில் உள்ள 4851 சதுர அடி பரப்பளவுள்ள நிலமும் கட்டிடமும் ஆகும். வாதி மற்றும் பிரதிவாதிகளின் சகோதர ரான ராம போயன் எவ்வித உயிலும் எழுதாமல் காலமானார் என்றும், அதன் பிறகு வாதி, பிரதி வாதிகள் மற்றும் அவர்களின் தாய் ஆகியோர் 'அ' அட்டவணை சொத்தின் முழுமை யான உரிமையாளர்கள் ஆயினர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும், 20.05.1958 அன்று பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாளும், வாதி ராஜம்மாளும் கூட்டாக இணைந்து 20.05.1958 நாளிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் 'ஆ' அட்டவணை சொத்தை வாங்கிய தாகக் கூறப்பட்டுள்ளது. பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் காலமான பிறகு, அவரது தாயாருக்குச் சொந்தமான 1/2 (அரை) பங்கு சொத்துக்கு வாதியும் பிரதிவாதிகளும் முழுமை

யான உரிமையாளர்களாக மாறினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ‘ஆ’ அட்டவணை சொத்து என்பது கோவை, சௌரிபாளையம் கிராமம், இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள 2034 சதுர அடி பரப்பளவுள்ள காலி மனையாகும். மேலும், வாதியின் தாயாரான பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் ‘இ’ அட்டவணையில் உள்ள சொத்தை 02.02.1970 அன்று பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் வாங்கி யிருந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. 'இ' அட்டவணை சொத்து என்பது கோவை, சௌரி பாளையம் கிராமத்தில் 19166 சதுர அடி நிலத்தில் அமைந்துள்ள கதவு எண்கள் 214 முதல் 220 வரையிலான வீடுகள் ஆகும்.

6. மேலும், தாய் பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் 25.03.2000 அன்று எவ்வித உயிலும் எழுதாமல் காலமானார் என்று கூறப் பட்டுள்ளது. சொத்துக்களில் உள்ள அவரது பங்கிற்கு வாதியும் பிரதிவாதிகளும் மட்டுமே உரிமை உடையவர்கள் என்று வாதிடப்பட்டது. வழக்கு சொத்து அட்டவணையில் உள்ள சொத்துக்களில் வாதிக்கு பிரிக்கப்படாத 1/3 (மூன்றில் ஒரு) பங்கு உரிமை உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அவர் பாகப்பிரிவினை கோரிய தாகவும், ஆனால் பிரதிவாதிகள் சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்க மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் 27.06.2002 அன்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி யுள்ளார். பின்னர் 06.07.2002 அன்று மற்றொரு அறிவிப்பையும் அனுப்பியதாகக் கூறப்பட்டுள்ளது. அதற்கு 19.07.2002 அன்று ஒரு பதில் அறிவிப்பு பெறப்பட்டது, அதில் தாய் பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் முறையே 10.09.1979, 06.01.1999 மற்றும் 05.07.1996 ஆகிய தேதிகளில் இரண்டு அறுதியாவணப் பத்திரங்களையும் ஒரு உயிலையும் எழுதி யிருந்ததாகக் கூறப்பட்டி ருந்தது. அந்த இரண்டு அறுதியாவணப் பத்திரங்களும் 2-வது பிரதி வாதிக்கு சாதகமாகவும், உயில் 1-வது பிரதிவாதிக்கு சாதகமாகவும் எழுதப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப் பட்டது. மேற்படி உயிலும் அறுதியாவணப் பத்திரங்களும் போலியான மற்றும் ஜோடிக்கப் பட்ட ஆவணங்கள் என்று வாதி தரப்பில் வாதிடப் பட்டது. இத்தகைய சூழ்நிலைகளில்தான், ‘அ’, ‘ஆ’ மற்றும் ‘இ’ அட்டவணை சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து தனித்தனியாக சுவாதீனம் ஒப்படைக்கக் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

7. பிரதிவாதிகள் தங்களது எதிர்வாத உரை யினை தாக்கல் செய்து, வழக்கு சொத்துக்கள் எவ்வாறு கையகப்படுத்தப்பட்டன என்பதை ஒப்புக் கொண்டனர். ரா போயனின் மனைவி யின் நகைகளை அடகு வைத்ததன் மூலம் 2-வது பிரதிவாதியால்தான் இந்த சொத்துக்களை வாங்குவதற்கான நிதி வழங்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. வாதி ஆரம்பத்திலிருந்தே பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் மீது ஒரு அடங்காத/முரண்பாடான போக்கைக் கொண்டி ருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் எவ்வித உயிலும் எழுதாமல் இறக்கவில்லை என்றும், சொத்துக்கள் தொடர்பாக அவர் ஆவணங்களை எழுதியிருந்தார் என்றும் கூறப் பட்டுள்ளது. வாதியும் பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாளும் சொத்துக்களை அனுபவித்து வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் சொத்துக்களில் தனக்குள்ள பங்கு தொடர்பாக இரண்டு செட்டில் மென்ட் பத்திரங்களையும் மற்றும் உயிலையும் எழுதியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ‘அ’ அட்டவணை சொத்தானது 1999ஆம் ஆண்டின் 23-வது ஆவணமாகப் பதிவு செய்யப்பட்ட 06.01.1999 நாளிட்ட தானப் பத்திரம் மூலம் 2-வது பிரதிவாதிக்கு செட்டில் மென்ட் செய்து கொடுக்கப்பட்டது. பட்டியம்மாள் என்கிற அம்மாசி யம்மாள் 1996ஆம் ஆண்டின் 73-வது ஆவணமாகப் பதிவு செய்யப்பட்ட 05.07.1996 நாளிட்ட உயில் ஒன்றையும் எழுதியிருந்தார் என்று கூறப்பட்டுள்ளது. அந்த உயிலின்படி சொத்துக்களில் அவருக்குரிய பங்கு 1-வது பிரதிவாதிக்கு உயில் சாசனம் (bequeathed) செய்து கொடுக்கப்பட்டது. மேலும், 1-வது பிரதிவாதி ‘இ’ அட்டவணை சொத்துக்கு முழுமையான உரிமை உடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனக்கு பிரிக்கப்படாத 1/3 பங்கு உரிமை உள்ளது என்ற வாதியின் கோரிக்கை மறுக்கப் பட்டு, எதிர்க்கப்பட்டது. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டது.

8. வழக்கு உரை மற்றும் எதிர்வாதி உரையின் அடிப்படையில், மதிப்புமிக்க விசாரணை நீதிமன்ற நீதிபதி பின்வரும் வழக்கம்சங்களை வரைவு செய்தார்:

i) ‘அ’ அட்டவணை சொத்து வாதியின் தாயாருக்கு மட்டுமே முழுமையாகச் சொந்தமானதா?

ii) வாதியின் தாயார் 2-வது பிரதிவாதிக்கு சாதகமாக 10.09.1979 அன்று செட்டில்மென்ட் பத்திரம் எழுதியிருந்தாரா?

iii) வாதியின் தாயார் 05.07.1996 நாளிட்ட உயிலை எழுதியிருந்தாரா மற்றும் அந்த உயில் உண்மையானதா மற்றும் செல்லுபடியாகக் கூடியதா?

iv) ‘ஆ’ அட்டவணை சொத்தில் பிரிக்கப்படாத 1/2 (அரை) பங்குக்கு வாதி உரிமை உடையவரா?

v) வழக்கு உரையில் கோரியுள்ளவாறு பாகப்பிரிவினை பெற வாதிக்கு உரிமை உள்ளதா?

v) கணக்குகளைச் சமர்ப்பிக்கக் கோரும் நிவாரணத்தைப் பெற வாதிக்கு உரிமை உள்ளதா?

vi) வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர நிவாரணங்கள் யாவை?

9. வழக்கு விசாரணையின் போது, வாதி தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். வாதி தமக்குத்தாமே அரசுத் தரப்பு சாட்சி 1 ஆகவும், செல்வராஜ் என்பவர் அரசுத் தரப்பு சாட்சி 2 ஆகவும் விசாரிக்கப்பட்டனர். பிரதிவாதிகள் தரப்பில், 1-வது பிரதிவாதி நாகராஜ் எதிர் தரப்பு சாட்சி 1ஆகவும், ஜெயபால் எதிர் தரப்பு சாட்சி 2ஆகவும் விசாரிக்கப்பட்டனர். சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து உதவியாளர் கோமளா எதிர் தரப்பு சாட்சி 3ஆகவும், ராஜேந்திரன் என்பவர் எதிர் தரப்பு சாட்சி 4 ஆகவும், மற்றும் 2-வது பிரதிவாதி எதிர் தரப்பு சாட்சி 5 ஆகவும் விசாரிக்கப்பட்டனர்.

10. வாதி தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு சா.ஆ.அ1 முதல் அ11 வரை குறியீடு செய்யப்பட்டன. இதில் 04.11.1947, 20.05.1958 மற்றும் 02.02.1970 நாளிட்ட கிரையப் பத்திரங்கள் முறையே சா.ஆ.அ1 முதல் அ3 வரை குறியீடு செய்யப்பட்டன. தரப்பினரிடையே பரிமாறிக்கொள்ளப்பட்ட அறிவிப்புகள் சா.ஆ.அ5 முதல் அ8 வரை மற்றும் அ10 ஆகக் குறியீடு செய்யப்பட்டன. 05.07.1996 நாளிட்ட உயிலின் நகல் சா.ஆ.அ11 ஆகக் குறியீடு செய்யப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு சா.ஆ.ஆ1 முதல் சா.ஆ.ஆ33 வரை குறியீடு செய்யப்பட்டன. 04.11.1947, 20.05.1958 மற்றும் 02.02.1970 நாளிட்ட கிரையப் பத்திரங்கள் முறையே சா.ஆ.ஆ1 முதல் சா.ஆ.ஆ3 வரை குறியீடு செய்யப்பட்டன. 10.09.1979 மற்றும் 06.01.1999 நாளிட்ட செட்டில்மென்ட் பத்திரங்கள் முறையே சா.ஆ.ஆ4 மற்றும் ஆ5 ஆகக் குறியீடு செய்யப்பட்டன. 05.07.1996 நாளிட்ட அசல் உயில் சா.ஆ.ஆ7 ஆகக் குறியீடு செய்யப்பட்டது. மேலும், சொத்து வரி ரசீதுகள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் தொடர்பான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

11. கோவை மதிப்புமிக்க II கூடுதல் சார்பு நீதிபதி அவர்கள், சாட்சியங்களை ஆய்வு செய்த போது, பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் இரண்டு தனித்தனி செட்டில்மென்ட் பத்திரங்களையும், ஒரு உயிலையும் எழுதியிருந்ததை அவதானித்தார். மேலும், சா.ஆ.ஆ6இல் உள்ள செட்டில்மென்ட் பத்திரமானது சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப்படவில்லை என்றும் அவதானிக்கப்பட்டது. மேலும், சா.ஆ.ஆ7 இல் உள்ள உயிலும் சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப்படவில்லை. அந்த உயில் ரத்து செய்யப்பட்டு, அதன்பிறகு 2-வது பிரதிவாதிக்கு சாதகமாக செட்டில்மென்ட் பத்திரம் எழுதப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ‘அ’ மற்றும் ‘இ’ அட்டவணை சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு சாதகமாக முழுமையாக செட்டில்மென்ட் செய்யப்பட்டுள்ளதா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை என்றும் கூறப்பட்டது. ‘அ’ அட்டவணை சொத்தைப் பொறுத்தவரை, அது

பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் மற்றும் ராம போயன் ஆகியோரால் 04.11.1947 நாளிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் வாங்கப்பட்டதாலும், ராமபோயனின் மரணத்திற்குப் பிறகு பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் அச்சொத்துக்களின் முழுமை யான உரிமையாளராக மாறினார் என்பதாலும்; அவர் 05.07.1996 நாளிட்ட உயில் ஒன்றை எழுதியிருந்தபோதிலும், பின்னர் 2-வது பிரதி வாதிக்கு சாதகமாக மற்றொரு செட்டில் மென்ட் பத்திரத்தை எழுதியுள்ளார் என்றும், அது சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப் படவில்லை என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே, 'அ' அட்டவணை சொத்தைப் பொறுத்த வரை, வாதி, 1 மற்றும் 2-வது பிரதிவாதிகள் ஆகிய ஒவ்வொருவரும் பிரிக்கப்படாத 1/3 (மூன்றில் ஒரு) பங்குக்கு உரிமை உடைய வர்கள் என்றும், அதனால் அது பாகப்பிரிவினைக்கு உரியது என்றும் அவதானிக்கப்பட்டது.

12. அதேபோல், 'இ' அட்டவணை சொத்தைப் பொறுத்தவரை, அது பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் பெயரில் 02.02.1970 அன்று பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் வாங்கப்பட்டது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மீண்டும், உயிலும் செட்டில்மென்ட் பத்திரமும் சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப் படாததால், இரண்டு ஆவணங்களும் நிராகரிக்கப் பட்டு, அவரது மரணத்திற்குப் பிறகு அந்த சொத்து வாதி, 1 மற்றும் 2-வது பிரதிவாதி களுக்கு சம பங்குகளாகச் சென்றடைந்தது என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இவ்வாறாக, 'அ' மற்றும் 'இ' அட்டவணை சொத்துக்களைப் பொறுத்தவரை, வாதி பிரிக்கப் படாத 1/3 (மூன்றில் ஒரு) பங்குக்கு உரிமை உடையவர் என்று அவதானிக்கப்பட்டது. 'ஆ' அட்டவணை சொத்தைப் பொறுத்தவரை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. 'ஆ' அட்டவணை சொத்தானது எந்தவொரு பாகப்பிரிவினைக்கும் உட்பட்ட பொருளாக இருக்க முடியாது என்று மிகவும் திட்டவட்டமாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. மேற்படி நிபந்தனைகளின்படி வழக்கு பகுதி தீர்ப்பளிக்கப் பட்டது.

மேல்முறையீட்டு வழக்கு எண் 90 / 2006 (முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோவை):

13. பிரதிவாதிகள் இந்த மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்தனர். 'ஆ' அட்டவணை சொத்து தொடர்பாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக வாதி தரப்பில் எந்தவொரு மேல்முறையீடும் தாக்கல் செய்யப் படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், 06.01.2009 நாளிட்ட தனது தீர்ப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41 விதி 30-இன் கீழ் பரிசீலனைக்கான அம்சங்களை வரைவு செய்தது. மீண்டும் சாட்சியங்கள் கவனமாக பகுப்பாய்வு செய்யப் பட்டன. உயில் மற்றும் செட்டில்மென்ட் பத்திரங்கள் ஆகிய இரண்டுமே சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப்பட வில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மேலும், இந்த ஆவணங்கள் சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப்படாததால், பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாள் இறந்த தேதியில் 'அ' மற்றும் 'இ' அட்டவணை சொத்துக்கள் அவரது கைவசமே இருந்ததாகக் கருதப்பட வேண்டும் என்றும், அவர் எவ்வித உயிலும் எழுதாமல் காலமானார் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே, 'அ' மற்றும் 'இ' அட்டவணை சொத்துக்களைப் பொறுத்தவரை, வாதியும் பிரதிவாதிகளும் தலா ஒரு பிரிக்கப் படாத 1/3 பங்குக்கு உரிமை உடையவர்கள் என்று மேலும் தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும், 'ஆ' அட்டவணை சொத்து குறித்து மதிப்புமிக்க விசாரணை நீதிமன்ற நீதிபதியின் அவதானிப்பு களில் எந்தவொரு தலையீடும் செய்யப்பட வில்லை. எனவே, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், 'அ' மற்றும் 'இ' அட்டவணை சொத்துக்களுக்கு மட்டும் பிரிக்கப்படாத 1/3 பங்கினை பாகப்பிரிவினை செய்து தனி சுவாதீனம் ஒப்படைப்பதை உறுதி செய்தும், 'ஆ' அட்டவணை சொத்து தொடர்பான வழக்கு தள்ளுபடியை உறுதி செய்தும், இந்த மேல் முறையீட்டை தள்ளுபடி செய்தது.

இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு எண். 575/2009:

14. அந்த தீர்ப்பினை எதிர்த்து, பிரதிவாதிகள் தற்போதைய இந்த இரண்டாம் மேல்முறை யீட்டை தாக்கல் செய்துள்ளனர்.

15. மேல்முறையீடு நிலுவையில் இருந்த காலத்தில் பிரதிவாதிகள் காலமானார்கள் என்பதும், அவர்களது சட்டப்பூர்வ வாரிசுகள் மேல்முறை யீட்டாளர்கள் 3 முதல் 7 வரை வழக்கில் சேர்க்கப் பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேல் முறையீடு நிலுவையில் இருந்தபோது எதிர்மனு தாரரும் காலமானார். அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் எதிர்மனுதாரர்கள் 2 முதல் 4 வரை வழக்கில் சேர்க்கப்பட்டனர்.

16. முன்னரே சுட்டிக்காட்டப்பட்டபடி, இந்த இரண்டாம் மேல்முறையீடானது மூன்று முக்கிய சட்டக் கேள்விகளின் அடிப்படையில் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

17. முதலாவது முக்கிய சட்டக் கேள்வி யானது, 1925 ஆம் ஆண்டின் இந்திய வாரிசு ரிமைச் சட்டத்தின் பிரிவு 63(c) மற்றும் 1872 ஆம் ஆண்டின் இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 68 ஆகியவற்றைச் சுற்றியே அமைந்து உள்ளது.

18. 1925ஆம் ஆண்டின் இந்திய வாரிசு ரிமைச் சட்டத்தின் பிரிவு 63(c) பின்வருமாறு:

‘63. சிறப்புரிமையற்ற உயில்களை நிறை வேற்றுதல்: (c) உயிலானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகளால் சான்றொப்பம் செய்யப்பட வேண்டும்; அவர்கள் ஒவ்வொரு வரும், உயில் எழுதியவர் உயிலில் கையொப்ப மிடுவதையோ அல்லது தனது குறியீட்டைப் பதிப்பதையோ நேரில் பார்த்திருக்க வேண்டும் அல்லது உயில் எழுதியவரின் முன்னிலை யிலும் அவரது வழிகாட்டுதலின்படியும் வேறொரு நபர் உயிலில் கையொப்பமிடுவதைப் பார்த்திருக்க வேண்டும் அல்லது உயில் எழுதியவரிடமிருந்து அவரது கையொப்பம் அல்லது குறியீடு குறித்த, அல்லது அத்தகைய வேறொரு நபரின் கையொப்பம் குறித்த நேரிடையான ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்; மேலும் சாட்சிகள் ஒவ்வொருவரும் உயில் எழுதியவரின் முன்னிலை யில் உயிலில் கையொப்பமிட வேண்டும், ஆனால் ஒன்றுக்கும் மேற்பட்ட சாட்சிகள் ஒரே நேரத்தில் சமூகமளித்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை, மேலும் சான்றொப்பத்திற்கு என எந்தவொரு குறிப்பிட்ட வடிவமும் (particular form) தேவையில்லை.’

19. 1872 ஆம் ஆண்டின் இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 68–க்கு இணையான, 2023 ஆம் ஆண்டின் பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 67 பின்வருமாறு: ‘67. ஒரு ஆவணம் சட்டப்படி சான்றொப்பம் செய்யப்பட வேண்டியது அவசியமெனில், அதனை நிறைவேற்றியதை நிரூபிக்கும் நோக்கத்திற்காக, சான்றொப்பமிட்ட சாட்சிகளில் குறைந்தபட்சம் ஒரு சாட்சியாவது அழைக்கப்படும் வரை அந்த ஆவணத்தைச் சான்றாகப் பயன்படுத்தக் கூடாது; இது சான்றொப்ப மிட்ட சாட்சி உயிருடன் இருக்கும் பட்சத்திலும், நீதிமன்றத்தின் முறைப்பாட்டிற்கு உட்பட்டும், சாட்சியம் அளிக்கத் தகுதியுடையவராக இருக்கும் பட்சத்திலும் பொருந்தும்:

வரம்புரையாக: இந்தியப் பதிவுச் சட்டம், 1908 இன் விதிகளின்படி பதிவு செய்யப்பட்ட, உயில் அல்லாத எந்தவொரு ஆவணத்தையும் நிறைவேற்றியதை நிரூபிப்பதற்கு, அந்த ஆவணத்தை நிறைவேற்றியதாகக் கருதப்படும் நபரால் அது நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பாக மறுக்கப்படாத வரையில், சான்றொப்ப மிட்ட சாட்சியை அழைப்பது அவசியமில்லை.’

20. 1925ஆம் ஆண்டின் இந்திய வாரிசு ரிமைச் சட்டத்தின் பிரிவு 63(c) ஆனது, ஒரு உயில் நிறைவேற்றப்படும்போது, சான்றொப்ப மிட்ட சாட்சிகள் ஒருவருக்கொருவர் முன்னிலை யிலும், உயில் எழுதியவரின் முன்னிலையிலும் தங்களது கையொப்பங்களை இட்டனர் என்றும், உயில் எழுதியவர் கையொப்பமிடுவதை அவர்கள் பார்த்தனர் என்றும், அவர்கள் மூவரும் ஒன்றாகக் கையொப்பமிட்டனர் என்றும் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கிறது.

21. 1872 ஆம் ஆண்டின் இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 68–க்கு இணையான, 2023 ஆம் ஆண்டின் பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 67 ஆனது, உயிலை நிரூபிப்பதற்கு சான்றொப்ப மிட்ட சாட்சிகள் கண்டிப்பாக விசாரிக்கப்பட வேண்டும் என நிபந்தனை விதிக்கிறது.

22. தற்போதைய இந்த வழக்கில், கீழ் நீதிமன்றங்கள் இரண்டுமே, உயிலும் செட்டில் மென்ட் பத்திரங்களும் சட்டப்படி அறியப்பட்ட

வழிமுறைகளில் நிரூபிக்கப்படவில்லை என்ற முடிவிற்கு மிகவும் திட்டவட்டமாக வந்துள்ளன. இரண்டு ஆவணங்களும் குறியீடு செய்யப் பட்டுள்ளன. ஆனால் சான்றொப்பமிட்ட சாட்சிகள் உயில் எழுதியவரின் முன்னிலையில்தான் கையொப்பமிட்டனர் என்பதற்கான தெளிவான மற்றும் வலுவான சாட்சியங்கள் இல்லாத நிலையில், அந்த உயில் சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப்படவில்லை என்றே கண்டிப்பாகக் கருதப்பட வேண்டும். செட்டில் மென்ட் பத்திரங்களைப் பொறுத்தவரையிலும் கூட, அந்த ஆவணங்களும் சட்டப்படி அறியப் பட்ட வழிமுறைகளில் மீண்டும் நிரூபிக்கப்பட வில்லை. வழக்கு விசாரணையின் நோக்கமே, தரப்பினர் தங்களது மாற்றுத் தரப்பு வாதங்களை மெய்ப்பிப்பதற்காக நம்பகமான வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகளை முன்னிறுத்தச் செய்வதாகும். மேல்முறையீட்டாளர்கள் இந்த உயில் அல்லது செட்டில்மென்ட் பத்திரங்களை நம்பியிருக்கும் பட்சத்தில், அந்த ஆவணங் களைச் சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்க வேண்டிய சுமை அவர்கள் மீதே உள்ளது. துரதிர்ஷ்டவசமாக, சான்றொப்பமிட்ட சாட்சிகளை விசாரிப்பதன் மூலம் இந்த ஆவணங்கள் நிரூபிக்கப்படவில்லை.

23. (2023) 8 SCC 537, ரமாபாய் பத்மாகர் பாட்டீல் (காலமானார்) அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் மூலம் மற்றும் பலர் –எதிர்– ருக்மிணி பாய் விஷ்ணு வேகண்டே மற்றும் பலர் என்ற வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பின் வருமாறு தீர்ப்பளித்துள்ளது:

‘5……… ஒரு உயிலை ஏற்றுக்கொள்வது மற்றும் அதனை நிரூபிப்பது தொடர்பான சட்டப்பூர்வ நிலையைச் சுருக்கமாகக் கவனிப்பது பயனுள்ளதாக இருக்கும். இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 63 ஆனது சிறப்புரிமையற்ற உயில்களை நிறைவேற்றுவது பற்றிக் கூறுகிறது. உயில் எழுதியவர் உயிலில் கையொப்பமிட வேண்டும் அல்லது தனது குறியீட்டைப் பதிக்க வேண்டும் அல்லது அவரது முன்னிலையிலும் அவரது வழிகாட்டுதலின்படியும் வேறொரு நபரால் அது கையொப்பமிடப்பட வேண்டும் என்று அது குறிப்பிடுகிறது. மேலும், அந்த உயிலானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகளால் சான்றொப்பம் செய்யப்பட வேண்டும் என்றும், அவர்கள் ஒவ்வொருவரும் உயில் எழுதியவர் கையொப்பமிடுவதையோ அல்லது தனது குறியீட்டைப் பதிப்பதையோ நேரில் பார்த்திருக்க வேண்டும் அல்லது உயில் எழுதியவரின் முன்னிலையிலும் அவரது வழிகாட்டுதலின்படியும் வேறொரு நபர் உயிலில் கையொப்பமிடுவதைப் பார்த்திருக்க வேண்டும் என்றும், சாட்சிகள் ஒவ்வொருவரும் உயில் எழுதியவரின் முன்னிலையில் உயிலில் கையொப்பமிட வேண்டும் என்றும் அது மேலும் விவரிக்கிறது. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 68, ஒரு உயில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இல்லா விட்டாலும், அதனை நிரூபிப்பதற்குச் சான்றொப்ப மிட்ட சாட்சிகளில் ஒருவரை கண்டிப்பாக விசாரிக்க வேண்டும் என உத்தரவிடுகிறது. உயிலை அடிப்படையாகக் கொண்ட ஒரு வழக்கை அணுகும்போது, அதை நிரூபிக்கும் முறை மற்றும் அதற்கான சுமை, அதேபோல் நீதிமன்றத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள கடமை ஆகியவை குறித்த சட்டம், இந்த நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது; எ.கா.ஏ.வெங்கடாசல அய்யங்கார் –எதிர்– B.N. திம்மாஜம்மா [AIR 1959 SC 443], ராணி பூர்ணிமா தேபி -எதிர்- குமார் கஜேந்திர நாராயண் தேப் [AIR 1962 SC 567] மற்றும் சஷி குமார் பானர்ஜி -எதிர்- சுபோத் குமார் பானர்ஜி [AIR 1964 SC 529]. இந்த நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு சஷி குமார் பானர்ஜி [AIR 1964 SC 529] வழக்கில் வழங்கிய தீர்ப்பின் தொடர்புடைய அவதானிப்பு களை இங்கு மறுபதிவு செய்வது பயனுள்ளதாக இருக்கும்: (AIR பக். 531, பத்தி 4) ‘ஒரு உயிலை நிரூபிக்கும் முறையானது, இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 63இன் மூலம் உயிலுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள சான்றொப்பம் என்ற சிறப்புத் தேவையைத் தவிர, பொதுவாக மற்ற ஆவணங்களை நிரூபிக்கும் முறை யிலிருந்து வேறுபடுவதில்லை. உயிலை நிரூபிக்கும் சுமை அதை முன்னிறுத்துபவர் மீதே உள்ளது; மேலும் உயில் நிறைவேற்றப் பட்டதைச் சுற்றி எவ்வித சந்தேகத்திற்குரிய

சூழ்நிலைகளும் இல்லாதபட்சத்தில், சட்டப்படி தேவைப்படும் உயில் சாசனத் தகுதி மற்றும் உயில் எழுதியவரின் கையொப்பம் ஆகிய வற்றை நிரூபிப்பதே அந்தச் சுமையிலிருந்து விடுபட போதுமானதாகும். எனினும், சந்தேகத் திற்குரிய சூழ்நிலைகள் இருக்கும் பட்சத்தில், அந்த உயிலை உண்மையானது என்று நீதிமன்றம் ஏற்கும் முன்பாக, நீதிமன்றம் திருப்தியடையும் வகையில் அச்சூழ்நிலைகளை விளக்க வேண்டிய சுமை அதை முன்னிறுத்து பவரையே சாரும். வற்புறுத்தல், மோசடி மற்றும் மிரட்டல் ஆகியவற்றை எதிர்ப்பவர் குற்றம் சாட்டும்போது, அதை நிரூபிக்கும் சுமை அவர் மீதே உள்ளது. அத்தகைய வாதங்கள் இல்லாத போதும், சூழ்நிலைகள் சந்தேகங்களை எழுப்பும் பட்சத்தில், நீதிமன்றத்தின் மனசாட்சியைத் திருப்திப் படுத்த வேண்டியது அதை முன்னிறுத்துபவரின் கடமையாகும். சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகள் என்பது உயில் எழுதியவரின் கையொப்பத்தின் உண்மைத்தன்மை, உயில் எழுதியவரின் மனநிலை, உயிலில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்புடைய சூழ்நிலைகளின்படி இயற்கைக்கு மாறானதாக, சாத்தியமற்றதாக அல்லது நியாய மற்றதாக இருப்பது போன்றவையாக இருக்க லாம் அல்லது உயில் எழுதியவரின் மனநிலை சுதந்திரமாக இல்லை என்பதைக் காட்டும் இதர அறிகுறிகள் உயிலில் இருக்கலாம். அத்தகைய வழக்கில், அந்த ஆவணத்தை உயில் எழுதிய வரின் கடைசி உயிலாக ஏற்கும் முன்பாக, அனைத்து நியாயமான சந்தேகங்களும் முழுமையாக அகற்றப்பட வேண்டும் என்று நீதிமன்றம் இயல்பாகவே எதிர்பார்க்கும். கணிசமான பலன்களைத் தனக்கு அளிக்கும் உயிலை நிறைவேற்றுவதில் அதை முன்னிறுத்து பவரே பங்கேற்றிருந்தால், அதுவும் கணக்கில் கொள்ளப்பட வேண்டிய ஒரு சூழ்நிலையாகும்; மேலும், அதை முன்னிறுத்துபவர் தெளிவான மற்றும் திருப்திகரமான சாட்சியங்கள் மூலம் அந்த சந்தேகங்களை அகற்ற வேண்டும். சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகளை அகற்றுவதில் அதை முன்னிறுத்துபவர் வெற்றி பெற்றால், அந்த உயில் இயற்கைக்கு மாறானதாகவும், நெருங்கிய உறவினர்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ புறக்கணிப்பதாகவோ இருந்தாலும் கூட, நீதிமன்றம் உயில் மெய்ப்பிப்புப் பத்திரத்தை வழங்கும்.''

24. அந்த குறிப்பிட்ட உண்மையைக் கருத்தில் கொண்டு, உயிலும் செட்டில்மென்ட் பத்திரங் களும் சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப்படவில்லை என்றும், இந்த வழக்கின் மேல்முறையீட்டாளர்கள் 1925 ஆம் ஆண்டின் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 63(c) மற்றும் 2023 ஆம் ஆண்டின் பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 67/1872ஆம் ஆண்டின் இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 68 ஆகிய விதிகளின் கீழ் உள்ள நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறி விட்டனர் என்றும் கீழ் நீதிமன்றங்கள் இரண்டுமே சரியாகவே முடிவுக்கு வந்துள்ளன என்று நான் தீர்ப்பளிக்கிறேன். இந்த முக்கிய சட்டக் கேள்விக்கு அதற்கேற்ப விடையளிக்கப்படுகிறது.

25. இரண்டாவது முக்கிய சட்டக் கேள்வி யானது, உயில் எழுதியவரின் வயது தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காகவும், அவரது மகன்களில் ஒருவரைப் பெரியவர் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக மைனர் என்று குறிப்பிட்டுள்ளார் என்ற காரணத்திற்காகவும் அந்த உயில் நிராகரிக்கப்பட்டது தொடர்பானது ஆகும். குறிப்பாக ஒரு தாயால் எழுதப்படும் போது, உயிலின் உள்ளடக்கங்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. தனது சொந்தக் குழந்தைகளைப் பற்றி தவறான விவரக் குறிப்புகள் இருக்க முடியாது. இந்த உயில் பட்டியம்மாள் என்கிற அம்மாசியம்மாளால் நிறைவேற்றப் பட்டது. அவர் 1-வது பிரதிவாதியைத் தனது மைனர் மகன் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் உண்மையில் அவர் வயதிற்கு வந்தவராக இருந்தார். இது உயிலின் முகப்பிலேயே காணப் படும் மிக முக்கியமான ஒரு பிழையாகும். ஆவணங்கள் சட்டப்படி அறியப்பட்ட வழிமுறை களில் நிரூபிக்கப்பட வேண்டும் என்பது மட்டு மின்றி, உயில் எழுதியவர் நல்ல மற்றும் தெளிவான மனநிலையில் இருந்தபோதுதான் அந்த ஆவணங்களை நிறைவேற்றினார் என்பதும் நிரூபிக்கப்பட வேண்டும். நல்ல

மற்றும் தெளிவான மனநிலையில் இருந்த போதுதான் உயில் நிறைவேற்றப்பட்டதா என்பதைத் தீர்மானிக்கும் இதர அம்சங்களில், அவரது சொந்தக் குடும்ப உறுப்பினர்களைப் பற்றிய சரியான மற்றும் துல்லியமான விவரக்குறிப்பும் ஒன்றாகும். வயது அல்லது பிற அம்சங்களில் தவறான விவரக்குறிப்பு இருக்கும்போது, ஆவணங்களை நிறைவேற்றியதைச் சுற்றி ஒரு வலுவான சந்தேகம் எழுகிறது. இந்த உயிலின் கீழ் எவ்வித உரிமையும் கிடைக்கப் பெறவில்லை என்றும், அது சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப்படவில்லை என்றும் கீழ் நீதிமன்றங்கள் இரண்டுமே சரியாகவே நிராகரித்துள்ளன என்று நான் தீர்ப்பளிக்கிறேன்.

26. மூன்றாவது முக்கிய சட்டக் கேள்வியானது, சா.ஆ.ஆ4 மற்றும் ஆ5 ஆகிய தானப் பத்திரங்கள்/அறுதியாவணப் பத்திரங்களின் மூலம் பலன் பெற்றவர்கள் அதன்படி செயல்பட்டு அனுபவித்து வந்த போதிலும், அவற்றின் செல்லுபடித்தன்மையை ஆராய்வது தொடர்பானது ஆகும். எனினும், ஒரு தரப்பால்–இந்த வழக்கில், எதிர்மனுதாரர்கள்/வழக்கின் வாதியால்–அந்த ஆவணங்கள் மறுக்கப்பட்டு, எதிர்க்கப்படும் போது, அந்த ஆவணங்களை நம்பியிருக்கும் தரப்பினர் மீது அவற்றைச் சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்க வேண்டிய கடமை சுமத்தப்படுகிறது. சான்றொப்பமிட்ட சாட்சிகள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் விசாரிக்கப்படும் போது வலுவான சாட்சியங்களை வழங்கியிருக்க வேண்டும். ஆவணங்கள் சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப்படாத பட்சத்தில், அவை நிறைவேற்றப்பட்டதே சந்தேகத்திற்குரியதாகி விடுகிறது. அத்தகைய ஆவணங்களிலிருந்து எவ்வித உரிமையும் கிடைக்கப் பெற முடியாது. ஆவணங்கள் நிறைவேற்றப்பட்டதற்கான ஆதாரத்தை வற்புறுத்தியதில் கீழ் நீதிமன்றங்கள் முற்றிலும் சரியாகவே செயல்பட்டுள்ளன; மேலும் அத்தகைய ஆதாரம் இல்லாத நிலையில், மேற்படி ஆவணங்களை நிராகரித்ததும் சரியானதே ஆகும்.

27. உயில் அல்லது செட்டில்மென்ட் பத்திரங்களை நிரூபிப்பதற்கான சாட்சியங்களை முன்னிறுத்த, வழக்கு விசாரணையின் போது தங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பது மேல்முறையீட்டாளர்களின் வாதம் அல்ல. மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் ஐந்து சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேல்முறையீடு நிலுவையில் இருந்த காலத்தில் பின்னர் காலமான இரண்டு மேல்முறையீட்டாளர்களுமே சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எ.த.சா1 மற்றும் சா.5 ஆக விசாரிக்கப்பட்டனர். ஆனால், அப்படியிருந்தும் அவர்கள் அந்த உயிலையோ அல்லது செட்டில்மென்ட் பத்திரங்களையோ சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கவில்லை.

28. சா.ஆ.ஆ4 மற்றும் ஆ5 ஆகிய தானப் பத்திரங்கள்/செட்டில்மென்ட் பத்திரங்களின் மூலம் பலன் பெற்றவர்கள் அதன்படி செயல்பட்டிருக்க முடியும் என்ற போதிலும், அவை சட்டப்படி அறியப்பட்ட வழிமுறைகளில் நிரூபிக்கப்படாததால், அவற்றின் செல்லுபடித்தன்மையை ஆராய்ந்ததும், அவற்றை நிராகரித்ததும் கீழ் நீதிமன்றங்களின் நியாயமானதே என்று நான் தீர்ப்பளிக்கிறேன். ஆவணங்கள் நிரூபிக்கப்படாத வரையில், அதன் மூலம் பலன் பெற்றவர்களுக்கு எவ்வித உரிமையும் சென்றடையாது.

29. மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில், விசாரணை நீதிமன்றம் மற்றும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆகிய இரண்டின் தீர்ப்புகளையும் மறுபரிசீலனை செய்யவோ அல்லது அவற்றில் தலையிடவோ எந்தவொரு காரணமும் இல்லை என்று நான் தீர்ப்பளிக்கிறேன். விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புகள் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் முழுமையாக உறுதி செய்யப்பட்டுள்ளன. இந்த இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது; எனினும், தரப்பினருக்கு இடையேயான உறவினைக் கருத்தில் கொண்டு, எவ்வித வழக்குச் செலவும் இன்றி தள்ளுபடி செய்யப்படுகிறது. இதன் விளைவாக, இதனுடன் தொடர்புடைய இடைக்கால மனுவும் முடிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# நிலம் கையகப்படுத்துதலும் அதில் அரசாங்கங்களுக்கான அதிகாரமும்

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி டாக்டர் அனிதா சுமந்த்
மாண்புமிகு என்.செந்தில்குமார்
நீ.பே.மே.எண்கள் 3372, 3374/2023 மற்றும் உ.ப.ம. எண் 8885/2024
உ.ப.ம.எண் 13470/2025, உ.சீ.ம.க்கள் 27574, 27547, 27560/2023
**[2025 MHC 1590] 3.6.202**
**2025 (6) CTC 754**

தமிழ்நாடு அரசாங்கம் சார்பாற்றம்,
அதன் வருவாய்த் துறை செயலாளர்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009.

2. மாவட்ட வருவாய் அலுவலர், (D.R.O.)
திருவள்ளுவர், திருவள்ளூர் மாவட்டம்

3. வட்டாட்சியர், பொன்னேரி தாலுகா,
திருவள்ளூர் மாவட்டம்

...மேல்முறையீட்டாளர்கள்

–எதிர்–

விதேஷ் சஞ்சார் நிகம் பணியாளர்கள் கூட்டுறவு
வீட்டு வசதி சார்பாற்றம் அதன் தலைவர்,
ஜோசப் மனோகரன் எண் 4, சுவாமி சிவனாந்த சாலை, சென்னை–600 002
2. ஹெமிஸ்பியர் பிராப்பர்ட்டீஸ் இந்தியா வரையறுக்கப்பட்டது. அறை எண் 144சி பிரிவு, நிர்மான் பவன், மௌலான ஆஸாத் ரோடு, புது தில்லி–110 001 (சார்பாளர் ஆர்2 விரிவான நீதிமன்ற ஆணை 22.2.2022 தேதியிடப்பட்டது. இது உ.ப.ம.எண் 878, 879/2019இல் செய்யப்பட்டதன் சார்பாற்றம் எண் (W.A.S.R. எண்கள் 107562, 107563/2018) 3. பி.கே. சிங்கல் நகர் பிளாட், பிளாட் சொந்தக் காரர்கள் சங்கம், பாடியநல்லூர் சார்பாற்றம் அதன் தலைவர், கே. முத்துசாமி, பிளாட் எண் 81, எம்.ஜி.ரோடு, பி.கே.சிங்கல் பாடியநல்லூர், சென்னை–600 052. (R3 இடையீட்டாளராக்கப்பட்டார். விரிவான நீதிமன்ற ஆணை 12.3.2025 தேதியிடப் பட்டது. இது உ.ப.ம.எண் 14359/2024 நீ.பே.மே.எண் 3372/2023இல் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

...எதிர்வழக்கீட்டாளர்கள்

பி.எஸ்.ராமன், உதவி வழக்கறிஞருக்கு, ஏ. செல்வேந்திரன் உதவி, சிறப்பு அரசு வழக்குரைஞர் மேல்முறையீட்டாளர்கள் எண் 1 முதல் 3 வரையிலானவர்களுக்கு நீ.பே.மே. எண்கள் 3372/3374/2023 எதிர்வழக் கீட்டாளர் எண் 1 முதல் 3 வரை உ.ப.ம.எண் 8885/2024 இல் உள்ளனர். எஸ்.முகுந்த் எதிர்வழக்கீட்டாளர் எண் 4இல் வழக்கறிஞர் மனுதாரரின் எண் வழக்கறிஞர் உ.ப.ம.எண் 8885/2024இல்

ஏ. ரெக்ஸி ஜோசப்பின் மேரி, எதிர் வழக்கீட்டாளர் எண் 4இன் வழக்கறிஞர்

உ.ப.ம.எண் 8885/2024க்கு ஏ.ஆர்.எல். சுந்தரேசன், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.செல்லா விசாலஷ்மி அஸ்வின் ஸ்னபக் எதிர் வழக்கீட்டாளர் எண் 5இன் வழக்கறிஞர்கள் உ.ப.ம.எண்கள் 3372/3374/2023 சி.மோகனுக்கு உதவி ஏ.ரெக்ஸி ஜோசப்பின் மேரி, கிங் அண்டு பாட்ரிஜ், நீ.பே.மே.எண் 3372/3374/2023 வித்யா விருக்ஷா வுக்காக. சட்ட வழக்கறிஞர் எதிர்வழக்கீட்டாளர் எண் 1இல் நீ.பே.மே.எண் 3374/2023.

நீ.பே.மனுக்கள் வரை செய்யப்பட்டன உ.ப. ம.8885/ தள்ளுபடி ப.ம.க்கள் முடிக்கப்பட்டன.

கோரிக்கை: நீ.பே.மே.எண் 3372/2023 மேல்முறையீடு முன்னிடப்பட்டது. நீ.பே.ம.,எண் 23740/2014 கோப்பில் நீதிமன்றத்தில் உள்ளது. இதற்கு எதிராக 2.3.2017 தேதியிட்ட கூறு 15இன்படியான உரிமைப் பட்டய மேல் முறையீடு.

நீ.பே.மே.எண் 3374/2023, நீ.பே.ம. எண் 23739/2014 நீதிமன்ற கோப்பில் உள்ள விதி 2.3.2017 தேதியிடப்பட்ட கூறு 15இன்படியான உரிமைப்பட்டய மேல்முறையீடு.

உ.ப.ம.எண் 8885/2024 உ.வி.தொ.ச.இன் விதி 10(2) உடன் சேர்த்து வாசிக்கப்படுகிற பிரிவு 151இன் கட்டளை 1இன் விதி 10(2)இன் படி முன்னிடப்பட்ட மனு.

## தீர்ப்பு

**டாக்டர் அனிதா சுமந்த், நீதிபதி**

1. இந்த நீதிப்பேராணை மேல்முறையீடுகள் மாநிலத்தின் மாவட்ட வருவாய் அலுவலரால் (D.R.O.)வினாலும் தாசில்தார் (வட்டாட்சியர்) பொன்னேரி தாலுகாவில் இருந்து முன்னிடப் படவில்லை. இதில் பிறப்பிக்கப்பட்ட பொது ஆணையை எதிர்த்து முன்னிடப்படுகிறது. இது நீதிப்பேராணை நீதிமன்றத்தால் 2.3.2013 தேதியிடப்பட்ட நீ.பே.மனு எண் 23739/2014இல்படி செய்தித் தொடர்பு வரம்பிடப் பட்டதின் (சுருக்கமாக TCL) மற்றும் நீ.பே.ம.எண் 23740/2014 இது. விதேஷ் சந்தார். நிலவரம் பணியாளர்களின் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் பெறப்பட்டது.

2. நீதிப்பேராணைகளின் கோரிக்கையாவது, பதிவுக் கட்டுகளைக் கொணர்க என்றும் வலியுறுத்தும் பேராணை 6.6.2011 தேதியிட்ட மா.வ.அ.இன் நடைமுறைகளை எதிர்ப்பது மற்றும் நி.அ.எண் 165/2 மற்றும் 56இல் பாடியநல்லூர் கிராமத்தில் பொன்னேரி தாலுகா வில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள (சொத்து) கேள்வியில் உள்ள சொத்து நுதல் பொருளான சொத்து) நீதிப்பேராணை மனுதாரரின் பெயரில் நம் முன்பு உள்ளது.

3. நீதிப்பேராணை மனுக்கள் 2.3.2017 அன்று அனுமதிக்கப்பட்டன. இதில் எதிர் வழக்கீட்டாளர்கள் தேவையான மாற்றத்தை வருவாய்த்துறை பதிவேடுகளில் செய்து கொள்ளவும். பட்டாவில் முதலில் இருந்த பெயரையே மீண்டும் கொண்டு வரவும். நீதிப் பேராணை நீதிமன்றம், மேலும் கூறுவதாவது சமுதாயத்தில், உறுப்பினர்கள் அவர்களது பெயர் களைப் பட்டாவில் போட்டுக் கொள்ள உரிமை யுடையவர்கள் ஆவர். இதற்கு எதிராக மாநிலமே மேல்முறையீட்டினை முன்னிட்டுள்ளது.

4. திரு.பி.எஸ்.ராமன், அரசு வழக்கறிஞர் திரு.ஏ.செல்வேந்திரன், சிறப்பு அரசு வழக்குரைஞர் மேல்முறையீட்டாளர், திரு.சி.மோகன், உதவு பவர் மிசஸ் ஏ. ரேவி, ஜே.சபியன் மேரி, திரு.அக்வின், ஷன்பாக் மற்றும் மிசஸ் சீலா விசாலஷ்மி ஹெமிஸ்பியர் புராசப் ரைட்டரி இந்தியா வரம்பிடப்பட்டது. ஆர்2 (சுருக்கமாக ஹெமிஸ்பியர்) உரித்தம் பெறுநர் (GOL) இன் இடையீட்டாளர் 8.3.2022 முதல் மற்றும் திரு. முகுந்த் சாம் ஜெயராஜ் ஹவுஸ்டனுக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர், மனுதாரரின் வழக்கறிஞர் (OCS) எண் 8885/2024 உடையது.

5. அனைத்து வழக்கறிஞர்களும் கேட்டறிந்து நாம் கண்டறிவது, இதில் பல்வேறு கோரிக்கைகள் உள்ளன. இவை நுதல் பொருளுக்கு எதிராக முன்னிடப்படுகின்றன மற்றும் அவ்வாறே, நாம் ஏற்கப்பட்ட தேதிக்கேற்ப இவற்றை பிரித்து ள்ளோம் மற்றும் இவை நிகழ்வுகளாக 5 பிரிவு களாக்கப்பட்டுள்ளதை அவை பின்வருமாறு.

**பிரிவு ஆ**

i) 1.1.1947 அன்று, இந்தியா வானொலி மற்றும் தொலைத் தொடர்பு நிறுமம் வரையறுக்கப்பட்டது. இந்தியாவின் வெளியுறவு தொலைத் தொடர்பாகச் செயற்படுகிறவை இந்திய அரசால் (GOL) எடுத்துக் கொள்ளப்பட்டது மற்றும் அதன் பின்னர், இது ஏகச் செயற் படுகிறவை இந்திய அரசால் (GOL)இன் ஒரு துறையாக கடல் கடந்த செய்தி பரிமாற்றம் பணியாக செயற்பட்டது (OCS).

ii) 29.3.1954 அன்று, சென்னை அரசு விரிவு குறிப்பாணை எண் 47800/C/52-14 நில உரிமை மாற்றத்திற்கு ஒப்புதல் அளித்தது. அதன் அளவு 85-94. அதாவது வானொலி தொலைதொடர்பு மற்றும் வானொலி, தொலைபேசி பெறும் நிலையமாகச் செயற்பட.

iii) 5.3.1960 அன்று நிலையம் திறக்கப் பட்டது.

iv) இவை தொடர்பாக வருவாய் ஆவணங்கள், விவரிப்பு பட்டியல் எண் 8, பாடியநல்லூர்

கிராமம் பொன்னேரி தாலுகா செங்கல்பட்டு மாவட்டம் 14.5.1962 அன்று இதின் எதிரொலி யாக நுதல் பொருள் மைய அரசின் அரசு நிலம்.

v) 28.1.2008 அன்று இதன் பெயர் மாற்றம் ஏற்பட்டது. VSNLஇல் இருந்து TCL ஆக மற்றும் 31.10.2008 இதற்கான இசைவுக் கடிதம் அளிக்கப்பட்டது. செய்திப் பரிமாற்ற அமைச்சகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் செயலாளர் வருவாய்த் துறைக்கு தமிழ்நாடு அரசாங்கத்திற்கு பட்டா வழங்கக் கோரி, அதாவது TCL சார்பாக. நுதல் பொருள் பொருத்தபட்டா.

vi) 27.1.2009, 2.7.2009 பிந்திய தேதிக்காக தகவல் தொடர்பாக இடையீட்டு பரிமாற்றம் மாநில அரசு அலுவலர்கள் மூலம் பட்டா வருவாய்த் துறையால் வழங்கப்பட்டது. திருவள்ளூர் மாவட்டம் TCLஇன் சார்பாக அரசு வழக்குரைஞர் மூலமாக, இதன் இடைவிளை வாக, மாநிலத்தின் வட்டாட்சியர் பட்டா வழங்க உரிய அதிகாரி அல்ல என்பது. TCLஇன் உரிமையை மாநில அரசு பூசலாக்கவில்லை. இது தொடர்பாக நுதல் பொருள். நாம் இதனை நீர்க்கச் செய்துள்ளோம். இந்த பொருட்பாடு இந்தக் கட்டளையின் பத்திகள் 6 முதல் 9 வரையில் உள்ளன. சுருக்கமாக, இந்த சூழலில் நாம் கூற வேண்டியதாவது இதில் மாநில அரசால் எதிர்ப்பு எதுவும் செய்யப்படவில்லை என்பது. அதாவது உய்தி வழங்க TCLஇனால் கோரப்பட்டவாறான உய்தி.

**பிரிவு ஆ**

i) 27.3.1986 அன்று, OCS(க.செ.ப.) விதேஷ் சன்சார் நிகாம் வரையறுக்கப்பட்டதற்கு உரிமை மாற்றும் செய்யப்பட்டது) (வி.ச.நி.வ.) 1.4.1986 அன்று உரிமை மாற்றும் இது முழுமையான GOLஆக அதனால் சொத்து முழுமையாக கொண்டாடப்பட்டது.

ii) 4.10.1995 அன்று, (வி.ச.நி.வரெ) செங்கல்பட்டு சிலருக்கு மனு அளித்தது. அதில் பெயர் மாற்றம் கோரப்பட்டது. அதாவது நுதல் பொருளுக்கு அது சாற்றும் கொண்டாடியது. அதனை GOL தொழில் நிறுவனம்) VSNL மூலமாக கோரியுள்ளது. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர், மூலமாக பொன்னேரி தாசில்தார் (வட்டாட்சியர்) தேவையானதைச் செய்வதற்காகவும் இவர்களிடையே தகவல் பரிமாற்றத்திற்காகவும் ஏற்பட்டது. தரப்பினர்களின் பதவி பெயர் மாற்றத்துடன் ஏற்படுத்தப்பட்டது. இது அரசு வழக்கறிஞரால், ஏவுரைகளின்பேரில் உறுதி செய்யப்பட்டது.

iii) உரிமையியல் நீதிப்பேராணை மனு எண் 12002/2006 (VSNL) (வி.ச.நி.வரை)தினால் முன்னிடப்பட்டது. இதில் சொத்து பற்றிய நுதல் பொருளாவது, அதன் பெயரில் 32.5 ஏக்கர் நிலத்தினை உரிமை மாற்றம் கோருவது தொடர்பானது. தில்லி நீதிமன்றத்தினால் 17.5.2007 அன்று ஆணை ஒன்று மாற்றம் பிறப்பிக்கப்பட்டது. இதில் வி.ச.நி.வரையினை 32.5 ஏக்கர் நிலத்தினை உரிமை மாற்றம் செய்ய பணிக்கப்பட்டது அதாவது சமுதாயம் சார்பாக இது உ.ப.மே.எண் 1252/2007 தில்லி உயர்நீதிமன்றம் நீதியர் ஆயத்தினால் 29.4.2008 அன்று உறுதி செய்யப்பட்டது.

iv) சமுதாயத்தின் கோரிக்கையை, நீதிப் பேராணை நீதிமன்றம் ஏற்றது மற்றும் திரு. சி.மோகன் சமுதாயத்தின் வழக்கறிஞர் 22.7.2009 தேதியிட்ட விற்பனை ஆவணத்தை உறுதியுடன் செய்துள்ளார். இது தொடர்பாக 32.5 ஏக்கர் நிலம் ரூ.1,29,89,158 மறுபயனுக்காக சொத்து உரிமை மாற்றும் செய்யப்பட்டு சமுதாயம் சார்பாக பட்டாவும் வழங்கப்பட்டது.

**பிரிவு இ**

i) மு.வ.எண் 35/1998 பி. வெங்கடராவ் என்பவருக்கு எதிராக (வி.ச.நி.வ.)இன் வருவாய்த் துறை மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டத்தால் மற்றும் வட்டாட்சியர் பொன்னேரி யினால் பொன்னேரி மாவட்ட முனிசீப் நீதிமன்றம் முன்பு முன்னிடப்பட்டது. இதன் கோரிக்கை யாவது வி.ச.நி.ப.வினால் சுற்றுச் சுவர் எழுப்பப் படாதிருக்குமாறு நிலையான தடையுறுத்து ஆணை வழங்க கோரப்பட்டது.

ii) வழக்கு நடப்பில் உள்ளபோது, இடை நிலை விண்ணப்பம் இ.வி.எண் 995/2009 பி.வெங்கடராவ் என்பவராக முன்னிடப்பட்டது. இடைக்காலத் தடை உத்தரவு கோரப்பட்டது. அதாவது எதிர்வாதிகளால் சுற்றுச் சுவர் அமைக்கப்படுவதை தடை செய்ய சொல்லப்பட்ட இடைக்கால விண்ணப்பம் 23.10.2009 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இதற்கு எதிராக உ.சீ.ம.(PA) எண் 119/2010 முன்னிடப்பட்டது. பி. வெங்கடராவினால் TCLக்கு எதிராக முன்னிடப்பட்டது. இது கடைசியில் 23.7.2010 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த ஆணை அறுதி நிலையை பெற்றது.

iii) வழக்கானது 11.2.2011 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இதன் மேல்முறையீடு வெங்கடராவினால் துணை நீதிமன்றம் பொன்னேரியில் முன்னிடப்பட்டது. மே.வ.எண் 70/2011. இது 12.4.2024 அன்று அனுமதிக்கப் பட்டது. ஒரு இரண்டாம் மேல்முறையீடு இ.மே. எண் 935/2024 ஹெமிஸ்பியரினால் முன்னிடப் பட்டது. TCL உரித்தம் பெறும் வழித்தோன்றல் இது நீதிமன்றத்தின் முன்பு நடப்பில் உள்ளதாக கூறப்பட்டது. இந்த நிகழ்வுகளுக்கு இன்னும் முடிவு காணப்படவில்லை.

(iv) நுதல்பொருள் தொடர்பான நடவடிக்கை களினால் குறையுற்றவர் பற்றிய விவரங்கள் நம்மிடம் கிடைக்கத்தக்கதாக இல்லை. A.K.K. இளங்கோவன், பி. வெங்கடராவ், ஒரு சீராய்வு மனுவை முன்னிட்டுள்ளார். பி. வெங்கடராவ் சார்பாக ஏ.கே.கே. இளங்கோவன் முன்னிலை யாகி ஒரு சீராய்வு மனுவினை 5.5.2010 மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி திருவள்ளூரில் முன்னிட்டு ள்ளவை. நம் முன்பு வைக்கப்பட்ட பதிவேடு களில், மே 2010 தேதியிடாத அறிவிப்பு மூலம் நாம் அறிவதாவது 31.5.2010 அன்று வருகை பதிவேடு கோரப்பட்டதாக இது தொடர்பாக மேலுமான நடவடிக்கைகள் நம்மால் அறியப் படவில்லை.

24.4.2010, 4.10.2012 ஆகிய தேதி களில் A.K.K. இளங்கோவன் சார்பாற்றங்கள் செய்யப்பட்டன. பி.வெங்கடராவ் சார்பாக செயற்படுவதாகக் கோரப்பட்டது. ஜன்மன் நிலங்கள் நிலங்களாக அந்த சொத்துக்கள் நுதல் பொருளாகக் கோரப்பட்டது மற்றும் ஏற்கப்பட்ட பட்டா, அவர் சார்பாக, வழங்கப்படுதல் வேண்டும். இத்தகைய சார்பாற்றங்கள் அதிக நாட்களாக நடப்பிலேயே தொடர்ந்து இருப்பதன் காரணமாக, அவர் நீ.பே.ம.எண் 11859/ 2014. இது பி. வெங்கடராவின் பகர அதிகார முகவராக்கப்பட்டு, இதனை சட்டத்திற்கிணங்க, வகை செய்ய அரசு செயலாளரைப் பணிக்கக் கோரும் செய்திடுக என்னும் பேராணையினை செயற்படுத்தக் கோரப்பட்டது.

(vi) நீதிப்பேராணை மனு தொடர்பாக 25.4.2014 அன்று ஆணையிடப்பட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது அரசுச் செயலாளர் ஏற்கனவே அறிக்கை ஒன்றை சார்பாற்றங்கள் தொடர்பாக கோரியுள்ளதாகவும், அவற்றின் நற்குறிப்புகளின்பேரில், உரிய ஆணைகளை யும் பிறப்பிக்குமாறும் சார்பாற்றங்களைக் கருதுகை செய்யுமாறும் பணிக்கப்பட்டது.

(vii) பி. வெங்கடராவ் நீ.பே.ம.எண் 16308/ 2015இனை முன்னிட்டுக் கோரியுள்ளது செய்யற்ற என்றும் நீதிப்பேராணை அதுவும் வருவாய்த் துறைப் பதிவேடுகளிலிருந்து சில நீக்கங்கள் செய்வது தொடர்பாக, அதாவது நுதல்பொருளை நிலம் தொடர்பாகவும் அவர் சார்பாக பட்டா வழங்கவும் கோரப்பட்டது.

(viii) நீதிப்பேராணை மனுவானது, உய்தி வழங்கும் மறுக்கப்பட்டு முடிக்கப்பட்டது. 25.4.2014ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட செய்யற்க என்றும் நீதிப்பேராணையின் அதிகாரி களினால் அதற்கு இணங்கப்பட முடியவில்லை என்பதை நீதிமன்றம் அறிந்தும் அதன் பின்னர், மனுதாரர், அந்தப் பொருட்பாட்டினைத் தொடராத காரணத்தினால், அவரது கோரிக்கை, விரைய மானதாகக் கருதப்பட்டது. 11.6.2015 தேதி யிட்ட ஆணையில் அளித்த விவரப்படி தெளிவாக்கப் படுவதாவது, அனைத்து தரப்பினர்களும், நிலங்கள் தொடர்பாக நுதல் பொருள் பற்றி அறிந்திருப்பதாகவும் இவை OLSக்கு முன்னே 1954இன் உரிமை மாற்றம் செய்யப்பட்டி ருப்பதாக அறிய வந்தது.

(ix) அதன் பின்னர், பி. வெங்கடராவ், நீதிப் பேராணை மேல்முறையீட்டினை நீ.பே.மே.எண் 1042/2015இல் முன்னிட்டு 11.6.2015 தேதியிட்ட ஆணையினை எதிர்த்துள்ளார் மற்றும் அதனை மீளப் பெற்றுள்ளார். அதாவது 4.8.2015 தேதியிட்ட ஆணையில், பதிவு செய்யப் பட்டு அளிக்கப்பட்டவற்றை.

(x) நீ.பே.ம.எண் 11859/2014இன் 25.4.2014 தேதியிட்ட ஆணை இணங்கி நடக்கப்படவில்லை என்று பி.வெங்கடராவ் என்ப வரால், நீதிமன்ற அவமதிப்பு மனு முன்னிடப் பட்டது மற்றும் மாநிலத்தினால் சீராய்வு விண்ணப்பங்கள் முன்னிடப்பட்டன. 25.4.2014 தேதியிடப்பட்ட சீராய்வு ஆணையினை கோருகிற சமுதாயம் 25.4.2014 தேதியிட்ட நீதிப் பேராணை இடப்பட்ட ஆணையை சீராய்வு செய்ய கோரியது. இதன் விளைவாக 25.4.2014 தேதியிட்ட ஆணை நீதிப்பேராணை மனுவில் இடப்பட்டது. மீளப் பெறப்பட்டது. இதன் மூலம் 19.1.2016 தேதியிட்ட (ஆணை பிரிவு) கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

(xi) நீ.பே.வி.எண்கள் 1903, 1918, 1919/2018 சீராய்வு விண்ணப்ப எண்கள் 192, 197, 210/2015 ஆகியவற்றிலிருந்து பிறப்பிக்கப்பட்ட ஆணையிலிருந்து எழுந்தவை. அதாவது நீ.பே.ம.எண்கள் 11859/2014, நீ.வி.வ.எண் 104222/2018. இவை A.K.K. இணங்கோவன் மற்றும் கோபால் பகர அதிகார முகவர்களால், நுதல்பொருள் சொத்தின் மீதான உரிமைகளை கோரி முன்னிடப்பட்டவை. இதில் கவனிக்க வேண்டியதாவது TCL அந்த வழக்கில் ஒரு தரப்பினர் அல்ல. இதில் பேராணை மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

(xii) சொல்லப்பட்ட வெங்கடராவ், 15.5.2017 அன்று இறந்துள்ளார். இது 27.9.2023 தேதியிட்ட வழக்கு உரிமை மூல ஆணை பிறப்பிக்கப்பட்டதில், எதிரொலிக்கப் பட்டுள்ளது.

(xiii) நம் முன்பு இறந்த பி. வெங்கடராவின் மகன் கோபால் என்பவர் இந்தக் கோரிக்கையைத் தொடர விரும்புகிறார். அதாவது தந்தையினால் தொடங்கப்பட்ட கோரிக்கையை நம் முன்பு பல்வேறு பொருட்பாடுகள் உள்ளன. அதன் அடிப்படையில், பி.வெங்கடராவின் கோரிக்கை, இருத்தி வைக்கப்பட்டு தொடருகிறது.

xiv) எனினும், மேற்கூறப்பட்ட விரிவான விவரிப்பு தொடர்பாக, நாம் கோபால் என்பவர் இதனைத் தொடர்ந்து கோருவதற்கு எந்த அருகதையும் பெற்றிருப்பதாக நம்ப முடிய வில்லை. இப்போது கோபால் என்பவரால் கூறப்பட்டவற்றில் நற்குறிப்புகள் எதுவும் உள்ளதாகத் தெரியவில்லை. இந்த நீதிமன்ற ஆயத்தினால் 27.9.2023 அன்று பிறப்பிக்கப் பட்ட ஆணையினை கருத்தில் பின்வரும் வரிசையான வரையுறைகள் உள்ளன.

“29. தற்போதைய வழக்கின் பொருண்மை கள் தொடர்பாக, 15(1)ஆம் பிரிவின் வரை யுரைகள் மற்றும் பிரிவு 15இன்படி 44.51 ஏக்கர் நிலங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளவரை மேல்முறையீட்டாளரின் தாய்/மேல்முறை யீட்டாளர் ஒரு மேல்முறையீட்டாளர் 2 மாதங் களுக்குள் செய்திருத்தல் வேண்டும். அதாவது 1957இல் பிறப்பிக்கப்பட்ட ஆணைத் தேதி யிலிருந்து 2 மாதங்களுக்குள், இந்த நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட சிறப்பு தீர்ப்பாயத்தின் முன்பு. அந்தத் தீர்ப்பாயத்திற்கும் காலதாமதத்தினை மன்னிக்க அதற்கான வழக்கு உள்ளது. அதாவது 6 மாத காலத்திற் குள்ளான காலம் என்றும் போதும். பிரிவு 15இனை செயற்படுத்துவது தொடர்பாக. இதில் மிகவும் தெளிவுபட்டிருப்பதாவது, பிரிவு 15(1)இன்படி தீர்ப்பாயத்தின் முன்பு முன்னிடப் பட்டதாவது. இதில் முன்னிடப்பட்ட நீதிமன்ற தீர்ப்பாயத்தின் முடிவே அறுதியானதாகும் என்பது மற்றும் அது எந்த வழக்காடு நீதிமன்றத்திலும் கேள்வியாக்கும் கடப்பாடு இல்லை என்பது. இந்தச் சட்டத்தின் திட்டத்தை சேர்ந்தரணையாகப் படிப்பதிலும் பல்வேறு வகை முறைகளின்படியும், அரசாங்கம் ஆணை யிடுவதாவது இதில் தெளிவாக்கப்படுவதாவது, கால வரம்புகள் சட்டத்தின் பிரிவு 5இன்படி தெளிவாக்கப்படுவதாவது எந்த விதத்திலும் தொடர்புற்றதாகாது மற்றும் சட்டம் 26/ 1998இன்படியான நடவடிக்கைகள் தொடர்பான விண்ணப்பம் தொடர்பற்றதாகிறது. ஏனெனில், இந்தச் செய்க சட்டமே ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் காலத் தாழ்வான மன்னிக்கும் நிலையை கொண்டிருக்கிறது ஏற்கப்பட்டவாறு, மேல்முறையீட்டாளரின் தாயாரோ அல்லது விண்ணப்பதாரரோ 1959இல் உதவி ஏற்பாட்டு அலுவலரினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை யினை எதிர்க்கவில்லை மற்றும் மேலுமொரு 6 மாதங்கள் கழிவுற்றன. எனவே, முடிவு செய்யப் பட்ட ஒரு பொருட்பாட்டினை மீண்டும் திறப்பது என்பதில் எந்த பயனுள்ள நோக்கமும் நிறை வேறாது. அதுவும் அதே நுதல் பொருள் தொடர்பாக சார்பாற்றம் செய்வதில் அதுவும் அதே பொருட்பாடு தொடர்பாக. இது ஒரு மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்கு ஒப்பாகும். நீதிப் பேராணை நீதிமன்றம் அதன் 25.4.2014 தேதியிட்ட முந்திய ஆணையினை சரியாகவே சீராய்வு செய்துள்ளது. நீதிமன்ற அவமதிப்பு மனு சரியாகவே முடிக்கப் பட்டுள்ளது. நீதிப்பேராணை மனு சீராய்வு செய்யப்படும்போது, எவ்வாறு வேண்டுமென்றே கீழ்ப்படியாததாக குற்றப்படுத்தப்பட முடியும். “செய்க” என்றும் அறிவுறுத்தும் பேராணை சாதாரணமாக ஒரு சட்ட உரிமையுள்ளபோது மட்டுமே இடப்படும். மனுதாரர் சார்பாக. இத்தகைய வழக்குகளில், மேல்முறையீட்டாள ராக மனுதாரர் உள்ளபோது, அதுவும் அவர் பல்லாண்டுகளாக அதன் உரிமைகளை துறந்து உள்ளார். இவர்களைப் பாதுகாக்க /காப்பாற்ற வழக்காடிகளுக்கு “செய்க” என்னும் அறிவுறுத்துப் பேராணையை நீதிமன்றங்கள் பிறப்பிக்காது.

எனவே, நீதிப்பேராணை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பொது ஆணையினை இடையீடு செய்ய எந்தக் காரணங்களையும் நாம் கண்டறிய முடியவில்லை.

(xv) கோபால் என்பவரை இடையீட்டாளராகச் சேர்க்க எந்த அவசியமும் நற்குறிப்பும் இல்லை. எனவே இது நிராகரிக்கப்படுகிறது. இத்துடன் 13 ஆண்டுகளுக்கு மேலாக வழக்காடிய பி.வெங்கடராவின் கோரிக்கைக்கு ஒரு முடிவு வந்துள்ளது.

**பிரிவு 4**

(i) 23.1.2013 தேதியிட்ட சார்பாற்றம் சுந்தரம் என்பவரால் முன்னிடப்பட்டுள்ளது மற்றும் பிறரால் இந்த நிலம் பற்றிய நுதல் பொருளின் சார்பாற்றம் 28.2.2013 அன்று நிராகரிக்கப்பட்டது. அ.ஆ.பல்.எண் 714, 29.6.1987 தேதியிடப்பட்டதின் பட்டியலைப் பின்பற்றி இதற்கு எதிராக, நீ.பே.ம.எண் 9004/2013/2013 சுந்தரம் மற்றும் பிறரால் முன்னிடப்பட்டது. இதில் முதலில், (பா.த.வ.) ஒரு தரப்பினராக அந்த வழக்கில் இடையீட்டாள ராக்கப்பட்டது.

(ii) இதில் குறிப்பிடப்படுவது அ.ஆ.பல்.எண் 714 வணிகவரிகள் மற்றும் மத அறக்கொடை துறை 29.6.1987 தேதியிடப்பட்டது. தொடர்பாக 1948 தமிழ்நாடு பண்ணைகள் ஒழிப்பு மற்றும் ரயல்வாரி (விவசாய) நிலங்களாக, மாற்றுதல், சட்டத்தின்படி மேல்முறையீடு செய்ய அனுமதிக்கத் தக்க காலம் பற்றி அறிவித்தது. இந்த அ.ஆ.யின் உள்ளடக்கம் சுருக்கமாக அதிகாரிகளுக்கு காலத் தாழ்வினை மன்னிக்கும் அதிகாரம் உள்ளது என்பது. அதாவது மேல்முறையீடு செய்வதற் கான 30 நாட்கால அளவினை நீட்டிப்பதற்காக விண்ணப்பிக்கும் காலம். அதாவது அ.ஆ.பல். எண் 714, 20.7.1987 தேதியிடப்பட்டது. வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்கு மேலாக நீட்டிப்பதற்கான அதிகாரம்.

(iii) இந்த நீதிமன்றம், (விவசாய பட்டா) ரயத்வாரிப் பட்டா அளிப்பதற்கான சந்தர்ப்பம் நீ.பே.ம.எண் 729/2025 (2.4.2025 தேதி யிட்ட ஆணை இதில் எண்களில் ஒருவர், ஒரு தரப்பினர் (டாக்டர் அனிதா சுமந்த், நீதிபதி). இதில் சிறப்பு அரசு வழக்கறிஞர் அ.ஆ.பல்.எண் 714, 29.6.1987 தேதியிட்டதை 20.7.1987 என்று வெளியிட்டுள்ளது.

(iv) சுந்தரம் மற்றும் பிறரின் சார்பாற்றம் 23.1.2013 மட்டுமே செய்யப்பட்டிருந்தது. எனவே அ.ஆ.பல்.எண் 714 நீ.பே.ம.எண் 9004/2013இன் செயற்பாட்டின்படி.

**பிரிவு உ:**

(i) (டா.த.வ.) 1இன் ஹெமின்பியர் வழிமுறை உரித்தம் பெறுபவர், தேசிய நிறுமன தீர்ப்பாயத்தின் முன்பு சில நிகழ்வுகள், காரண மாக வெளி வந்துள்ளதாவது அதன் சொத்தின் பங்கு பற்றிய கோரிக்கை நாம் ஹெமிஸ்பியர் அல்லது அதன் கோரிக்கை விவரங்கள் மூலமாக இந்த ஆணையினை சுமைப்படுத்த எந்தக் காரணமும், எங்களுக்கு காணக் கிடைக்க வில்லை. 6.6.2011 அன்று மா.வ.சு.இனால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான ஆணை யினால் டா.த.வ. சார்பாக வழங்கப்பட்ட பட்டா வினை ரத்து செய்துள்ளது மற்றும் நாம் இதனை பிற செயற்படுபொருள் அளவுக்கு மட்டுமே கட்டுப்படுத்துகிறேன்.

6. மொத்தத்தில் சுருக்கமாக, சொத்து தொடர்பாக, கேள்வியிலி உள்ள சொத்து தொடர்பாக, பல்வேறு கோரிக்கைகளை நாம் கருதுகை செய்துள்ளோம் மற்றும் அறுதியாக குறிப்பிட்டுள்ளதாவது, இவை பொருத்த முடிவுகள், நிலை மற்றும் எங்களது முடிவு இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக. நாம் கொண்டுள்ள அறுதியான கருத்தாவது, அதாவது கோரிக்கைகள் தொடர்பானவை. டா.நி.வ.இன் கோரிக்கைகள் மட்டுமே பற்றி தங்கள் கருதுகை செய்துள்ளோம் மற்றும் விதேஷ் சன்சார் நிஷாம் பணியாளர்களின் கூட்டுறவு வீட்டு, வசதி நிறுவனம் இந்த வழக்கில் சேருவதற்கு கடமைப் பொறுமைக் கொண்டு ள்ளது.

7. தொடக்க நிலையில் இவர்களே முதன்மை நீதிப்பேராணை மனுதாரர்கள் மேலும், இதனை மாநில அரசு இந்த கோரிக்கையை உண்மை யாக எதிர்க்கவில்லை மற்றும் சரியாகவே இதனை வாரி ஆணை 23இன்படி கருதுகை செய்துள்ளது. இது பின்வருமாறு படிக்கப் படுகிறது.

பி.23 ஒன்றிய மற்றும் மாநில அரசாங் களுக்கிடையேயான நிலங்கள் மற்றும் கட்டிடங்களின் உரிமை மாற்றம் பற்றியது.

(ii) ஒன்றிய அரசின் தேவைகளுக்கான கூடுதலான இடங்கள்

ஒன்றிய அரசாங்கத்திற்கு இனியும் நிலம் தேவைப்படாதபோது, அவர்களுடைய கையுடைமையில் உள்ள நிலம் எதனையும் அந்த மாநிலத்தின் மாநில அரசாங்கம் அதாவது இது அமைந்துள்ள இடம். அதன் முழு உடைமையை அல்லது அதன் பகுதி எதனையும் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உடைமையை மேற்கொள்ளும் தெரிவு அது அமைந்துள்ள மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(அ) ஒன்றிய அரசாங்கமே அதற்கு அந்த குறிப்பிட்ட நிலம் தேவையா இல்லையா என்பதற்கான அறுதியான அதிகாரியாக செயற்படுவார்.

(ஆ) மாநில அரசாங்கம் அந்த நிலத்தின் கையுடைமையினை பெறக் கருதுமானால், அது இதற்கான தெரிவினை அந்த இடத்தினை திருப்பியளிக்க ஒன்றிய அரச கருதியுள்ள தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், செயற்படுத்துதல் வேண்டும்.

(இ) இந்த நிலத்திற்காக செலுத்தத்தக்க தொகையானது, அனைத்து நேர்வுகளிலும் அது உரிமை மாற்றும் செய்யும் தேதியிலான அதன் சந்தை விலை மட்டுமே மற்றும்

(ஈ) மாநில அரசாங்கம் ஒன்றிய அரசாங்கத்தினால் திருப்பி அளிக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியின் உடைமையை மட்டுமே கையகப்படுத்தும் கருதும்போது, இவர்கள் அவ்வாறு அதனை குறைத்துப் பெறுவதால் மட்டுமே, இதன் மதிப்பு ஒரு பொருட்டாக அத்தகைய பிரித்தலினால் ஏற்படுமானால் மட்டுமே அவ்வாறு அதனை குறைத்து ஏற்க அனுமதிக்கும்.

குறிப்பு: இதில் அந்த மாநிலத்தின் கருதுகைக்கு அளிக்கலாமா வேண்டாமா என்பதை ஒன்றிய அரசாங்கமே தீர்மானிக்கும்.

8. இந்த நிலை பற்றி எந்தப் பூசலும் இல்லை. அதாவது அதனை முழுவதுமாகப் பெறலாமா வேண்டாமா என்பது பற்றிய கருதுகையில் வருவாய்த் துறையின் குறிப்பாணை எண் 47804C/52, 29.3.1954 தேதியிடப்பட்டது. இதற்கு சான்றாக உள்ளது. இது பின்வருமாறு.

“சென்னை அரசாங்கத்தின் சின்னம்

வருவாய்த் துறை

குறிப்பாணை எண் 47804C/52-14.

29.3.1954 தேதியிடப்பட்டது.

பெயர்: (செங்கல்பட்டு) நில உரிமை மாற்றம், பொன்னேரி தாலுகா பாடியநல்லு கிராமம் நில.அ.எண் 8/2, 9. இந்திய அரசாங்கத்திற்கு வானொலி, தொலைத் தந்தி மற்றும் வானொலி தொலைத்தந்தி மேலும் நிலையம் அமைக்கும் இடத்தை தீர்மானிக்கும்.

சுட்டுகை பொறியாளர் பொறுப்பு பணியில் இருப்பவர் கடல் கடந்த தகவல் பரிமாற்றப் பணி சென்னை 20 எண் 261 (வருவாய்) 54-34-3-1954. அரசு உரிமை மாற்ற ஒப்பளிப்பு நி.அ.எண் 8/2, 9 அளவு 85.94 ஏக்கர் பாடியநல்லூர் தாலுகா, பொன்னேரி தாலுகா செங்கல்பட்டு மாவட்டம், இந்திய அரசாங்கம், தகவல் தொடர்பு அமைச்சகம், கடல் கடந்த தொலைத் தொடர்பு பணி வானொலி தந்தி வானொலி தொலைபேசி பெறும் நிலையம், உரிமை மாற்றம் ரூ.17,725.40 ரூபாய் பதினேழு ஆயிரத்து எழுநூற்று இருபத்தைந்து மற்றும் பதினான்கு அனாக்கள் மட்டுமே) இந்திய அரசாங்கத்தினால் மாநில அரசுக்கு செலுத்தப்படும்.

செங்கல்பட்டு ஆட்சியர் பொறுப்பில் உள்ள பொறியாளருக்கு நிலங்களின் கையுடைமைகளை மாற்றீடு செய்யுமாக கூறப்பட்டுள்ளார். தொலைத் தொடர்பு தகவல் பரிமாற்ற பணி சென்னை உடனடியாக.

3. இயக்குநர் தலைவர், இந்திய அரசாங்கத்தின் கடல் கடந்தப் பணி பம்பாய் கணக்காய்த் தலைவரை ரூ.17,726-14-0வினை அரசின் வகைக்க வைக்க கோரியுள்ளது. வருவாய் வாரியம் அந்தத் தொகையானது அரசின் வரவில் சரி செய்யுமாறு பார்த்துக் கொள்ள பணிக்கப் பட்டுள்ளது. இந்தத் தொகை யானது அந்த தலைப்பின்கீழ் வைப்பீடு செய்யப்பட வேண்டியது. VII நில வருவாய் தரிசு நிலங்கள் மற்றும் நிலவரி மீளப் பெறுதல் பற்றிய விற்பனை நடவடிக்கைகள்.

கையொப்பமிடப்பட்டது

(ஜெ.ஜெ.ஜாக்குலின்)
அரசின் இயக்குநர் செயலாளர்

9. மேற்சொல்லப்பட்டவற்றின் கருத்தில், நம் மனங்களில், எந்த ஐயமும் இல்லை. (டா.தொ.வ.)இன் நுதல்பொருள் உரிமை மாற்றம் பற்றி TCL உரித்தம் பெற்ற வழிமுறை

உரிமையர் அதன் பங்கிற்கு அதனது உரிமை மூல ஆவணத்தை OCS இடமிருந்து பெறுகிறது. இதற்கு முன்னர், இந்திய வானொலி மற்றும் தொலைத் தொடர்பு நிறுவகம் வரையறுக்கப் பட்டது. இது பெருங்குற்றச்சாட்டுக்கு உட்படுத்தப் பட முடியாதது.

10. மேற்சொல்லப்பட்டவற்றின் கருத்துப்படி எதிர்க்கப்பட்ட தொலைத் தொடர் 6.6.2011 சமுதாயத்திற்காக முன்னிலையாகும் வழக்கறிஞர் கூறுவதாவது பட்டாவானது 32.5 ஏக்கர் நிலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது மற்றும் திரு.பி.எஸ்.ராமன் வழக்குரைஞர் தலைவர். இந்த நிலை பற்றி பூசல் செய்ய வில்லை. இது மாற்றப்பட வேண்டியதல்லாதது. பட்டா டா.தொ.வ.விற்கு விரைவில் அளிக்கப்பட வேண்டியது.

11. திரு.AR.L.சுந்தரேசன் ஹெமிஸ்பியருக் காக முன்னிலையாகிற கூடுதல் வழக்கறிஞர் தலைவர் கூறுவதாவது இடைநிலையில் ஹெமிஸ்பயர் சார்பாக நிலம் பிரிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. எனவே, இவர்கள் வருவாய்த் துறை அதிகாரியை அணுக அனுமதிக்கப் பட்டுள்ளனர். அதாவது அவர்களது கோரிக்கைக்கு, ஆதாரமான சாட்சியுடன், சார்பாற்றங்களை முன்னிட்டு, மற்றும் அந்த அதிகாரிகள் அந்தச் சார்பாற்றங்களை 4 வார காலத்திற்கு வகை செய்து விடுவார்கள். அதாவது சார்பாற்றம் பெறப்பட்ட தேதியிலிருந்து 4 வாரங்களுக்குள் அதாவது தரப்பினர்களை கேட்டறிந்த பின்னரும் சட்டத்திற்கு இணங்கவும்

12. இந்த தீர்ப்பாணை நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள சுதந்திரம் பற்றி மீண்டும் இங்கே கூறுகிறோம். நாங்கள் அதாவது சமூகத்தில் தனிப்பட்டா கோருகிறவர்கள் அதாவது பட்டாவின் உட்பிரிவு தொடர்பாக. தொடர்புடைய அதிகாரிகளை அணுகி அவற்றை கோரலாம்.

13. இரண்டு தீர்ப்பாணை மேல்முறையீட்டு மனுக்களும் மேற்சொல்லப்பட்ட வரையுரை களுடன் வகை செய்யப்படுகிறது. உ.ப.ம.எண் 8885/2024 தள்ளுபடி செய்யப்படுகிறது மற்றும் உ.ப.ம.எண் 13470/2025 மற்றும் உ.ப.ம.எண்கள் 27544, 27560/2023 முடிக்கப்பட்டன.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## உயர்நீதிமன்றங்களில் ஆஜராக 127 அரசுத் தரப்பு வழக்குரைஞர்கள் நியமனம்

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஆஜராக கூடுதல் தலைமை வழக்குரைஞர்கள், அரசு பிளீடர்கள் என 127 பேரை நியமித்து தமிழக அரசு உத்தர விட்டுள்ளது.

தமிழகத்தில் தவெக அரசு அமைந்த பின்னர், அரசு வழக்குரைஞர்கள் நியமனத்துக்கு பணம் கேட்பதாகக் கூறி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டன. இதனால், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை அமர்வுக்கு அரசு வழக்குரைஞர்கள் நியமிப்பதில் இழுபறி ஏற்பட்டது. இந்த நிலையில் நீதிமன்றங்களில் அரசுத் தரப்பில் ஆஜராக வழக்குரைஞர்களை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, சென்னை உயர்நீதிமன்றத்தில் கூடுதல் தலைமை வழக்குரைஞர்களாக பி.வி. பாலசுப்பிரமணியம், டி.கௌதமன், பி.சரவணன், அப்துல் ஹமீது, ஜே.பரதன், எஸ்.அர்ஜுன் சுரேஷ், எஸ்.குமரேசன், கவிதா நித்தியானந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசுத் தரப்பில் ஆஜராக மாநில அரசு பிளீடராக எம்.குருபிரசாத் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஆஜராக எம்.பி.செந்தில் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அரசு சிறப்பு பிளீடர்களாக ஆர்.பரணீதரன், ஜி.ராமதாஸ், ஜெ.லெனின், இளம்வழுதி, பி. கல்பாரெட்டி, ஏ.ஆர்.சுரேஷ், ஆர். சங்கர், வி.பிரசாத், ஆர்.கௌரி, வீரமணி ஜி.தனமத்ரி, பி.இளைராஜ்குமார், சி.பிரபாகரன் இந்து கருணாகரன், முகமது ஃபயாஸ் அலி, எம்.சிவவர்தனன், வி.சந்திரபிரபு, கே.சுரேந்தர், டோமின் சேவியோ டேவிட் ஆகியோரும் உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு சிறப்பு அரசு பிளீடர்களாக எஸ்.சிவா திலகர், கே.பொற்கொடி, எம்.கண்ணன், டி.திருமுருகன், சி.ஜெகநாதன், ஆர்.பார்த்திபன், ஐ. பினாய்காஸ், எம்.மெஹபூப் அதீப் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர் களுடன் கூடுதல் அரசு பிளீடர்கள், அரசு வழக்குரைஞர்கள் என மொத்தம் 127 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**நன்றி : தினமணி 2.8.2026**

# விண்ணப்பத்தில் ஏற்பட்ட சிறிய பிழையை சுட்டிக்காட்டி பணி நியமனத்தை மறுப்பது சட்டவிரோதம் மனுதாரரை ‘மறுவாழ்வு ஆலோசகராக’ நியமிக்க உத்தரவு.

சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை அமர்வு
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி மும்மினேனி சுதீர்குமார்
நீ.பே.(மஅ) எண் 7850/2026 –
நீபே இவம (மஅ) எண் 12436/2026
தீர்ப்பிற்காக ஒத்திவைப்பு: 10-07-2026
தீர்ப்பு பகரப்பட்டது: 03-08-2026

கே. திலகர் ... மனுதாரர்

–எதிர்–

1. தலைவர், பணியாளர் தேர்வாணையம்,
பிளாக் எண். 12, சி.ஜி.ஓ. வளாகம்,
லோதி சாலை, புது தில்லி – 110 003.
2. மண்டல இயக்குனர் (தென் மண்டலம்),
பணியாளர் தேர்வாணையம், 2வது தளம்,
ஈ.வி.கே. சம்பத் மாளிகை, கல்லூரி சாலை,
சென்னை – 600 006.
3. இயக்குனர், மாற்றுத்திறனாளிகளுக்கான
தேசிய வேலைவாய்ப்பு சேவை மையம்,
வேலைவாய்ப்பு தலைமை இயக்குநரகம்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்,
ஷ்ரம் சக்தி பவன், ரஃபி மார்க்,
புது தில்லி – 110 001. ... எதிர்மனுதாரர்கள்

**வேண்டுகை:** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 226-வது கூறின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு. 06.08.2025 தேதியிட்ட இரண்டாவது எதிர்மனுதாரரால் ‘பரிந்துரைகள் ஏதுமில்லை‘ என்று அறிவித்து வெளியிடப்பட்ட ஆட்சேபனைக்குரிய இறுதி முடிவு தொடர்பான ஆவணங்களை வரவழைக்க நீதிப்பேராணை பிறப்பிக்கவும், அதனை சட்டவிரோதமானது என ரத்து செய்யவும், அதன் விளைவாக இந்த நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் காலக் கெடுவுக்குள் மனுதாரரை மறுவாழ்வு ஆலோசகர் (பதவி எண் SR10724) பதவிக்கு நியமிக்குமாறு எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடக் கோரியும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரருக்காக : திரு. ஆர். கருணாநிதி, வழக்கறிஞர்

1 மற்றும் 2-வது எதிர்மனுதாரர்களுக்காக திரு. கார்த்திகேய வெங்கடாசலபதி, வழக்கறிஞர்

3-வது எதிர்மனுதாரருக்காக : எவரும் ஆஜராகவில்லை

## உத்தரவு

1. மறுவாழ்வு ஆலோசகர் (பதவி எண். SR10724) பதவி தொடர்பாக இரண்டாவது எதிர்மனுதாரரால் 06.08.2025 அன்று ‘பரிந்துரைகள் ஏதுமில்லை‘ என அறிவித்து வெளியிடப்பட்ட இறுதி முடிவு தொடர்பான ஆவணங்களை வரவழைக்கவும், அதனை சட்டவிரோதமானது என ரத்து செய்யவும், அதன் விளைவாக மேற்கண்ட பதவிக்கு பதிவு எண். 10006708894 வாயிலாக அவர் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில், இந்த நீதிமன்றம் நிர்ணயிக்கும் காலக்கெடுவுக்குள் மனுதாரரை மறுவாழ்வு ஆலோசகர் பதவிக்கு நியமிக்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடக் கோரியும் இந்த நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. முதல் எதிர்மனுதாரர் 26.02.2024 அன்று XIIஆம் கட்டம்/2024/தேர்வு பணியிடங்கள் என்ற விளம்பர எண்ணைக் கொண்ட அறிவிப்பை வெளியிட்டார். அதில், ஒதுக்கப்படாத பிரிவின் கீழ் மறுவாழ்வு ஆலோசகர் பதவி உட்பட பல்வேறு பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. இந்த அறிவிப்புக்கு பதிலளிக்கும் விதமாக, மனுதாரர் தனக்கு முழு தகுதியும் இருப்பதை அறிந்து, வயது வரம்புத் தளர்வு கோரி முன்னாள் ராணுவத்தினர் பிரிவின் கீழ் அந்தப் பதவிக்கு விண்ணப்பித்தார். அதன்படி, மனுதாரர் அந்த ஆள்சேர்ப்பு நடைமுறையில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டு, 20.06.2024 அன்று கணினி அடிப்படையிலான தேர்வில் கலந்து கொண்டார். அதன் முடிவுகள் 30.08.2024 அன்று அறிவிக்கப்பட்டன. அதில் முப்பது விண்ணப்பதாரர்கள் தற்காலிகமாகத் தகுதி பெற்று அடுத்தகட்ட பரிசீலனைக்காகத் தேர்வு செய்யப்பட்டனர். அதன் பிறகு, தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தங்களது ஆதரவு சான்றிதழ்கள் அனைத்தின் சுய சான்றளிக்கப்பட்ட மென் நகல்களை 02.09.2024 முதல் 24.09.2024 வரை பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டனர். இணையவழி பதிவேற்றப்பட்ட ஆவணங்களைப் பரிசீலித்த பிறகு, மனுதாரர் உட்பட இரண்டு விண்ணப்பதாரர்களை மட்டும் உள்ளடக்கிய தற்காலிக ஏற்புப் பட்டியல் 21.01.2025 அன்று வெளியிடப்பட்டது. அதன்பின்னர், மனுதாரர் உட்பட ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் 25.03.2025 அன்று வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 08.04.2025 அன்று புது தில்லியில் உள்ள மூன்றாவது எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் நேரடியாகச் சான்றிதழ் சரிபார்ப்பில் ஆஜராகுமாறு கோரி 01.04.2025 தேதியிட்ட ஆவணச் சரிபார்ப்பு அழைப்புக் கடிதம் மனுதாரருக்கு வழங்கப்பட்டது. அதன்படி மனுதாரர் சான்றிதழ் சரிபார்ப்பில் ஆஜரானார். மூன்றாவது எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் நடைபெற்ற சான்றிதழ் சரிபார்ப்பின்போது, ஆன்லைன் விண்ணப்பத்தில் மனுதாரர் குறிப்பிட்டிருந்த அனுபவக் காலத்திற்கும், சான்றிதழ் சரிபார்ப்பின் போது அவர் நேரில் சமர்ப்பித்த அனுபவச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருந்த காலத்திற்கும் இடையே முரண்பாடு இருப்பது கவனிக்கப்பட்டது. அதன் பிறகே, 1 மற்றும் 2-வது எதிர்மனுதாரர்கள் தங்களது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அந்தப் பதவிக்கு 'பரிந்துரைகள் ஏதுமில்லை' என இறுதி முடிவு அறிவிப்பை வெளியிட்டனர்.

3. இந்த இறுதி முடிவு அறிவிப்பால் பாதிக்கப்பட்ட மனுதாரர், இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது கவனக்குறைவாக ஏற்பட்ட பிழையின் காரணமாக அனுபவக் காலத்தைக் குறிப்பிடுவதில் ஒரு சிறிய முரண்பாடு ஏற்பட்டு விட்டதாகக் கூறி இந்த நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்து நீதிமன்றத்தை அணுகியுள்ளார். ஃபலோடி விமானப்படை நிலையத்தின் நிலைய தளபதியால் வழங்கப்பட்ட சான்றிதழில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மனுதாரர் உண்மையில் 08.07.2013 முதல் 13.09.2015 வரை அந்த அனுபவத்தைப் பெற்றுள்ளார் என்று மேலும் வாதிடப்படுகிறது. ஆனால், இணையவழி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது, அந்த காலகட்டம் கவனக்குறைவாக '06.01.2013 முதல் 08.01.2015 வரை' என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுவிட்டது.

4. இந்த நீதிமன்றம் அனுப்பிய நோட்டீசுக்கு பதிலளிக்கும்விதமாக, 1 மற்றும் 2-வது எதிர்மனுதாரர்கள் தங்களது வழக்கறிஞர் மூலம் எதிருரைக்கான பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்தனர்.

5. மூன்றாவது எதிர்மனுதாரரைப் பொறுத்தவரை, மத்திய அரசின் நிலை வழக்கறிஞர் திரு. எஸ்.முத்துகுமார் அவர்கள் மூன்றாவது எதிர்மனுதாரருக்கான அறிவிப்பைப் பெற்றுக் கொண்டபோதிலும், மூன்றாவது எதிர்மனுதாரர் எந்தவொரு எதிர் பிரமாணப் பத்திரத்தையும் தாக்கல் செய்ய முன்வரவில்லை.

6. 1 மற்றும் 2-வது எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர் பிரமாணப் பத்திரத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்களைச் சரிபார்ப்பது மூன்றாவது எதிர்மனுதாரரின் பணி என்றும், மனுதாரர் சமர்ப்பித்த சான்றிதழ்களைச் சரிபார்த்தபோது, அவர்

இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றிய அனுபவக் காலத்திற்கும், சான்றிதழ் சரிபார்ப்பின் போது சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழில் குறிப்பிடப் பட்டுள்ள அனுபவக் காலத்திற்கும் இடையே முரண்பாடு இருப்பதை மூன்றாவது எதிர்மனு தாரர் கவனித்தார் என்றும், அந்த காரணத்தி னாலேயே மூன்றாவது எதிர்மனுதாரர் மனு தாரரின் விண்ணப்பத்தை நிராகரித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், மூன்றாவது எதிர்மனுதாரரின் நிலைப்பாட்டின் காரணமாகவே மனுதாரரின் தகுதி நிராகரிக்கப்பட்டது என்றும் 1 மற்றும் 2-வது எதிர்மனுதாரர்கள் வாதிடு கின்றனர். ஆள்சேர்ப்பு அறிவிப்பின் பத்தி 19.13-ஐ சுட்டிக்காட்டிய 1 மற்றும் 2-வது எதிர் மனுதாரர்கள், கணினி அடிப்படையிலான தேர்வுகள் முடிந்த பிறகு, விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களில் அளித்துள்ள தகவல் களைப் பயனாளர் துறை அவர்களின் அசல் ஆவணங்களுடன் சரிபார்க்கும் என்றும், விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறானது எனத் தெரியவந்தால், அவர்களின் தகுதி உடனடியாக நிராகரிக்கப்படும் என்றும் தெரிவித்தனர். அதன்படி, ஆள்சேர்ப்பு அறிவிப்பின் பத்தி 19.13-இன்படி, மனுதாரரின் விண்ணப்பம் தற்போது மூன்றாவது எதிர்மனுதாரரால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும், ஆவணச் சரிபார்ப்பு கட்டத்தில் விண்ணப்பதாரர்களின் தகுதியை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது தொடர்பான முடிவெடுக்கும் நடைமுறையில் பணியாளர் தேர்வாணையத்திற்கு எந்தப் பங்கும் இல்லை என்றும், இது முற்றிலும் மூன்றாவது எதிர்மனுதாரரின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்றும் வாதிடப்படுகிறது.

7. மேலே ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, மூன்றாவது எதிர்மனுதாரர் எந்தவொரு எதிர் பிரமாணப் பத்திரத்தையும் தாக்கல் செய்ய முன்வரவில்லை. இருப்பினும், மனுதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் 1 மற்றும் 2-வது எதிர்மனுதாரர்களால் அவர் களின் எதிர் பிரமாணப் பத்திரத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மனுதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான ஒரே காரணம் என்ன வென்றால், மனுதாரர் இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது, தனது அனுபவ காலத்தை ''06.01.2013 முதல் 08.01.2015 வரை'' என்று குறிப்பிட்டுள்ளார், ஆனால் சான்றிதழ் சரிபார்ப்பின் போது அவர் சமர்ப்பித்த அனுபவச் சான்றிதழில், அனுபவ காலம் ''08.07.2013 முதல் 13.09.2015 வரை'' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஆகையால், மனுதாரர் இணையவழி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள அனுபவ காலமும், சான்றிதழ் சரிபார்ப்பின் போது அவர் சமர்ப்பித்த அனுபவச் சான்றிதழில் குறிப்பிடப் பட்டுள்ள அனுபவ காலமும் வெவ்வேறாக உள்ளன என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே மூன்றாவது எதிர்மனுதாரரால் மனுதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. மனுதாரர் பதிவேற்றிய மற்றும் நேரில் சமர்ப்பித்த அனுபவச் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை குறித்து எந்த சர்ச்சையும் இல்லை. மனுதாரர் ஆள்சேர்ப்பு நடைமுறை யின் அனைத்து கட்டங்களையும் கடந்துவிட்டார் என்பதும், இறுதி கட்டமான சான்றிதழ் சரிபார்ப்பு கட்டத்தில் மட்டுமே மனுதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என்பதும் விவாதத்திற்குரிய தல்ல. சான்றிதழ் சரிபார்ப்பு கட்டத்தை எட்டிய இரண்டு விண்ணப்பதாரர்களில், நேரில் சான்றிதழ் சரிபார்ப்பில் ஆஜரான ஒரே விண்ணப்பதாரர் மனுதாரர் மட்டுமே என்பதிலும் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. மனுதாரரின் தகுதி மற்றும் கல்வித்தகுதி குறித்து எந்தவொரு சர்ச்சையும் இல்லாத நிலையிலும், ஆள்சேர்ப்பு நடைமுறை யின் அனைத்து கட்டங்களையும் மனுதாரர் கடந்து விட்டார் என்ற உண்மையின் அடிப்படை யிலும், இணையவழி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள அனுபவக் காலத்திற்கும், சான்றிதழ் சரிபார்ப்பின் போது சமர்ப்பிக்கப்பட்ட அனுபவச் சான்றிதழில் உள்ள அனுபவக் காலத்திற்கும் இடையிலான முரண்பாட்டை மட்டுமே காரணம் காட்டி, மனுதாரரின் விண்ணப்பத்தை நிராகரித்த மூன்றாவது எதிர்மனுதாரரின் நடவடிக்கை மிகைப்படுத்தப்பட்ட தொழில்நுட்பக் காரணமாக தோன்றுகிறது. இது 26.02.2024 முதல் 08.04.2025 வரை எதிர்மனுதாரர்களால்

மேற்கொள்ளப்பட்ட முழு ஆள்சேர்ப்பு நடைமுறையையும் வீணடிப்பதாக உள்ளது. ஒரு சிறிய (அற்பமான) காரணத்திற்காக மனுதாரரின் தகுதி நிராகரிக்கப்பட்டதன் விளைவாக, இந்த அறிவிப்பின் மூலம் நிரப்பப்படவிருந்த மறுவாழ்வு ஆலோசகர் பதவி நிரப்பப்படாமல் வீணடிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் சமர்ப்பித்த அனுபவச் சான்றிதழ் அறிவிப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்று கண்டறியப்பட்டாலோ அல்லது அது உண்மையானது இல்லை என்று கண்டறியப்பட்டாலோ, இந்த வழக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருந்திருக்கும். ஆனால், இங்குள்ள நிலைமை அப்படிப்பட்டதல்ல. அனுபவக் காலத்தைக் குறிப்பிடுவதில் மனுதாரர் செய்த தவறு சிறிய அளவிலானது. மேலும் மனுதாரரின் தகுதியை நிராகரிக்க வேறு எந்த காரணமும் இல்லை என்ற சூழலில், இந்தத் தவறு மறுவாழ்வு ஆலோசகர் பதவிக்கான மனுதாரரின் தகுதியை எந்த விதத்திலும் பாதிக்காது.

8. மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் சரியாக வாதிட்டபடி, 2024 ஐமீகுஇ 2 எனப் பதிவாகியுள்ள 'வசிஸ்ட் நாராயண் குமார் –எதிர்– பீகார் மாநில அரசு மற்றும் பிறர்' வழக்கில், இதேபோன்ற ஒரு சூழ்நிலையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம், பதவியை நிரப்புவதற்கான விண்ணப்பதாரர்களின் தகுதியில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாத சிறிய அளவிலான தவறுகளைக் காரணம் காட்டி, இறுதி கட்டத்தில் விண்ணப்பங்களை நிராகரிக்கக் கூடாது என்று கண்டறிந்துள்ளது. இது தொடர்பாக, மேற்கண்ட தீர்ப்பின் பத்தி எண் 19–ஐ கீழே சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாக இருக்கும்:

''19. இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர் தேர்வு நடைமுறையில் பங்கேற்று அனைத்து கட்டங்களையும் வெற்றிகரமாகக் கடந்துள்ளார். விண்ணப்பத்தில் உள்ள பிழை சிறியது, அது தேர்வு நடைமுறையில் எந்தப் பங்கும் வகிக்கவில்லை. இந்தச் சிறிய விஷயத்தைப் பூதாகரமாக்கியதில் மாநில அரசுக்கு நியாயம் இல்லை. ஒருவேளை இணைய மையத்தின் நெரிசலான சூழல் மேல்முறையீட்டாளருக்குத் தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அவர் பிழையைக் கவனிக்கத் தவறிவிட்டார். மேலும் பிழையைத் திருத்த வழங்கப்பட்ட வாய்ப்பையும் பயன்படுத்தத் தவறிவிட்டார். தற்போதைய வழக்கில், நிலவும் எதார்த்தமான கள உண்மைகளை நாம் கண்டும் காணாமல் இருந்துவிட முடியாது. 22.11.2021 தேதியிட்ட சி.ஏ. எண் 6983/2021 [பிரின்ஸ் ஜெய்பீர் சிங் –எதிர்– இந்திய ஒன்றியம் மற்றும் பிறர்] வழக்கின் உத்தரவில், தொழில்நுட்பம் ஒரு சிறந்த வழிகாட்டி என்றாலும், அதே சமயம் இங்கு தொழில்நுட்ப இடைவெளி யும் உள்ளது என்பதை இந்த நீதிமன்றம் சரியாகக் கவனித்துள்ளது.''

9. மேற்கூறியவற்றின் அடிப்படையில், மேற்கண்ட அற்பமான காரணத்திற்காக மனுதாரரின் விண்ணப்பத்தை நிராகரித்ததில் மூன்றாவது எதிர்மனுதாரர் முற்றிலும் தவறு செய்துள்ளார் என இந்த நீதிமன்றம் தீர்க்கமாகக் கருதுகிறது. இதன் விளைவாக, மறுவாழ்வு ஆலோசகர் (பதவி எண் SR10724) பதவிக்கு ''பரிந்துரைகள் ஏதுமில்லை'' என்று இறுதி முடிவை வெளியிட்ட 1 மற்றும் 2–வது எதிர்மனுதாரர்களின் நடவடிக்கை மிகவும் தன்னிச்சையானது, சட்டவிரோதமானது மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14 மற்றும் 16–வது பிரிவுகளை மீறுவதாகும் என அறிவிக்கப்பட வேண்டியுள்ளது. அதன்படி, எதிர்மனுதாரர்களின் மேற்கண்ட நடவடிக்கை தன்னிச்சையானது மற்றும் சட்டவிரோதமானது என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. இதன் விளைவாக, 26.02.2024 தேதியிட்ட விளம்பர எண் XIIம் கட்டம்/2024/தேர்வு பணியிடங்களின் கீழ் 1 மற்றும் 2–வது எதிர்மனுதாரர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆள்சேர்ப்பு நடைமுறையின்படி, இந்த உத்தரவின் நகலைப் பெற்ற நாளிலிருந்து ஆறு வார காலத்திற்குள், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக மனுதாரரை மறுவாழ்வு ஆலோசகர் பதவியில் நியமிக்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

10. அதன்படி, இந்த நீதிப்பேராணை மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை ஏதுமில்லை. இதன் விளைவாக, இதனுடன் தொடர்புடைய இதர மனுக்களும் முடித்து வைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# மனுதரப்பை விசாரிக்காதது சட்ட நடவடிக்கையை பயனற்றதாக்கும்

சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்)

முன்னிலை: மாண்புமிகு நீதிபதி டாக்டர் ஜி. ஜெயச்சந்திரன்

மாண்புமிகு நீதிபதி கே.கே.ராமகிருஷ்ணன்

ஆ.இ.(MD) எண் 8/2025 மற்றும் உ.ப.ம. (MD) எண் 19503/2025

4.12.2025

2025 (6) CTC 745

கே.ஜெ.பர்வீன்குமார், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், மதுரை

2. ஜெ.லோகநாதன், இ.ஆ.ப.,
காவல்துறை ஆணையர், மதுரை நகர் ...மேல்முறையீட்டாளர்

–எதிர்–

ராமா ரவிகுமார்

2. யாக்ன நாராயணன்,
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில்,
திருப்பரங்குன்றம், மதுரை ...எதிர்வழக்கீட்டாளர்கள்

ஜெ.ரவீந்திரன், கூடுதல் அரசு வழக்குரைஞர் மேல்முறையீட்டாளர் எண் 1இன் ஒருங்கிணைப்பாளர் வீரா, கதிரவன், கூடுதல் அரசு வழக்குரைஞர் உதவியவர் பி. திலக்குமார்

அரசு வழக்குரைஞர் மேல்முறையீட்டாளர் 2க்காக.

எம்.ஆர்.வெங்கடேஷ், ஆர்.எம்.அருண் சுவாமிநாதனுக்காக, எதிர்வழக்கீட்டாளர் எண் 1க்கான வழக்கறிஞர்.

வி. சந்திரசேகர் எதிர்வழக்கீட்டாளர் எண் 2க்கான வழக்கறிஞர்

அ.ம.வி. தள்ளுபடி செய்யப்பட்டது. கண்டறிதல்களுடன் ப.ம.முடிக்கப்பட்டது.

**கோரிக்கை**: இந்த நீதிமன்றக் கோப்பில் உள்ள 3.12.2025 தேதியிடப்பட்ட அ.ம.(MD) எண் 3594/2025இல் பிறப்பிக்கப்பட்ட ஆணையினைத் தள்ளுபடி செய்யக் கோரி உரிமைப் பட்டயத்தின் கூறு 15இன்படி முன்னிடப்பட்ட உரிமைப் பட்டய மேல்முறையீடு

## ஆணை

**நீதிபதி டாக்டர் ஜி. ஜெயச்சந்திரன்**

1. மேல்முறையீட்டாளர்களது இந்த வழக்கில் மதுரை மாவட்ட ஆட்சியர் மற்றும் மதுரை காவலர்கள் காவல் துறை ஆணையர், மதுரை மாநகரம். அதாவது 3.12.2023 தேதியிடப்பட்ட தொடர் (MD) எண் 3594/2025இல் தனி நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் குறையுற்றவர்களால் இந்த உரிமைப் பட்டய மேல்முறையீடு முன்னிடப்பட்டது.

2. திரு. ராமா ரவிகுமார், நீ.பே.ம. (MD) எண் 32317/2015இன் நீதிப்பேராணையை முன்னிட்டு இதில் 4ஆவது எதிர்வழக்கீட்டாளருக்கு, தூபத் தூணில் (பழைய தீபநிலையாக) கொள்ளப் பட்டு தீபம் ஏற்றப்பட்டதாக கூறப்பட்ட இடத்தில் தீபம் ஏற்ற பணிக்குமாறு கோரப்பட்டது. இது திருப்பரங்குன்ற குன்றின் உச்சியில் அமைந்து உள்ளது. இந்த நீதிமன்ற ஆணைக்கிணங்க நீ.பே.ம. எண் 18884/1994, 21.11.1996 தேதியிடப்பட்டது. மாறாக, நீதிப்பேராணை மனுதாரரை 3.12.2025 அன்று தீபம் ஏற்ற அனுமதிக் கோரப்பட்டது. இதற்காக போதிய நிர்வாக ஏற்பாடுகள். அதாவது பந்தோபஸ்து உள்ளடங்கலாக திட்டமிடுமாறு நீதிப்பேராணையில் எதிர்வழக்கீட்டாளர்களால் கோரப்பட்டது. நீதிப்பேராணை மனுவிற்கிணங்க 28.10.2025 தேதியிடப்பட்ட சார்பாற்றம் மூலமாக திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி

கோயிலின் நிர்வாக அதிகாரிக்கு கோரிக்கை வைக்கப்பட்டதாவது மேலே கூறப்பட்ட உயர் நீதிமன்ற ஆணைகளுக்கு இணங்கி செயற்படக் கோரப்பட்டது. ஆனால் அது நிராகரிக்கப்பட்டது. விரிவு 3.11.2025 தேதியிடப்பட்ட செய்தி பரிமாற்றப்படி. எனவே இதில் செயற்படு காரணமாவது இந்த நீதிப்பேராணையும் மனுதாரர் கோருவதாவது வழக்குக் கட்டுகளை அனுப்பிடுக என்னும் வலியுறுத்துப் பேராணை.

4. தனி நீதிபதி, நீ.பே.மனு (MD) எண் 32317/2025இல் கோரப்பட்ட பரிகாரத்தினை காரணத்தை செய்ததன்பேரிலும் மற்றும் பிற தொடர்புடையவை இது போன்ற பிற நீதிப் பேராணைகள் முன்னிடப்பட்டது. சிக்கந்தர் தர்காவின் சார்பாற்றுநர்கள் அவர்களை வழக்கில் சேர்க்க கோரியுள்ளனர் மற்றும் இதில் 1.12.2025 தேதியிடப்பட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன் செயப்படு பகுதியாவது பின்வருமாறு படிக்கப் படுகிறது.

“40 இதனைப் பிறப்பிப்பதில் 1.12.2025 அன்று அமைதிக் கூட்டக் குழுவில் பிறப்பிக்கப் பட்ட தீர்மானத்தை நாள்பட்ட கட்டலாம் எனக் கருதுகிறேன். இது (R.D.O.) அலுவலகத்தில் ஆனது. தர்கா மேலாண்மையில் இந்த தீர்மானத்தில் தீபத்தூணில் தீபம் ஏற்றுவதற்கு எந்த மறுப்பினையும் தெரிவிக்கவில்லை என்று ஏற்று கையொப்பமிடப்பட்டுள்ளது. அவர்கள் தெளிவுபடுத்தியதாவது. தர்காவிற்கு 15 மீட்டர் தொலைவில் எந்த இடத்திலும் தீபத்தை ஏற்றிக் கொள்ளலாம் என்பது இந்தத் தீர்மானம் செயற்படுத்தும் அதிகாரம் பெற்றதாக இல்லாத போதும் எதிர்ப்பாளர்கள் இதில் குறிப்பாக ஏதோ நோக்கத்துடன் செயற்படுவதாகத் தெரிகிறது. 21.11.1996 தேதியிடப்பட்ட தீர்மானத்திலும் கூட 4.11.1994இல் ஏற்பட்ட உடன்படிக்கைக்கு ஒப்ப உள்ளது. இந்தக் கட்டுரைகள். ஆனால், இதில் கூறப்பட்டது இது அதிகாரிகளின் ஆர்வத்திற்காக செய்யப்பட்டது என்பது.

41. இதில் வசதி எஞ்சியுள்ளது அதுவும் கருதுகை செய்யப்பட வேண்டியது. தீபத்தூணில் தீபம் ஏற்றுவதனால் தர்காவினரின் உரிமைகள் அல்லது முகமதியர்களின் உரிமைகள் எந்த விதத்தில் பாதிக்கப்படாது. தர்கா மேலாண்மை அவர்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார் என்பதை எடுத்துக் கூறி பேசப்படவில்லை. தர்கா மேலாண்மை எந்த செயற்பாட்டையும் மேற்கொள்ள வில்லை. அதாவது அவர்கள் எவ்வாறு பாதிக்கப் படுவார்கள் என்பது பற்றி. தீபத்தூண் தர்காவின் இடத்திற்குமுன் இருப்பதாக அவர்கள் வழக்கிட வில்லை. வேறுவகையில், தீபத்தூணில் விளக்கு ஏற்படாதிருப்பின் இந்தக் கோயிலின் உரிமைகள் பாதிக்கப்படலாம் என்பது.

42. மேலே சொல்லப்பட்ட காரணங்களுக் காக, நான் கோவில் மேலாண்மையை தேவஸ்தானத்தைப் பணிப்பதாவது, கார்த்திகை தீபத்தை தீபத் தூணில் ஏற்றுமாறு மற்றும் பிற வழக்கமான இடங்களிலும் ஏற்றி விடுங்கள் என்பது. கார்த்திகை விளக்குகளின் விழா, வீடுகள் தோறும் எல்லா இடங்களிலும் தீபம் ஏற்றப்படுகிறது. இதில் நீதிமன்ற ஆணையிடு வதை நிறைவேற்றும் கடமை காவல்துறை அதிகாரிக்கு உள்ளது. மதுரை மாநகர காவல் துறை ஆணையர், இந்த ஆணையை நிறைவேற்றுவதில் எவரும் இடையூறு செய்யாது. இருக்க வேண்டியதைப் பாதுகாக்க வேண்டியது அவருடைய கடமையாகும்.

43. நீ.பே.ம.(MD) எண் 32317, 33112, 31971, 33724இல் இவை அனுமதிக்கப் படுகின்றன. நீ.பே.(MD) எண் 34051/2025 தள்ளுபடி செய்யப்படுகிறது. எம்.ஜெ.ஆனந்த வல்லி இடையீட்டாளராக சேர்க்கப்பட்டவரின் வழக்கறிஞரின் ஆணைகளை நிறைவேற்ற ஆவேன். ஒருங்கிணைந்த தட்டச்சு செய்யப் பட்ட இவற்றில் தொடர்புடைய பொருட்பாடுகள் அனைத்தும் உள்ளன இதில் செலவு தொகை யில்லை தொடர்புடைய பல்வகை மனுக்கள் முடிக்கப்படுகின்றன.

5. எஞ்சிய பொருண்மைகள் தேவையற்றவை. அதாவது தற்போது மேல்முறையீட்டிற்கு எனவே, பிற பொருண்மைகளை இங்கே வேண்டு மென்றே தவிர்த்துள்ளேன். இவை தொடர்பற்றவை.

6. அடுத்த நாள், மேலே சொல்லப்பட்ட ஆணை இதில் நீதிப்பேராணையை மனுதாரர் ராமா ரவிகுமார் மானநஷ்ட வழக்கினை

உடனடியாக எடுத்துக் கொள்ளவும் தீர்மானம் நிறைவேற்றவும் மாவட்ட கட்சியருக்கு எதிராக செயற்படவும், காவல்துறை ஆணையர் மற்றும் கோவிலின் நிர்வாக அலுவலர் இந்த மீறுகையை வேண்டுமென்றே செய்ததற்கான வழக்கு.

7. நீதிப்பேராணை மனுதாரர்களுக்கிணங்க, கோவில் நிர்வாக அலுவலரை விசாரித்தபோது, அதாவது செய்யப்பட்ட ஏற்பாடு தொடர்பாக, குறிப்பிடப்பட்ட இடத்தில் தூப ஸ்தானத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பாக. அதாவது நீதிமன்ற ஆணையை ஓட்டி நிர்வாக அலுவலர், எதிர்மறை யாக பதிலளித்துள்ளார். இதில் தீபம் என்றும் நேரம் 6 மணி மாலை 5 மணிவரை யிலுமே எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. அதாவது தீபம் ஏற்றப்படுவதற்கு (கல் தூணில் – தீபம் ஏற்றுவது) இதில் நான்காம் எதிர்வழக்கீட்டாளர், நீதிமன்ற ஆணையை மீறுகை செய்வாரானால், இது நீதிப்பேராணை மனுதாரரின் உரிமை களுக்கு குந்தகம் விளைவிப்பதாக அமையும். தனி நீதிபதி இந்த அவமதிப்பு வழக்கை ஏற்றுள்ளார். இது அவசர கால அடிப்படையில் ஏற்கப்பட்டது. 31.12.2025, 5 மணியளவில்

8. திரு.ஜெ.ரவீந்திரன், கூடுதல் அரசு வழக்குரைஞர் முதல் மேல்முறையீட்டாளருக் காக முன்னிலையாகிறவர், பணிந்தனுப்பியுள்ள தாவது, நீதிமன்ற அவமதிப்பு வழக்காவது, நீதிமன்ற ஆணையை மீறியதற்காக முன்னிட எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது கார்த்திகை தீப விளக்கை ஏற்றுவது தொடர்பாக. அதாவது கல்தூணில் விளக்கேற்ற எதுவும் அங்கு சென்ற டையவில்லை. இதில் தோன்றுவதாவது, செய்யப் பட்ட பணிந்தனுப்புதல்கள் கூடுதல் அரசு வழக்கறிஞரால் செய்யப்பட்டதில் தனி நீதிபதி யினால் இந்த பொருட்பாடு எடுக்கப்பட்டதே. மாலை 6–5க்குப் பின்னர், உறுதி செய்யப் பட்டதன் பேரில் கோவிலின் நிர்வாக அலுவலர், நீதிமன்றத்தினால், குறிப்பிடப்பட்ட இடத்தில் கார்த்திகை தீப விளக்கை ஏற்றுமாறு இடப்பட்ட பணிப்புரைக்கு இணங்கவில்லை. அதாவது தீபத்தூணில், தனி நீதிபதி நீதிப்பேராணை மனுதாரரை அதாவது ராமா என்பவரை, தீபம் ஏற்ற அனுமதித்துள்ளார். ரவிக்குமாரை அவருடன் 10 பேரை உடன் அழைத்துச் செல்ல அனுமதித்துள்ளார். அதாவது நீதிப்பேராணை மனுதாரர் உள்ளடங்கலாக. இவர்கள் தீபத் தூணில் தீபம் ஏற்றுவதற்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்ல பணித்துள்ளார். அத்துடன் மத்திய தொழில்துறை பாதுகாப்பு படைப் பிரிவின் தலைவரை இதற்குப் பணிப்புரை செய்துள்ளார். மதுரை நீதியர் ஆயம் ம.தொ.பா.ப. ஒரு பிரிவை நீதிப்பேராணை மனுதாரரின் பாதுகாப்புக்காக அனுப்பியுள்ளார் மற்றும் அவருடன் சேர்ந்தவர்களுக்கு நீதிமன்ற ஆணையை நிறைவேற்ற உதவுமாறு பணிந்து ள்ளார்.

9. இந்த மேல்முறையீட்டின் மொத்த வாத மாவது முதல் மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையாகிற கூடுதல் அரசு வழக்குரைஞர் பின்வருமாறு கூறியுள்ளார்.

(அ) நீதிமன்ற அவமதிப்பு வழக்கு இது மீறப்படும் என்ற எதிர்பார்ப்பின் முன்னிடப்பட்டது டேக்கப்படாது உள்ளது.

(ஆ) தொடர்புடைய தரப்பினர்களது தங்களை சார்பாற்ற செய்ய வாய்ப்பினை நல்காது. தனி நீதிபதி கூறியுள்ள முதலாவது இதில் பூசலுக்கு இடமேயில்லை என்பது அதாவது நீதிமன்ற அவமதிப்பு வழக்கைப் பொருத்தவரை.

(இ) தனி நீதிபதி கண்டறிந்துள்ளதாவது, தர்கா மற்றும் அதனைச் சார்பாற்றம் செய்பவர்கள் மட்டுமே இதனால் குறையுற்றவர்கள் ஆவர். 7.12.2025 தேதியிடப்பட்ட ஆணைக்கெதிராக எடுக்கப்பட்ட இடைநிலை நீதிமன்ற மேல் முறையீடு கோவில் நிர்வாக அலுவலரால் சார்பாற்றம் செய்யப்பட்டது. இது கருதுகைக்கு குறையுற்ற தரப்பாகாது என்பது.

ஈ) கூடுதல் அரசு வழக்குரைஞருக்கிணங்க, கோயிலும் குறையுற்ற தரப்பினரே. கோவிலுக்கு மேல்முறையீடு செய்ய 30 நாட்கள் அவகாசம் உள்ளது. அவ்வாறு இருக்கையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை ஏற்பது மற்றும் ஆணைக்கு இணங்கி நடக்கமாறு நீதிப்பேராணை மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு இவை கெட்ட எண்ணத்தின் வெளிப்படை வரும்.

(உ) தனி நீதிபதியின் கண்டறிதல்கள் அதாவது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை ஏற்பது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாக அடையாது. ஏனெனில் இந்த ஆணை மாலை 6 மணியளவில் இணங்கப்பட்டிருத்தல் வேண்டும். எனவே, தீபத்தூணில் தீபம் ஏற்ற நீதிப்பேராணை மனுதாரரை அனுமதிப்பது மாற்று உய்தி/தீர்வாக அமையும். இது வழங்கப்பட வேண்டியது. இது நீதிமன்ற அவமதிப்பு வேண்டியது. இது வழக்கின் வீச்சிற்கு அப்பாற்பட்டதுமாகும்.

(ஊ) உச்சநீதிமன்ற வழக்கின் தீர்ப்பை சுட்டுவதாவது சுதிர் வாசுதேவா –எதிர்– எம்.ஜார்ஜ் ரவிசேகரன், 2014 (1) (LLN) 296 (உச்.நீ.), 2014 (3) உச்.நீ.வ. 373. இதனைப் பின் தொடர்ந்துள்ள தீர்ப்பாவது அமித்குமார் தாஸ் –எதிர்– ஸ்ரீமதி உத்திசிங் தாகூர் அறக்கட்டளை, 2024 (11) உச்.நீ.வ. 679, கூடுதல் அரசு வழக்குரைஞர் பணிந்தளித்ததாவது தனி நீதிபதி நீதிப்பேராணை மனுவின் நான்கு மூலைகளுக்கு மேலும் நீதிபதி பயணித்துள்ளார் என்பது.

(எ) தனி நீதிபதி, நீதிமன்ற அவமதிப்பு மனுவை கருதுகை செய்வதில், இது ஒரு நிறைவேற்றுதல் நீதிபதியாகச் செயற்பட்டுள்ளது. இது சட்டப்படி அனுமதிக்கத்தக்கதல்ல. இந்திய அரசமைப்பின் உறுப்பு 3இன் 129, 215. உயர்நீதிமன்றத்திற்க அதிகாரமளிப்பதாவது, வேண்டுமென்றே கீழ்ப்படியாமை என்பது மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து, எந்த முறையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, ஏற்கப்பட்டதோ அதே முறையில், அது மனுவை செயற்படுத்துவது என்பதில் உயர்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் வீச்செல்லைகளுக்கு அப்பால் அது பிறப்பிக்கப்பட்ட ஆணை பற்றி அதன் வீச்செல்லை அந்த ஆணையின்படி அந்த ஆணையின் வீச்செல்லைக்கு வெளியேறுவதாக உள்ளது.

(ஐ) தனி நீதிபதியே மலை உச்சிக்குச் செல்ல மனுதாரரை அனுமதிக்கிறதும் மற்றும் எங்கே கார்த்திகை தீபத்தினை தீபத்தூணை ஏற்றுவதும், ஒரு அறிகுறியாக உள்ளது. இது முந்தைய தீர்ப்புகளுக்கு மாறாக உள்ளது. அதில் உரிய இடங்களில் மட்டுமே தீபத்தை ஏற்ற கோவில் அதிகாரிகளுக்கு அதிகாரமளித்துள்ளது மற்றும் இதில் ஒரு மூன்றாம் தரப்பினரை மலை உச்சியில் ஏன் தீபமேற்ற அனுமதிப்பது கூடாது.

(ஒ) தனி நீதிபதியின் ஆணையில் அது நீதிப்பேராணை மனுவின் வீச்சுக்கு வெளியே சென்று நீதிப்பேராணைதாரரை மலை உச்சியில் தீபமேற்ற செல்லவும் அனுமதிக்கவும் கூறுவதே. இதில் ம.தொ.பா.ப. பிரிவின் தலைவரை அதாவது மதுரை நீதியர் ஆயத்தின் பிரிவினை ம.தொ.பா.ம.யினரை பாதுகாப்பிற்காக அனுப்புவதும் அவர்களுக்கு பாதுகாப்பளிப்பதும் நீதிப்பேராணை மனு மற்றும் அதன் கூட்டாளிளுக்குப் பாதுகாப்பளிப்பது அதன் வீச்சுக்க மேற்பட்டதாக உள்ளது மற்றும் இது உயர் நீதிமன்ற நீதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகார வீச்சிற்கு மீறுகையாகவே உள்ளது மற்றும்

(ஓ) ம.தொ.பா.ப. பாதுகாப்பு, உயர் நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. அதாவது பிரதான மதுரை நீதியர் ஆயத்திற்கு மட்டும். அதாவது அந்த இடத்தின் பாதுகாப்புக்காக மற்றும் அதன் ஆட்சி மண்டலத்திற்கு மேற்பட்ட பரப்பிற்கு இல்லை. நீதிப்பேராணை மனுதாரருடன் ம.தொ.பா.ப. பிரிவின் தலைவரை அதாவது மதுரை நீதியர் ஆயத்தின் பிரிவினை ம.தொ.பா.ம.வினரை பாதுகாப்பிற்காக அனுப்புவதும் அவர்களுக்கு பாதுகாப்பளிப்பதும் நீதிப்பேராணை மனு மற்றும் அதன் கூட்டாளிகளுக்குப் பாதுகாப்புக்காக மற்றும் அதன் ஆட்சி மண்டலத்திற்கு மேற்பட்ட பரப்பிற்கு இல்லை. நீதிப்பேராணை மனுதாரருடன் ம.தொ.பா.ப. வினரை கூடவே செய்யக் கூறுவது. அதாவது திருப்பரங்குன்ற மலைவரை மற்றும் பாதுகாப்பளிக்கக் கோருவது. கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பாக. இது தீபத்தூணில் தீபம் ஏற்றக் கோருவது தெளிவாக நீதிமுறையின்படி எல்லை மீறுகையாக அமைவதாகும்.

10. கூடுதல் அரசு வழக்குரைஞர் தனி நீதிபதியின் ஆணையை எதிர்ப்பதில் சில தனி நீதிபதி தொடர்பாகக் கூறியுள்ளார். ஆனால் நாம் இதனை கண்டிக்கிறோம். அவரது குறிப்பிடுவதால்களை நாங்கள் எடுத்துக் கூறியபோது அவற்றை இவர் உடனடியாக மீளப் பெற்றுள்ளார்.

11. கூடுதல் அரசு வழக்குரைஞரின் பிரதான வாதமாவது முந்தைய நடவடிக்கைகளை

கவனிக்காக நீதிப்பேராணை மனு அனுமதிக்கப் பட்டுள்ளது என்பது மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு அளிக்கப்பட்ட உய்திக்கு அப்பாற்பட்டது. அதுவும் குறையுற்ற தரப்பினர்களுக்கு வாய்ப்பு ஒன்றினை நல்காமல் அவர்கள் மேல்முறையீடு செய்ய உள்ளனர். எனவே உடனடி இடையீடு செய்து இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது. அதாவது 3.12.2026 தேதியிட்ட தனி நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட ஆணையைத் தள்ளுபடி செய்வது.

12. திரு.வீரகதிரவன், கூடுதல் அரசு வழக்குரைஞர் மீண்டும் இந்த வாதங்களை நினைவுபடுத்துகிறார். இவை திரு.ஜெ. ரவீந்திரன் என்னும் கூடுதல் அரசு வழக்குரைஞரால் செய்யப்பட்டவை. இது தனி நீதிபதியால் அவசர கோலத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஏற்கப்பட்டது. இதில் உயர்நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட அவமதிப்பு வழக்கிற்கான விதிகள் பின்பற்றபடவில்லை. இதில் குறையுற்ற தரப்பினர்கள் கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்படவில்லை. தனி நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் நிலைத்தன்மை பற்றியும் கவனிக்காது. தனிநீதிபதியால் நீதிப் பேராணையை இடப்பட்ட ஆணை. இதில் நீதிமன்ற அவமதிப்பு ஆணையும் பிறப்பிக்கப் பட்டது. இது நீதியர் ஆயத்தின் அதிகார வரம்பும் இடையீடு செய்வதாக அமையும். இதன் மூலம் நீதிப்பேராணை மேல்முறையீட்டு மனு செயற்பட முடியாநிலை ஏற்படும்.

13. மேற்சொல்லப்பட்ட பணிந்தனுப்புதல் களுக்கு எதிர்வினையாக நீதிப்பேராணை மனு தாரருக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர் பணிந்தனுப்பியதாவது இந்த வழக்கில் தெளிவாக்கப்படுவதாவது மாநில நிர்வாகம் வேண்டுமென்றே உயர்நீதிமன்ற ஆணையை மதிக்காது செயற்படுத்துகிறது என்பது. மேல் முறையீட்டாளர்களின் செயற்பாட்டால் நீதிமன்றம் மொத்தமாக மட்டமாக மதிக்கப்படுகிறது. உரிய கருதுகைக்குப் பின்னர், 1.12.2005 தர்கா 15 மீட்டர் தொலைவில் உள்ளது. இதற்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த கல்தூணில் தீபம் ஏற்றும் சடங்கை நிறைவேற்ற உரிமையுள்ளதாக இந்திய அரசமைப்பில் உறுப்புகள் 25, 6ஆம் மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமையை நிலை நாட்டுவதாகக் கூறப்படுகிறது. இந்த கோவில் 1200 ஆண்டுகளுக்கு மேல் பழைமையானது, தீபத்தூணில் தீபம் ஏற்றும் பழக்கமான கோவிலைப் போன்றே பழக்கமான பழக்கம். 100 ஆண்டுகளாக இந்தப் பழக்கம் தொடரப்பட வில்லை என்றும் காரணத்தால் அதுவும் படையெடுப்பு காரணமாக ஏற்பட்டிருக்கக் கூடும். இவர்கள் சாமி கும்பிடும் உரிமையை திருப்பரங் குன்றத்தின் குன்றில் இருந்து எடுத்துக் கொள்ள முடியாது. இந்த நீதிமுறை ஆணையின்மூலம் இந்த நீதிமன்ற மீட்டுள்ளது. இதில் பொய்யான குற்றச்சாட்டுகள் தனி நீதிபதியின் மீது சுமத்தப் பட்டுள்ளது. நீதிமன்றம் அவமதிப்பான்கள் தற்போதைய மேல்முறையீட்டின் மூலம் ஆணையை பின்பற்றதாததற்காக தனி நீதிபதி 1.12.2025 அன்று பிறப்பித்த தனி நீதிபதியின் ஆணை யுள்ளது.

14. நீதிமன்ற அவமதிப்பு மனுவில் ஆணை பிறப்பித்த பின்னரும் இதில் இது மேல்முறை யீட்டில் ஏற்கத்தக்கதா இல்லாதபோதிலும் மேல்முறையீட்டாளர்களிடம் வேண்டுமென்றே இந்த ஆணையை அவமதித்துள்ளனர். இவர்கள் தீபம் ஏற்றும் மனுதாரரை தீபம் ஏற்ற அனுமதிக்க வில்லை. இவர்களுக்கு ம.தொ.பா.ப. தீபத் தூணில் தீபமேற்ற தனிப்பட்ட பாதுகாப்பு அளிக்கிறது. இவர்கள் ஏற்கனவே, இந்த ஆணையை நிறைவேற்ற மறுத்துள்ளார். அதாவது 3.12.2025 தேதியிட்ட நீதிமன்ற ஆணையை இதன் மூலம் மேலும் ஒரு நீதிமன்ற அவமதிப்பை செய்துள்ளனர்.

15. மேல்முறையீட்டாளர்களின் வழக்கறிஞர் கூறியுள்ளதாவது மாநிலத்தின் அரசமைப்பின் படியான கடமையை பாதுகாக்க அரசமைப்பும் இணங்க பணியாற்றவும் தவறியுள்ளனர். இவர்கள் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க தவறியுள்ளார் மற்றும் இந்திய அரசமைப்பின் உறுப்பு 22இன்படி நீதிமுறை ஆணையை அவமதிப்பு செய்துள்ளனர். இவர்கள் ஒரு நிர்வாக ஆணையை பிறப்பித்து பிரிவு 163 பி.என்.35 படியும் கு.வி.தொ.ச. 144ஆம் பிரிவு இன்படியும் பிறப்பித்துள்ளார். இது அரசமைப்பின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்ற நிர்வாக இயந்திரம் தவறியுள்ளதாக காட்டப்பட்டுள்ளது.

16. முறையே தரப்பினர்கள் வழக்கறிஞர்கள் கேட்டறியப்பட்டனர்.

17. இந்த நீதிமன்றம் காண்பதாவது, தனி நீதிபதி நீ.பே.ம.(MD) எண் 32317/2025இன் படி பிறப்பித்த ஆணையை ஒரு குறிப்பிட்ட பணிப்புரையை வழங்கியது. கோவில் மேலாண்மை /தேவஸ்தானத்திற்கு அதாவது கார்த்திகை தீபத்தினை தீபத்தூணில் ஏற்றவும். அதாவது சாதாரண இடத்தில் ஏற்றுவது அல்லாது இந்த இடத்திலும் ஏற்ற ஆணை யிட்டது. கார்த்திகை தீப விளக்கு சூரிய அஸ்தமனத்திற்கு பின் உடனடி யாக ஏற்றப்பட வேண்டியது. அதுவும் பௌர்ணமி தினத்தன்று தமிழ்நாட்டில் கார்த்திகையில் இந்த ஆண்டு பௌர்ணமி 3.12.2025 அன்று வந்துள்ளது. தனி நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட பணிப்புரையின்படி கோவில் மேலாண்மை/ தேவஸ்தானம் 6 மணி மாலையில் தீபத்தினை தீபத்தூணில் ஏற்ற வேண்டியது. இது நீதிமன்றத்தி னால் ஆணையில் குறிப்பிடப்பட்ட இடம்.

18. நான்காம் எதிர்வழக்கீட்டாளர் கோவிலைச் சார்பாற்றம் செய்பவர் நீதிமன்ற ஆணையை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. நீதிப்பேராணை மனுதாரர் தனி நீதிபதியை அணுகி நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முன்னிடக் கோரியுள்ளார்.

19. கூடுதல் அரசு வழக்கறிஞர் மாநிலத்தை சார்பாற்றம் செய்பவர் தனி நீதிபதியிடம் தவறைக் காண்கிறார். அதாவது அவர் கூறிய உடன் அவமதிப்பு வழக்கை ஏற்பது தொடர்பாக.

20. தனி நீதிபதியின் மீது சுமத்தப்பட்ட பழியாவது. இதில் ஏற்று கவனிக்கப்படத்தக்க தல்ல. இதில் நீதிப்பேராணை மனுதாரரும் நான்காம் எதிர்வழக்கீட்டாளரும் தீபத்தை ஏற்ற எந்த ஏற்பாடும்களை செயற்படுத்தாது. அதாவது தீபத்தூணில் தீபம் ஏற்ற ஏற்பாடு செய்யாது இருந்து வந்துள்ளனர்.

21. தனி நீதிபதி எந்த ஆணையையும் உடனடியாகப் பிறப்பிக்கவில்லை. அந்த நாளில் அரசு கூடுதல் வழக்கறிஞரால் செய்யப்பட்ட பணிந்தனுப்புதல்களை எடுத்துள்ளார். அந்த பொருட்பாட்டை மாலை 6.05க்கு எடுத்துள்ளார். அதுவும் நான்காம் எதிர்வழக்கீட்டாளர் அந்த ஆணைக்கு இணங்க இவர் அளித்துள்ளார். இதுவும் நீதிப்பேராணையில் கூறப்பட்ட ம.தொ. பா.ப.வின் தனிப்பட்ட பாதுகாப்புடன்.

22. ம.தொ.பா.ப.வினை ஏற்பாடு செய்வது கட்டளை தொடர்பாக. கூடுதல் அரசு வழக்கறிஞர் தானே முற்பட்டு நீ.பே.ம.(MD) எண் 29197/ 2015 பணிந்தனுப்பியதாவது பாதுகாப்பு ஏற்பாடு உயர்நீதிமன்றத்திற்கானது. ம.தொ. பா.ப. நீதிமன்ற வளாகத்திற்குள் எதிர்பாராத சி.பி.செயற்பாடுகள் நடப்பதை தவிர்ப்பதற் கானது மற்றும் நீதிமன்ற செயற்பாட்டில் சிறந்த முறையில் நீதி வழக்கை அடிகோலுவதும் இது ம.தொ.பா.ப. நீதிமன்ற ஆணையை நிறைவேற்றுவதற்கானது இந்த ஆணை மூலம் தனி நீதிபதி மாநில காவல் துறையை கீழ்ப்பட்டு மதிப்பிட்டுள்ளார் மற்றும் மாறிய மைய உறவில் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

23. இதற்கு எதிர்வினையாக நீதிப்பேராணை மனுதாரரின் வழக்கறிஞர் பணிந்தளித்ததாவது 3.12.2025 அன்று தனி நீதிபதியால் ஆணை பிறப்பிக்கப்பட்டபோது மேல்முறையீட்டாளர்கள் வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகியிருந்தனர். இவர்கள் தீபம் குறிப்பிட்ட இடத்தில் ஏற்றப்படும் என்றும் உறுதியை நீதிமன்றத்திற்கு அளிக்க வில்லை அல்லது தீபம் ஏற்றப்படுவதற்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் உறுதியை யும் அளிக்கவில்லை.

24. சட்டம், ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இவர்கள் நீதிமறை ஆணையை இணங்க மறுத்துள்ளனர். இவர்கள் சட்டப்படி அங்கு கூடியிருந்த மக்களை தடுத்துள்ளனர். அதாவது நீதிமன்ற ஆணையை நிறைவேற்ற முற்பட்டவர்களை.

25. ம.தொ.பா.ப.வின் பணி ஏற்பாடு செய்யப் பட்டதே மாநில காவல் பாதுகாப்பு அளிக்க மறுத்தக் காரணம் மற்றும் நீதிமன்ற ஆணையை இணங்க மறுத்தது. இதில் மாநில அரசு நீதிமன்ற ஆணையை கீழ்ப்படிய மறுக்கும் போதும், பாதுகாப்பு அளிக்க மறுக்கும் போதும் நீதிமன்றம் செயலற்று இருக்க முடியாது. இதற்கு பிற இடங்களிலிருந்து உதவியை பெற்றுள்ளது. வட்டார காவல் இல்லாத சீருடைப் பணியாளர்கள் ம.தொ.ப.பா.வின் பணி கோரப்பட்டுள்ளது.

26. இந்த பூசலின் ஒட்டு மொத்த பொருட்பாடாவது சாமி கும்பிடுவதற்கான உரிமை பற்றியது. இது இந்திய அரசமைப்பின் உறுப்பு 25, 26இனால் பாதுகாக்கப்படுகிறது. அரசமைப்பின் கடமையல்லாதக மாறிய இயந்திரம். நீதிமன்ற ஆணையை நிறைவேற்றக் கடமைப்பட்டதாகும் இந்த வழக்கில், தனி நீதிபதியால் 1.12.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணை நான்காம் எதிர்வழக்கீட்டாளரால் இணங்கி நடக்கப்படவில்லை. இது தனி நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது, இவருக்கு மாற்று உய்தி வழங்கப்பட்டது. எனவே இந்த ஆணை நோக்கத்துடன் பொருள் பொறிந்தது. இந்த ஆணையும் நிறைவேற்றப்படவில்லை. மேல்முறையீட்டாளர்களால் இந்த ஆணையை விழலாக்கும் நோக்குடன் மாவட்ட ஆட்சியர் BN-SS சட்டத்தின் 163ஆம் பிரிவின் படியான நிர்வாக அதிகாரத்தை செயற்படுத்தி தடை ஆன பிறப்பித்துள்ளார். காவல் துறையினர் மனுதாரர்கள் மலை உச்சியை அடைவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

27. அரசு கூடுதல் வழக்கறிஞர் மாவட்ட ஆட்சியரின் நிர்வாக ஆணையை ஆதாரமாகக் கொண்டு இந்த நீதிமன்றத்தை ஏற்குமாறு செய்ய முயற்சித்துள்ளார். பின்னர் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இது நீதிமன்ற ஆணையை மேலோங்கி நிற்கும். நாங்கள் அவ்வாறு இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று காட்டுமாறு கேட்டபோது இந்தக் கோப்பு கூடுதல் வழக்கறிஞரால் அளிக்கப்பட்டது. அதாவது தடையுறுத்து ஆணை BNSS சட்டத்தின் 163ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்டது. கோப்பில் சரித்திரம் உள்ளதாகவும், அதாவது தீபம் ஏற்றுவதில் இருந்த பூசல் தொடர்பாக. திருப்பரங்குன்றத்தில் சிக்கந்தர் தர்காவிற்கு அருகில் உள்ள இடம் தொடர்பாக. இந்த ஆணை 3.12.2025 அன்று 6 மணியளவில் வெளியிடப்பட்டது. இதில் எவரையும் திருப்பரங்குன்றம் மலை ஏறுவதைத் தடுக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இது திருப்பரங் குன்றத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைக்கு வழி வகுக்கக் கூடும். இது BNSS ஆணைப் பிரிவு 163இன்படி நீதிமுறை ஆணைக்கு முன்னரே பிறப்பிக்கப்பட்டது அல்லது இதில் பதிவேடுகள் சரி செய்யப்பட்டிருந்தன. அதாவது நீதிமன்றம் பதிவேடுகளை கேட்ட பின்னர்.

28. மாவட்ட ஆட்சியரால்/முதல் மேல்முறையீட்டாளரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை பின்னர் காவல்துறை ஆணையர் மூலம் பின்பற்றப்பட்டது. இதில் இவர் இரண்டாம் அருகில் கூடுதல் தொடர்பானது. அதாவது எதிர்ப்பினை நடத்துவது சேர்ந்தனர். இவர்கள் மலைமேல் ஏற முயற்சித்தனர் மற்றும் தீபம் ஏற்ற முற்பட்டனர். இ.ச. மற்றும் அது. நிர்வாகிகள் தீபத்தை ஏற்ற முற்பட்டனர். கட்டுத்திட்ட மற்றவர்கள் மலை மீது ஏறக் கூடும் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படலாம் என்பதால் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டது. 6.03 மணிக்கு தடுப்புகள் உடைக்கப்பட்டன.

29. எங்களுக்கு புரியவில்லை எவ்வாறு உயர்நீதிமன்றத்தின் குறிப்பிட்ட ஆணை. அதாவது 10 எண்ணிக்கையிலான உறுப்பினர்களை மனுதாரருடன் தீபத் தூணில் தீபம் ஏற்றுவதற்கு எவ்வாறு தடை ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவர்களுக்கு எதிராக என்பது. BSNNஇன் 163ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட நிறைவேற்றுதல் ஆணை எவ்வாறு நீதிமன்ற ஆணை இந்திய அரசமைப்பின் 226ஆம் உறுப்பின்படி பிறப்பிக்கப்பட்டதற்கு மேலூர்த்து இயங்கும் என்பது. இது உரிய நேரத்தில் தீர்மானிக்கப்படும் என்பது. 3.12.2025 தேதியிட்ட தடையுறுத்து ஆணை விளம்பப்பட்டு, தெரிவிக்கப்பட்டது. R.O.C. எண் C3/2952850/2025 மாவட்ட குற்றவியல் நடுவரால் மற்றும் மாவட்ட ஆட்சியரால் பிறப்பிக்கப்பட்டது. ஒரு சமயச் சடங்கு நடைபெறும்போது இந்த தடையுறுத்து ஆணை சட்டம் அல்லது ஊர்வலத்திற்கு பொருந்தாது.

30. இத்தகைய நிகழ்வுகளிலிருந்து நாம் கூறுவது மேல்முறையீட்டாளர்கள், செயல் விளைவுக்குப் பயந்தும் அதனைத் தொடரும் செயல்களை தவிர்க்க கருதியும், காப்புரிமை மேல்முறையீட்டில், முன் எச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளரின் செயற்பாடு, திட்டமிடப்பட்டது. இவர் தனி நீதிபதியின் 3.12.2025 ஆணைக்கு தேதியிடப்பட்ட இணங்கிய செயற்படவில்லை. இவர்கள் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கோரிட நீதிமன்றத்தை நாடியுள்ளனர். தனி நீதிபதியே இவரது 3.12.2025 இணங்கி நடக்கப்படாதது வேண்டுமென்றே செய்யப்பட்டதா இல்லையா என்பது

இவரே தீர்மானிக்க வேண்டும். நாம் உடனடியாக இதன் மேல்முறையீட்டை மேற்கொள்ள முடியாது.

31. 3.12.2025 தேதியிடப்பட்ட பிறப்பிக்கப் பட்டது. நீதிமன்ற அவமதிப்பு ஆணை இது முந்தைய ஆணையை மாற்றியமைப்பதாகாது. முந்திய ஆணை செயற்படுத்தப்படாதபோது இந்த ஆணையை காப்பாற்றும் பொருட்டு தனி நீதிபதி மனுதாரர்களை கல்தூணில் தீபத்தை ஏற்ற அனுமதித்துள்ளார். கல்தூணை தீபத்தூண் என்று அறியப்பட்டது அதுவும் பெரிய கார்த்திகை தீபத்தின்போது அதுவும் பௌர்ணமி நிலவில் கார்த்திகை மாதத்தின்போது.

32. தனி நீதிபதி மாநில இயந்திரம் வேண்டு மென்றே, ஆணையை நிறைவேற்றத் தவறி யுள்ளபோது, பல்வேறு மேல்முறையீடுகள் நடப்பில் உள்ளபோது, ம.தொ.பா.ப.வின் உதவியை இது நாடியுள்ளது. அதாவது பணிப்பு ரைகளை நிறைவேற்றுவதற்காக. இந்த நிலை ஏற்பட்டதே மாநில காவல்துறை அரசமைப்பின் செயற்பாட்டை நிறைவேற்ற இயலாதபோது, இதில் மைய காவல்துறை உதவியை நாடுவதில் அந்த சட்ட முரணும் இல்லை. சொல்லப்பட்ட நோக்கத்திற்காக, சூழ்நிலைகள் ஏற்றதாக செயற்படுமானால் செயற்படுத்தப்படும்.

33. 1.12.2025 தேதியிடப்பட்ட முந்தைய ஆணையின்படி இந்தப் பணியைச் செயற் படுத்தும் முந்தைய பொறுப்பு நான்காம் எதிர் வழக்கீட்டாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர், நான்காம் எதிர்வழக்கீட்டாளர் அவரது கடமையை ஆற்றத் தவறியுள்ளார் என்று கண்டறிந்த பின்னர், அதாவது நீதிப்பேராணை மனுதாரர் களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்படு கிறது. இதனால் ஆணை எதுவும் மாற்றப்பட வில்லை. ஆனால், கட்சி மாற்றம், இதில் தீபம் ஏற்றுவதே பெறம் கடமைப் பொறுப்பு. இதில் மேல் முறையீடு முன்னிடப்பட்டுள்ளது. இதன் உட் கருத்தாவது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகிறது என்பது.

34. மேற்கண்ட கண்டறிதல்களுடன் மேல் முறையீட்டு உரிமை தள்ளுபடி செய்யப்படு கிறது. தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப் படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## தமிழ்நாடு சட்ட ஆணைய தலைவர் நியமனம்

தமிழ்நாடு சட்ட ஆணையம் மறுசீரமைக்கப் பட்டு, அதன் புதிய தலைவராக மணிப்பூர் உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி டி.கிருஷ்ண குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சட்ட ஆணையத்தின் பதவிக் காலம் கடந்த ஜூன் 18ஆம் தேதி நிறைவடைந்தது. இதையடுத்து, தற்போது சட்ட ஆணையம் மறுசீரமைக்கப்பட்டு தலைவர் மற்றும் முழுநேர, பகுதிநேர உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். மாநில சட்ட ஆணையத்தின் தலைவராக டி.கிருஷ்ணகுமார் நியமிக்கப்பட்டு உள்ளார். முழுநேர உறுப்பினர்களாக ஆர்.எம்.டி.டீக்கா ராமன் சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி டி.கே.ராமச்சந்திரன் (முன்னாள் கூடுதல் தலைமைச் செயலர்), ஏ. கிருஷ்ணகிரி (சட்டத் துறை முன்னாள் செயலர்), பகுதி நேர உறுப்பினர்கள் பி.மோகன் தாஸ் (முன்னாள் மாவட்ட நீதிபதி), ஆர் கோவிந்த ராஜன் (முன்னாள் மாவட்ட நீதிபதி சட்டத் துறை செயலர் நிலையில் உள்ள அதிகாரி முழுநேர உறுப்பினர் செயலராகச் செயல்படுவார்.

ஆணைய பணிகள் நடைமுறையில் உள்ள சட்டங்களின் குறைபாடுகளை நீக்க பரிந்துரைத்தல், சமூக பொருளாதர சட்ட நடவடிக்கைகளுக்கு பரிந்துரை வழங்குதல், மத்திய–மாநில உறவுகள், மாநிலங்களிடையே உறவுகள் தொடர்பான பரிந்துரைகள் அளித்தல், நீதித்துறை சீர்திருத்தங் களை விரைவுபடுத்த பரிந்துரைத்தல், தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள மத்திய மற்றும் மாநில சட்டங்கள், சீரமைக்கும் பரிந்துரைகள் அளித்தல், தமிழ்நாட்டின் சட்டங்கள், விதிகளை பகுப்பாய்வு செய்து பரிந்துரைத்தல் ஆகியவை இந்த ஆணையத்தின் முக்கிய பணிகள் ஆகும்.

தற்போதைய ஆணையத்தின் தலைவர், பகுதிநேர, முழுநேர உறுப்பினர்களின் பதவிக் காலம் பதவியேற்கும் நாளில் இருந்து 3 ஆண்டுகள் ஆகும்.

**யார் இந்த நீதிபதி கிருஷ்ணகுமார்?** : நீதிபதி கிருஷ்ணகுமார் திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் பிறந்தவர், 1987–இல் வழக்குரைஞராகப் பதிவு செய்தார். 1991 முதல் 1996 வரை சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்குரைஞராகவும் 1998 முதல் 1999 வரை கூடுதல் மத்திய அரசு நிலைக்குழு வழக்குரைஞராகவும், 2001 முதல் 2006 வரை சிறப்பு அரசு வழக்குரைஞராகவும் பணியாற்றினார்.

2016 ஏப். 7–இல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட கிருஷ்ணகுமார், 2024–இல், சென்னை உயர்நீதிமன்ற தற்காலிக தலைமை நீதிபதி ஆர்.மகாதேவன், உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டதால், சென்னை உயர்நீதிமன்ற தற்காலிக தலைமை நீதிபதியாகவும் பணியாற்றினார். கடந்த 2024 நவம்பரில் மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகப் பதவியேற்ற கிருஷ்ணகுமார், 2025 மே மாதம் ஓய்வு பெற்றார்.

**நன்றி: தினமணி 10.8.2026**

# உங்களைப் பற்றி அனைத்தையும் அறிந்த, ஆனால் நீங்கள் இந்தியரா என்பதை மட்டும் அறியாத அரசு

(குடியரசின் இறையாண்மை முத்திரை பதிக்கப்பட்ட, வெளிநாடுகளில் இந்திய அரசின் ராஜதந்திர பாதுகாப்பைப் பெற்றுத்தரும் ஒரு ஆவணம், நீங்கள் உள்நாட்டில் ஒரு குடிமகன் என்பதை உறுதியாக நிரூபிக்க முடியாது என்றால், வேறு எதுதான் நிரூபிக்கும்?)

**-ரித்விக் சௌத்ரி**

2026 ஜூன் 25 அன்று, 'பாஸ்போர்ட் சேவா திவாஸ்' முடிந்து ஒரு நாள் கூட முழுமையடையாத நிலையில், சற்றே முரண்பாடான வகையில், வெளியுறவு அமைச்சகம் இந்தியர்களின் சிந்தனை மீது ஒரு அதிகாரத்துவப் பேரிடியை இறக்கியது. இந்திய கடவுச்சீட்டு என்பது சர்வதேச பயணத்தை எளிதாக்குவதற்கான ஒரு 'பயண ஆவணம்' மட்டுமே என்றும், அதனைக் குடியுரிமைக்கான உறுதியான ஆதாரமாகக் கருத முடியாது என்றும் அமைச்சகம் தெளிவுபடுத்தியது.

சாதாரண இந்தியனைப் பொறுத்தவரை, இது ஒரு உச்சகட்ட குழப்பமாகும். குடியரசின் இறையாண்மை முத்திரை பதிக்கப்பட்ட, வெளிநாடுகளில் இந்திய அரசின் ராஜதந்திர பாதுகாப்பைப் பெற்றுத்தரும் ஒரு ஆவணம், நீங்கள் உள்நாட்டில் ஒரு குடிமகன் என்பதை உறுதியாக நிரூபிக்க முடியாது என்றால், வேறு எதுதான் நிரூபிக்கும்?

'உங்களை ஒரு இந்தியராக்குவது எது?' என்ற கேள்வி வெறும் கல்வி விவாதமாக மட்டுமே இல்லாமல் போன ஒரு காலகட்டத்தில் இது தொடர்பான முரண்பாடு எழுந்துள்ளது. இந்திய நீதித்துறை மற்றும் குடிமக்கள் வாழ்வில் நாம் ஒரு புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளோம். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல்களுக்கான சிறப்பு தீவிர திருத்தத்தின் தரவு அடிப்படையிலான அதிரடி நீக்கங்களுக்கும், அடையாளத்தைச் சுற்றியுள்ள உடைந்த சட்டக் கட்டமைப்புக்கும் இடையில், மில்லியன் கணக்கான இந்தியர்கள் இந்திய அரசின் இருண்ட யதார்த்தத்தைக் கண்டறிந்து வருகின்றனர். ஏனெனில், உங்கள் இருப்பைக் கண்காணிக்க மிகவும் திறமையான ஒரு கட்டமைப்பை அது உருவாக்கியுள்ளது, ஆனால் நீங்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்தானா என்பதைச் சரிபார்க்க ஒற்றை, ஒருங்கிணைந்த தரநிலை ஏதும் அதனிடம் இல்லை.

உங்கள் வாக்காளர் அடையாள அட்டை பறிக்கப்பட்டால், காவல் துறையினர் உங்கள் பின்னணிச் சரிபார்ப்புகளை மறுப்பார்கள். நீங்கள் உங்கள் ஆதாரை வழங்கினால், அது வெறும் பயோமெட்ரிக் ரசீது மட்டுமே என்று உச்ச நீதிமன்றம் உங்களுக்கு நினைவூட்டுகிறது. உங்கள் கடவுச்சீட்டைக் காட்டினால், நிர்வாகத் துறை அதனை வெறும் பயண அனுமதிச் சீட்டாகத் தரம் குறைக்கிறது. இந்தியக் குடியுரிமை பிரிக்க முடியாத ஒரு அரசியலமைப்பு உரிமையிலிருந்து, நிச்சயமற்ற ஒரு நிர்வாகச் சந்தாவாக மாறும் ஒரு விசித்திரமான மற்றும் அச்சுறுத்தும் மாற்றத்தை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஆவணமும் ஏதோ ஒன்றை நிரூபிக்கிறது. ஆனால் எதுவும் முழுமையானதாக இல்லை

இந்த நெருக்கடியின் கட்டமைப்பைப் புரிந்துகொள்ள, நமது முதன்மை அடையாளக் குறிகாட்டிகளின் சட்ட அடிப்படையை நாம் பார்க்க வேண்டும். தரவுகளே முதன்மையானது என்று கருதப்படும் ஒரு சகாப்தத்தில், நமது பௌதிக மற்றும் டிஜிட்டல் ஆவணங்கள் ஒரு ஆதாரமற்ற பாலைவனமாகவே உள்ளன. இந்த விவாதம் வெறும் அரசியல் ரீதியானது மட்டுமல்ல, இது அடிப்படையில் கட்டமைப்பு ரீதியானதும் கூட.

மில்லியன் கணக்கான இந்தியர்கள் தினமும் நம்பியிருக்கும் அடையாளக் கட்டமைப்பை நாம் பிரித்து ஆராய்வோம்; ஆனால் நீதிமன்றங்களில் சோதிக்கப்படும் போது அது பயனற்றதாகவே காணப்படுகிறது.

1) ஆதார் அட்டை 2016ஆம் ஆண்டின் ஆதார் (நிதி மற்றும் பிற மானியங்கள், நன்மைகள் மற்றும் சேவைகளின் இலக்கு விநியோகம்) சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஆதார் அட்டை, இந்தியாவில்

சந்தேகத்திற்கு இடமின்றி மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு ஆவணமாகும். இருப்பினும், இந்தச் சட்டத்தின் பிரிவு 9, ஒரு ஆதார் எண் எந்தவொரு குடியுரிமை அல்லது இருப்பிடத்திற்கான உரிமையையும் வழங்காது அல்லது அதற்கான ஆதாரமாகச் செயல்படாது என்பதைத் தெளிவாகக் கூறுகிறது.

இது ஒரு செயலற்ற சரத்து அல்ல. 2026 ஜூன் 16 அன்று வெளியுறவு அமைச்சகத்தின் கடவுச்சீட்டு அறிவிப்புக்கு சில வாரங்களுக்கு முன்பு, இந்தியத் தலைமை நீதிபதி சூர்யா காந்த் மற்றும் நீதிபதி வி. மோகனா ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு, ஆதார் பயன்பாட்டிற்கு கடுமையான வரம்புகளைக் கோரும் பொதுநல மனு ஒன்றை விசாரித்தது.

ஆதார் அட்டையானது வயது, முகவரி அல்லது குடியுரிமையை நிரூபிக்க முடியாது என்று இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் அறிவிக்கைகள் வெளிப்படையாகக் கூறியுள்ளபோதிலும், வாக்காளர் பதிவுக்கு (படிவம்-6) அது வழக்கமாகக் கோரப்படுகிறது என்பதை அந்த மனு சுட்டிக்காட்டியது. ஆதார் என்பது அதிகபட்சம் அடையாளம் மற்றும் வசிப்பிடத்திற்கான ஒரு ஆதாரம் மட்டுமே என்பதை உச்ச நீதிமன்றம் பலமுறை உறுதிப்படுத்தியுள்ளது. அதாவது, ஒரு குறிப்பிட்ட புவியியல் இருப்பிடத்தில் ஒரு மனிதன் இருக்கிறான் என்பதை அது உறுதிப்படுத்துகிறதே தவிர, அந்த நாட்டைத் தன்னுடையது என்று உரிமை கொண்டாடும் அவர்களின் சட்டபூர்வமான உரிமை பற்றி அது எதுவும் கூறவில்லை.

2) கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) 2026 ஜூன் மாதத்திய வெளியுறவு அமைச்சகத்தின் அறிவிப்பு, கடவுச்சீட்டின் உள்நாட்டு முக்கியத்துவத்தைப் பறித்த காரணத்தினாலேயே ஒரு பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. கடவுச்சீட்டு என்பது 1967 ஆம் ஆண்டின் கடவுச்சீட்டு சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது. முக்கியமாக, பொது நலனுக்கு அவசியம் எனக் கருதப்பட்டால், இந்தியக் குடிமக்களாக இல்லாத தனிநபர்களுக்கும் கடவுச்சீட்டு அல்லது பயண ஆவணங்களை வழங்க கடவுச்சீட்டு சட்டத்தின் 20-வது பிரிவு மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. இந்தச் சட்ட ஓட்டை இருப்பதால், கடவுச்சீட்டு வைத்திருப்பதை முழுமையான, மறுக்க முடியாத குடியுரிமைக்கான தீர்ப்புக்கு இணையாகக் கருத முடியாது என்று நிர்வாகத் துறை வாதிடுகிறது. இது ஒரு 'வலுவான அனுமானத்தை' உருவாக்குகிறது, ஆனால் வெளியுறவு அமைச்சகத்தின் பார்வையில், இது ஒரு உறுதியான ஆதாரம் அல்ல. அமெரிக்காவிற்குள் நுழைய நீங்கள் இதைப் பயன்படுத்தலாம், ஆனால் முர்ஷிதாபாத்தில் உள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து உங்கள் பெயர் நீக்கப்படுவதைத் தடுக்க உங்களால் இதைப் பயன்படுத்த முடியாது. கடவுச்சீட்டுகள் குடியுரிமையை நிரூபிக்க இயலாதவை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததாகக் கூறி, 2013 ஆம் ஆண்டு பம்பாய் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மேற்கோள் காட்டி வெளியுறவு அமைச்சகம் தனது நிலைப்பாட்டை வலுப்படுத்த முயன்றுள்ளது.

இருப்பினும், அந்தத் தீர்ப்பை உற்று நோக்கினால், நிர்வாகத் துறையின் அப்பட்டமான தவறான வாதம் வெளிப்படும்: உயர்நீதிமன்றம் செல்லுபடியாகும் ஒரு கடவுச்சீட்டின் ஆதார மதிப்பை நிராகரிக்கவில்லை; மாறாக, அதன் முன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பிட்ட கடவுச்சீட்டின் சட்டபூர்வமான செல்லுபடியாகும் தன்மை முன்னதாகவே ரத்து செய்யப்பட்டு முடிவுக்கு வந்துவிட்டதால் அதனை நிராகரித்தது. நீதிமன்றம் சட்டப்பூர்வமான திட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் ஒரு கடவுச்சீட்டை ஆய்வுக்கு உட்படுத்தவே இல்லை.

3) வாக்காளர் அடையாள அட்டை 1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் வாக்காளர் அடையாள அட்டை, ஜனநாயக வாக்குரிமையில் உங்களைப் பங்கேற்க அனுமதிக்கிறது. 1995 ஆம் ஆண்டு லால் பாபு உசேன் வழக்கில், வாக்காளர் அடையாள அட்டை குடியுரிமைக்கான ஒரு வலுவான அனுமானத்தை உருவாக்குகிறது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எவ்வாறாயினும், தற்போதைய இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கட்டமைப்பு,

வாக்காளர் பட்டியலை தொடர்ந்து திருத்தங்களுக்கு உட்படுத்தப்படும் ஒரு நிலையற்ற, நிர்வாக தரவுத்தளமாகவே கருதுகிறது (சட்டப்பிரிவு 324-இன் கீழ்). பட்டியலில் இணைக்கப்படுவது உங்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குகிறது, ஆனால் சமீபத்திய மாதங்களில் நாம் பார்த்தது போல், பட்டியலில் இருந்து நீக்கப்படுவது ஒரு நிர்வாக சுத்திகரிப்பாகக் கருதப்படுகிறதே தவிர, தேச உரிமைப் பறிப்பாகக் கருதப்படுவதில்லை.

4) பிறப்புச் சான்றிதழ்: ஒருவேளை மக்களால் அதிகம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு ஆவணம் எதுவென்றால், அது 1969-ஆம் ஆண்டின் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பிறப்புச் சான்றிதழ்தான். இது உங்கள் வயது மற்றும் நீங்கள் பிறந்த புவியியல் இடம் ஆகியவற்றிற்கான உறுதியான சான்றாக இருந்தபோதிலும், இந்தியச் சட்டத்தின் மாறும் விதிமுறைகள் காரணமாக, குடியுரிமைக்கான ஆதாரமாக இதன் மதிப்பு நீங்கள் பிறந்த ஆண்டை மட்டுமே முழுமையாகச் சார்ந்துள்ளது. குடியுரிமைச் சட்டத்தின் தலைமுறைப் பொறி நமது ஆவண நெருக்கடியின் ஆணிவேர், 1955-ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களில்தான் உள்ளது. இது இந்தியாவை 'ஜஸ் சோலி' (மண்ணின் உரிமை) என்ற தாராளமான முறையிலிருந்து 'ஜஸ் சாங்குயினிஸ்' (ரத்த உரிமை) என்ற கடுமையான, விலக்கக் கூடிய முறைக்கு மாற்றியது.

இந்தச் சட்டம் இந்திய மக்கள் தொகையை மூன்று தனித்தனி வரலாற்று அடுக்குகளாகப் பிரிக்கிறது:

- அடுக்கு 1 (1950 ஜனவரி 26 முதல் 1987 ஜூலை 1-க்குள் பிறந்தவர்கள்): பெற்றோரின் குடியுரிமை எதுவாக இருந்தாலும், இந்திய மண்ணில் பிறந்த காரணத்தினாலேயே குடியுரிமை உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. உங்களின் பிறப்புச் சான்றிதழே இதற்கான உறுதியான ஆதாரமாகும்.

- அடுக்கு 2 (1987 ஜூலை 1 முதல் 2004 டிசம்பர் 3-க்குள் பிறந்தவர்கள்): இந்திய மண்ணில் பிறந்தது மட்டுமே போதாது. அந்த நபர் பிறந்த நேரத்தில், பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடிமகனாக இருந்தார் என்பதை நிரூபிக்க வேண்டும்.

- அடுக்கு 3 (2004 டிசம்பர் 3 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்தவர்கள்): அந்த நபர் தனது பெற்றோர் இருவரும் இந்தியக் குடிமக்கள் என்பதையோ அல்லது ஒரு பெற்றோர் குடிமகன் மற்றும் மற்றொருவர் சட்டவிரோதக் குடியேறி அல்ல என்பதையோ நிரூபிக்க வேண்டும்.

இங்கேதான் பொறி உள்ளது: ஒரு வழக்கமான இந்தியப் பிறப்புச் சான்றிதழில் குழந்தையின் பிறந்த தேதி மற்றும் இடம் மட்டுமே பதிவு செய்யப்படுகிறது; பெற்றோரின் சட்டப்பூர்வமான, அரசியலமைப்பு ரீதியான அந்தஸ்து பதிவு செய்யப்படுவதில்லை. எனவே, 1987-க்குப் பிறகு பிறந்த எவரும் தமது சொந்தப் பிறப்புச் சான்றிதழை மட்டும் பயன்படுத்தி குடியுரிமையை நிரூபிப்பது சட்டப்படி சாத்தியமற்றது.

அவர்கள் தங்களின் மூதாதையர் ஆவணங்களின் தொடர்ச்சியான சங்கிலியை சமர்ப்பிக்க வேண்டும். இது நிரூபிக்க வேண்டிய சுமையை முழுமையாகக் குடிமகனின் மீதே சுமத்துகிறது. வெள்ளம், நிர்வாக அலட்சியம் அல்லது காலப்போக்கின் காரணமாக உங்கள் பெற்றோரின் ஆவணங்கள் தொலைந்து போயிருந்தால், உங்களின் சொந்தக் குடியுரிமை உடனடியாக நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளப்படும்.

சிறப்பு தீவிர சீர்திருத்தத்தின் உள்ளே இந்தக் கட்டமைப்பின் தத்துவார்த்த பலவீனங்கள், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 2025-2026 சிறப்பு தீவிர திருத்தத்தின் போது கடுமையாக வெளிப்பட்டன. ஆரம்பத்தில், இறந்த, இடம்பெயர்ந்த அல்லது போலி வாக்காளர்களை நீக்குவதற்காக

வடிவமைக்கப்பட்ட வழக்கமான வாக்காளர் பட்டியல் தூய்மைப்படுத்தும் பணியாகவே இது பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால், இந்த சிறப்பு தீவிர சீர்திருத்தம் ஒரு மக்கள் தொகை சார்ந்த மற்றும் சட்டப்பூர்வ பூகம்பமாக மாறியது.

களத்தில் இருந்து பெறப்பட்ட தரவுகள், நிர்வாக அத்துமீறலின் கொடூரமான சித்திரத்தைக் காட்டுகின்றன. இறுதி செய்யப்பட்ட தரவுத் தொகுப்புகளின்படி, சிறப்பு தீவிர சீர்திருத்தத்தின் இரண்டாம் கட்டமானது, வெறும் 12 முக்கிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள வாக்காளர் பட்டியல்களில் இருந்து 5.18 கோடிக்கும் அதிகமான பெயர்களை நிகர அளவில் நீக்குவதற்கு வழிவகுத்தது. இது அந்தப் பகுதிகளில் உள்ள மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 10.2% என்ற அதிர்ச்சியளிக்கும் குறைப்பாகும்.

இரண்டாம் கட்ட வரைவுப் பட்டியலிலிருந்து இறுதிப் பட்டியல் வரை வாக்குரிமை பறிக்கப்பட்டதன் உண்மையான எண்களை நாம் பார்ப்போம்:

| மாநிலம் | நீக்கப்பட்ட வாக்காளர்கள் (தோராயமாக) | குறைப்பு சதவீதம் |
|---|---|---|
| உத்தரப் பிரதேசம் | 2.05 கோடி | −13.21% |
| மேற்கு வங்கம் | 83.86 லட்சம் | −10.9% |
| தமிழ்நாடு74 லட்சம் | −11.5% | |
| குஜராத் | 68 லட்சம் | −14.5% |

ஒரு வழக்கமான நடைமுறை எவ்வாறு பல கோடி வாக்காளர்களை நீக்குவதில் முடிந்தது? இதற்கான விடை தேர்தல் ஆணையம் பயன்படுத்திய அல்காரிதம்களில் உள்ளது. மேற்கு வங்கம் போன்ற முக்கியமான எல்லை மாநிலங்களில், தேர்தல் ஆணையம் 'தருக்க ரீதியான முரண்பாடு' என்ற வகைப்பாட்டையே பெரிதும் நம்பியிருந்தது.

இந்த நிர்வாக வலை, குடியுரிமை இல்லாததற்காக அல்லாமல், சிறிய தரவு முரண்பாடு களுக்காகவே வாக்காளர்களைக் குறிவைத்தது. 1971–ஆம் ஆண்டின் பழைய கையால் எழுதப்பட்ட பதிவேட்டிற்கும் 2015–ஆம் ஆண்டின் டிஜிட்டல் தரவுத்தளத்திற்கும் இடையில் ஒரு தாத்தாவின் பெயர் வெவ்வேறு விதமாக எழுத்துக் கூட்டப்பட்டிருந்தால், அந்தக் குடும்பம் கொடியிடப்பட்டதாக குறிக்கப் பட்டது. பதிவுகளில் தாய்க்கும் குழந்தைக்கும் இடையிலான வயது வித்தியாசம் கணித ரீதியாகச் சாத்தியமற்றதாகத் தோன்றினால் (கிராமப்புற இந்தியாவில் வட்டார அதிகாரிகளால் வயது தோராயமாகக் கணிக்கப்படுவது வரலாற்று ரீதியாக ஒரு வழக்கமான நிகழ்வு), அவர்களும் கொடியிடப்பட்டனர்.

முர்ஷிதாபாத் மாவட்டத்தில் மட்டும், இந்த ஒற்றை 'தர்க்கரீதியான முரண்பாடு' பிரிவின் கீழ் 4.5 லட்சத்திற்கும் மேற்பட்ட நோட்டீஸ்கள் வழங்கப்பட்டன. வங்காளத்தில் மொத்தம் 1.36 கோடி வாக்காளர்கள் இந்த வலையில் சிக்கினர். மக்களின் ஜனநாயகக் குரலைப் பறிப்பதற்காக அதிகாரத்துவ எழுத்துப் பிழைகள் திடீரென ஆயுதமாக்கப்பட்டன.

சட்டம் ஈடுகொடுக்க முயன்றது: இந்த நீக்கங்களின் பிரம்மாண்டமான அளவு பெரும் சட்டப் பின்னடைவைத் தூண்டியது. இதனால் நாட்டின் உச்ச நீதிமன்றங்கள் தலையிட்டு, நிர்வாகக் குழப்பத்திலிருந்து ஒரு ஒத்திசைவான சட்டக் கோட்பாட்டை உருவாக்க முயற்சிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அசோசியேஷன் ஃபார் டெமாக்ரடிக் ரிஃபார்ம்ஸ் –எதிர்– இந்தியத் தேர்தல் ஆணையம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வழக்கில், வாக்காளர் விகிதங்களில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியை உச்ச நீதிமன்றம் எதிர்கொண்டது. தேர்தல் நேர்மையை உறுதி செய்வதற்காக தேர்தல் ஆணையத்திற்கு

அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 324-இன் கீழ் உள்ள அதிகாரங்களை உச்ச நீதிமன்ற அமர்வு இறுதியாக உறுதி செய்தபோதிலும், அது மிக முக்கியமான, மறுக்க முடியாத ஒரு சிவப்புக் கோட்டை வரைந்தது – வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவது என்பது வாக்குரிமைத் தகுதி தொடர்பான ஒரு நிர்வாக நடவடிக்கை மட்டுமே; அது ஒருபோதும் தேசிய உரிமை குறித்த முறையான தீர்ப்பாக இருக்க முடியாது.

மோஸ்தாரி பானு –எதிர்– இந்தியத் தேர்தல் ஆணையம் (பிப்ரவரி 2026) வழக்கில் இந்த நெருக்கடி கணிசமாக ஆழமடைந்தது. முர்ஷிதாபாத்தின் பகவங்கோலாவைச் சேர்ந்த இல்லத்தரசி யான மோஸ்தாரி பானு, 'தர்க்கரீதியான முரண்பாடு' அல்காரிதத்தால் ஏற்படும் மனித இழப்புகளை உச்ச நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். உள்ளூர் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்கள் பணிச்சுமையால் திணறுகிறார்கள் என்பதையும், முறையான பயிற்சியின்றி, சந்தேகத்திற்குரியதாகக் குறியிடப்பட்ட மில்லியன் கணக்கான குடிமக்களுக்கு நியாயமான நீதித்துறை குடிமக்களுக்கு நியாயமான நீதித்துறை போல்வு விசாரணைகளை நடத்த முற்றிலும் தகுதியற்றவர்கள் என்பதையும் உணர்ந்த உச்ச நீதிமன்றம், ஒரு அசாதாரணமான நடவடிக்கையை எடுத்தது.

சிறப்பு சிறப்பு தீவிர சீர்திருத்த மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களை நிறுவுமாறு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. வெளிநாட்டவர் சட்டத்தின் கீழ் இயங்கும் மோசமான பெயரெடுத்த வெளிநாட்டவர் தீர்ப்பாயங்களில் இருந்து இந்த அமைப்புகளை வேறுபடுத்திப் பார்ப்பது மிக முக்கியமானது. சிறப்பு தீவிர சீர்திருத்த மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களில் பதவியில் உள்ள அல்லது முன்னாள் நீதித்துறை அதிகாரிகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். உண்மை யான குடிமக்களின் வாக்குரிமை நிரந்தரமாகப் பறிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், கடுமையான ஒரு வார காலக் கெடுவுக்குள் வாக்காளர் பட்டியல் நீக்கங்களை விசாரித்துத் தீர்ப்பளிப்பதே இத்தீர்ப்பாயங்களின் ஒரே, துல்லியமான நோக்கமாகும்.

மோஸ்தாரி பானு வழக்கின் விசாரணையின்போது, இந்திய அரசுக்குள்ளேயே இருக்கும் கருத்தியல் மற்றும் நிறுவனரீதியான பிளவு அப்பட்டமாக வெளிப்பட்டது. இந்தியத் தலைமை நீதிபதி சூர்யா காந்த் மற்றும் நீதிபதி ஜாய்மால்யா பாக்சி ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு, இந்த அமைப்புரீதியான வீழ்ச்சியை வெளிப்படையாகக் கையாண்டது. ஒரு குடிமகன் செல்லுபடியாகும் இந்தியப் கடவுச்சீட்டை வைத்திருந்தால், அவரது பெயர் தன்னிச்சையாக வாக்காளர் பட்டியலிலிருந்து சாதாரணமாக நீக்கப்படக் கூடாது என்று நீதிபதி பாக்சி வெளிப்படையாகக் குறிப்பிட்டார்; அத்தகைய உயர்மட்ட இறையாண்மை கொண்ட ஆவணத்தை ஒரு தீர்ப்பாயம் கூட சாதாரணமாக நிராகரிக்கக் கூடாது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இருந்தபோதிலும், சில மாதங்களுக்குப் பிறகு, ஜூன் 25ஆம் தேதியிட்ட வெளியுறவு அமைச்சகத்தின் அறிவிப்பு இந்த நீதித்துறை தர்க்கத்தை முற்றிலுமாக நிராகரித்தது. வாக்குரிமை பறிக்கப்படுவதற்கு எதிரான ஒரு சக்தி வாய்ந்த கேடயமாக பாஸ்போர்ட்டை உச்ச நீதிமன்ற நீதிபதி பார்க்கும் ஒரு சூழ்நிலை இப்போது நமக்கு உள்ளது, அதேவேளையில் அதை வழங்கும் அமைச்சகமோ அது ஒரு ஆடம்பரப் பயண ஆவணம் மட்டுமே என்று நிராகரிக்கிறது.

**மனித பாதிப்பு:**

சிக்கித் தவித்த அக்னிவீரரின் வழக்கு சட்டக் கோட்பாடுகள், புள்ளிவிவரத் தரவுகள் மற்றும் அரசியலமைப்பு விவாதங்கள் பெரும்பாலும் தனிப்பட்ட குடிமக்கள் எதிர்கொள்ளும், வாழ்க்கையை மாற்றியமைக்கும் பயத்தை மறைத்துவிடுகின்றன. இந்த அமைப்புரீதியான முரண்பாட்டால் ஏற்படும் பேரழிவுகரமான நிஜ உலகத் தாக்கத்தைப் புரிந்துகொள்ள நீங்கள் விரும்பினால், கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் நடந்த ஆகாஷ் சர்க்காரின் வழக்கை மட்டும் பார்த்தால் போதும்.

ஆகாஷ் சர்க்கார், மேற்கு வங்கத்தின் கூச் பெஹாரில் உள்ள ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைஞர். 2025ஆம் ஆண்டில், தேசத்திற்குச் சேவை செய்து, தன் குடும்பத்தின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் ஆவலால் உந்தப்பட்டு, இந்திய ராணுவத்திற்கான கடுமையான ஆள்சேர்ப்பு முகாமில் அவர் பங்கேற்றார். அவர் எழுத்துத் தேர்வு, உடல் தகுதி ஓட்டம் மற்றும் கடுமையான மருத்துவப் பரிசோதனைகள் என ஒவ்வொரு தடையையும் தாண்டி, ஒரு அக்னிவீரராக (பொதுப் பணி) நியமிக்கப்படுவதற்காக வெற்றிகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவரது நியமனத்தை இறுதி செய்ய, ராணுவத்திற்கு முந்தைய ஆறு மாதங்களுக்குள் செல்லுபடியாகும் வகையிலான காவல் துறை நன்னடத்தை சான்றிதழ் தேவைப்பட்டது. இது அவருக்குக் குற்றப் பின்னணி ஏதுமில்லை என்பதைச் சான்றளிக்கும். களங்கமற்ற பின்னணியைக் கொண்டிருந்த ஆகாஷ், 2025 நவம்பர் 15 அன்று எந்தச் சிக்கலுமின்றி எளிதாக ஒரு சுத்தமான காவல் துறை நன்னடத்தை சான்றிதழ்-ஐப் பெற்றார். அதன் பிறகு, அல்காரிதம்கள் அவரை வேட்டையாட வந்தன. 2026-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், தேர்தல் ஆணையத்தின் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் இயந்திரம் கூச் பெஹாரை ஆக்கிரமித்தது. தெளிவற்ற 'தர்க்கரீதியான முரண்பாடு' என்ற பிரிவின் கீழ், ஆகாஷ் மற்றும் அவரது தந்தை ஃபரூக் சர்க்கார் ஆகிய இருவரின் பெயர்களும் வாக்காளர் பட்டியலிலிருந்து ஈவிரக்கமின்றி நீக்கப்பட்டன. முக்கியமாக, இந்த நீக்கம் அவர்களின் குடியுரிமையையோ அல்லது அவர்களின் நன்னடத்தையையோ தொடும் எந்தவொரு கண்டுபிடிப்பின் அடிப்படையிலும் அமையவில்லை. அது ஒரு தரவுப் பொருத்தமின்மை மட்டுமே.

ஆகாஷின் ஆரம்பகால காவல்துறை நன்னடத்தை சான்றின் காலாவதி முடிந்து, ராணுவத்தில் இணைவதற்காக 2026 ஜூன் 3 அன்று புதிய சான்றிதழுக்கு அவர் விண்ணப்பித்தபோது, உள்ளூர் காவல்துறை அதனை நிறுத்தி வைத்தது. அதற்காக அவர்கள் கூறிய காரணம் பேரழிவை ஏற்படுத்தும் அளவுக்கு எளிமையானது - அவரது பெயர் இப்போது வாக்காளர் பட்டியலில் இல்லை.

இந்த அமைப்புரீதியான நடவடிக்கையின் அப்பட்டமான அபத்தத்தைக் கவனியுங்கள்: தகுதித் தேர்வில் வெற்றி (ராணுவம்) □ சிறப்பு தீவிர திருத்த நீக்கம் (தரவுப் பிழை) □ காவல் துறை நன்னடத்தை சான்றிதழ் நிறுத்தி வைப்பு (காவல் துறை) □ தொழில் வாழ்க்கையில் முட்டுக்கட்டை.

தனது தகுதியை நிரூபித்த ஒரு இளைஞருக்கு, குடியரசுக்காக ரத்தம் சிந்தத் தயாராக இருந்த முழுத் தகுதி பெற்ற ஒரு இளைஞருக்கு, சீருடை மறுக்கப்படும் நிலை ஏற்பட்டது. வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்படுவது தேசிய உரிமையைத் தீர்மானிப்பதாகாது என்ற மாற்றுத் தகராறு தீர்வு -எதிர்- இந்திய தேர்தல் ஆணையம் வழக்கின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை முற்றிலுமாக மீறி, ஒரு நிர்வாகத் தரவு-சுத்திகரிப்பு உள்ளூர் காவல் துறையினரால் ஒரு போலி குடியுரிமைப் பரிசோதனையாகக் கருதப்பட்டது.

ஆகாஷுக்கு வேறு வழியின்றி ஜல்பைகுரியில் உள்ள கொல்கத்தா உயர் நீதிமன்றத்தின் கிளை நீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஜூன் 17 அன்று நீதிபதி பிபாஸ் பட்டநாயக் இந்த வழக்கை விசாரித்தார். மாற்றுத் தகராறு தீர்வு மற்றும் மோஸ்தாரி பானு வழக்குகளில் நிலைநிறுத்தப்பட்ட சட்டபூர்வமான நிலைப்பாடுகளை ஆகாஷின் தரப்பு வழக்கறிஞர் சரியாக வாதிட்டார். முக்கியமாக, விசாரணையின் போது, மாநில அரசு சார்பாக ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஒரு அதிர்ச்சியூட்டும் வாதத்தை முன்வைத்தார் - சிறப்பு தீவிர சீர்திருத்த மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் அந்தக் குடும்பத்தின் மேல்முறையீட்டை விசாரித்து முடிவெடுக்கும் வரை, காவல் துறை முடங்கிய நிலையில் இருக்கும் என்றும், காவல்துறை நன்னடத்தை சான்றிதழை வழங்க முடியாது என்றும் தெரிவித்தார். நடைமுறைகளுக்குக் கட்டுப்பட்ட உயர் நீதிமன்றத்தால், கூச் பெஹார் சிறப்பு தீவிர சீர்திருத்த மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை இந்த வழக்கை விரைவாக விசாரிக்குமாறு கேட்டுக்கொள்ள மட்டுமே முடிந்தது.

உச்ச நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்ட கடுமையான காலக்கெடுவின் கீழ் செயல்படும் தீர்ப்பாயம், ஜுன் 25 அன்று அவர்களின் பெயர்களை மீண்டும் சேர்த்த பிறகே, காவல் துறை இறுதியாக ஆகாஷுக்கு நன்னடத்தை சான்றிதழை வழங்கியது. அதன்பிறகு அவர் இந்திய ராணுவத்தில் இணைந்துவிட்டார், ஆனால் அவர் சந்தித்த அமைப்புரீதியான வன்முறைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை.

**நவீன குடியுரிமையின் விசித்திரமான மற்றும் அச்சுறுத்தும் யதார்த்தம்:**

ஆகாஷ் சர்க்காருக்கு இந்த விவகாரம் நல்லபடியாக முடிந்தது. ஆனால் இது 1.4 பில்லியன் இந்தியர்களைப் பாதிக்கும் மிகவும் சிக்கலான, தீர்க்கப்படாத ஒரு சட்ட முன்மாதிரியை விட்டுச் செல்கிறது.

சிறப்பு தீவிர சீர்திருத்தத்தினால் பட்டியலிலிருந்து நீக்கப்படுவது உங்களின் குடியுரிமையைப் பறிக்காது என்று இந்திய உச்ச நீதிமன்றம் வெளிப்படையாகத் தீர்ப்பளித்திருக்கும் நிலையில், உள்ளூர் காவல் துறைகள், பாஸ்போர்ட் அலுவலகங்கள் மற்றும் மாநில நலவாரியங்கள் ஏன் சிறப்பு தீவிர சீர்திருத்தத்திலிருந்து பெயர் விடுபடுவதை குடிமக்கள் வாழ்விலிருந்து முழுமையாகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாகக் கருதுகின்றன?

நாம் ஒரு ஆபத்தான முரண்பாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உங்களுடைய ஆதார், உங்களுடைய பான் அட்டை, உங்களுடைய வாக்காளர் அடையாள அட்டை மற்றும் உங்களுடைய கடவுச்சீட்டு கூட நீங்கள் ஒரு இந்தியர் என்பதை உறுதியாக நிரூபிக்க முடியாது என்று நிர்வாகத் துறை கூறுகிறது. அப்படியிருந்தும், ஒரு சாதாரண எழுத்துப் பிழையின் காரணமாக இந்த உறுதியற்ற பட்டியல்களில் ஏதேனும் ஒன்றிலிருந்து நீங்கள் நீக்கப்பட்டால், அரசு இயந்திரம் உங்களை உடனடியாக ஒரு வெளிநபராவே நடத்துகிறது. உங்களுக்குக் காவல் துறை நன்னடத்தை சான்றிதழ்கள் மறுக்கப்படுகின்றன, அரசு வேலைகளில் இருந்து நீங்கள் தடுக்கப்படுகிறீர்கள், மேலும் நீங்கள் பிறந்த மண்ணிற்குத்தான் சொந்தமானவர் என்பதை நிரூபிக்கத் தீர்ப்பாயங்களின் சிக்கலான வலைப்பின்னலுக்குள் நீங்கள் தள்ளப்படுகிறீர்கள்.

நன்கு கட்டமைக்கப்பட்ட ஜனநாயக நாடுகளில், ஒரு குடிமகன் சட்டவிரோதமாகக் குடியேறிய வெளிநாட்டவர் என்பதை நிரூபிக்கும் சுமை முழுமையாக அரசின் மீதே உள்ளது. ஆனால் இந்தியாவில், அரசு இந்த முறையைத் தலைகீழாக மாற்றிவிட்டது. நிரூபிக்க வேண்டிய சுமை இப்போது முழுமையாகக் குடிமக்கள் மீதே உள்ளது; சட்டப்பூர்வமாக உறுதியானவை அல்ல என்று அரசாங்கமே ஒப்புக்கொள்ளும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தரவுத்தளங்களின் சிக்கலான பாதைகளை அவர்கள் கடந்து செல்ல வேண்டும்.

அரசால் வழங்கப்படும் இறையாண்மை கொண்ட ஆவணங்களால் ஒரு குடிமகனை நிறுவன ரீதியான அழிப்பிலிருந்து பாதுகாக்க முடியாவிட்டால், இந்தியாவில் குடியுரிமை என்பது இனி ஒரு உத்தரவாதமளிக்கப்பட்ட அரசியலமைப்பு உரிமையாக இருக்காது. அது ஒரு நிர்வாகச் சந்தாவாகக் குறைக்கப்பட்டுவிட்டது – விளக்க முடியாத ஒற்றை அல்காரிதம் பிழையால் ரத்து செய்யப்படக்கூடிய ஒரு சந்தாவாக மாறி விட்டது.

‘உறுதியான ஆதாரம்’ என்பதற்கு என்ன அர்த்தம் என்பதை வரையறுக்கும் ஒற்றை, எளிதில் அணுகக்கூடிய மற்றும் மோசடி செய்ய முடியாத ஒரு தரநிலையை இந்திய நாடாளுமன்றமோ அல்லது உச்ச நீதிமன்றமோ வரையறுக்கும் வரை, இந்தியக் குடிமகன் தனது சொந்த நாட்டின் காத்திருப்பு அறையிலேயே நிரந்தரமாகச் சிக்கித் தவிப்பான்.

**(நன்றி: பார் அண்ட் பெஞ்ச் இணையதளம். கட்டுரையாளர் டெல்லி பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டம் பெற்று, உச்ச நீதிமன்றம் மற்றும் இதர சட்டம் சார்ந்த செய்தி சேகரிப்பாளராக பணியாற்றுகிறார்).**

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# 1996ஆம் ஆண்டு மெட்ராஸ் மாநகர் (பெயர் மாற்றம்) சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 28/1996)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

## The City or Madras (Alteration of Name) Act, 1996
## (Tamil Nadu Act No.28 of 1996)
## (as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 1996ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

**மெட்ராஸ் மாநகரத்தின் பெயரை மாற்றம் செய்தலுக்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் நாற்பத்தி ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்டச் சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:** (1) இந்தச் சட்டம் 1996ஆம் ஆண்டு மெட்ராஸ் மாநகர் (பெயர் மாற்றம்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது மாநில அரசு அறிவிக்கையின் மூலம் குறிக்கக் கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி ''சட்டம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமோ அல்லது தமிழ்நாடு மாநிலத்தின் எந்தப் பகுதியைப் பொறுத்து மாநிலச் சட்டமன்றம் சட்டம் இயற்றத் தகுதி உடையதாக இருக்கின்றதோ, அந்தப் பகுதி எதிலுமோ சட்டத்தின் ஆற்றல் பெற்றிருக்கின்ற செய்சட்டம், அவசரச் சட்டம், ஒழுங்குவிதி, ஆணை, துணை விதி, விதி, செயல்திட்டம், அறிவிக்கை அல்லது பிற முறையாவணம் எதனையும் உள்ளடக்கும்.

**3. 'மெட்ராஸ்' மாநகரத்தில் பெயரை மாற்றுதல் :** பிரிவு 1இன் உட்பிரிவு (2)இன்படி குறிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும், இந்த மாநிலத்தில் நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் வருகின்ற மெட்ராஸ் எனும் சொல்லுக்குப் பதிலாக, சென்னை என்னும் சொல் அமைக்கப்படுதல் வேண்டும்.

**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து**
**சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம்.**
**சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி**
**தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!**

# 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையச் சட்டம்
# (தமிழ்நாடு சட்ட எண் 21/2010)
(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

## The Tamil Nadu StateMinorities Commission Act, 2010
## (Tamil Nadu Act No.21 of 2010)
## (as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2010ஆம் ஆண்டு மேத் திங்கள் 26ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

**சிறுபான்மையினருக்காக மாநில ஆணையம் ஒன்றை அமைத்துருவாக்குவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதன் விளைவான விவரங்களுக்கு வகை செய்வதற்கு மான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்டச் சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:** (1) இந்தச் சட்டம் 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கையின் மூலம், குறிக்கக் கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி

(a) “ஆணையம்” என்பது, பிரிவு 3இன்படி அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையம் எனப் பொருள்படும்.

(b) “அரசு” என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்

(c) “உறுப்பினர்” என்பது ஆணையத்தின் ஓர் உறுப்பினர் எனப் பொருள்படுவதோடு, தலைவரையும் உறுப்பினர் செயலாளரையும் உள்ளடக்கும்.

(d) “சிறுபான்மையினர்” என்பது. சிறுபான்மையினர் என அரசு அங்கீகாரம் வழங்கியுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் வசித்து வரும் சிறுபான்மை சமுதாயங்களைச் சார்ந்த நபர்கள் எனப் பொருள்படும்.

(e) “வகுத்துரைக்கப்பட்டது” என்பது, விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்.

### அத்தியாயம் II
### தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையம்

**3. ஆணையத்தை அமைத்துருவாக்குதல்:** (1) அரசு, அறிவிக்கை வாயிலாக, தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையம் என்று அழைக்கப்படும் ஓர் அமைப்பை, இந்தச் சட்டத்தின்படி, அதற்கு

வழங்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துவதற்கும் அதற்குக் குறிப்பிடப்பட்ட அலுவலற்பணிகளை ஆற்றுவதற்கும் அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) ஆணையமானது, பின் வருபவர்களை கொண்டிருக்கும்.

(a) சிறப்பான, திறமையான மற்றும் நேர்மையான நபர்களுக்கு இடையேயிருந்து, அரசால் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டிய [ஒரு தலைவர் மற்றும் பிற ஒன்பது உறுப்பினர்கள்]:

வரம்புரை தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள், சிறுபான்மையினர் சமுதாயங்களைச் சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் மற்றும்

(b) சிறுபான்மையினர் நல ஆணையர் உறுப்பினர் செயலாளர்.

(3) ஆணையத்தின் தலைமையிடம் சென்னையில் இருத்தல் வேண்டும் மற்றும் மாநிலத்தில் வேறு இடம் எதிலும் ஆணையத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலகங்களை அரசு நிறுவலாம்.

**4. தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலமும் பணி நிபந்தனைகளும்:** (1) அரசால் இதன் பொருட்டு குறிப்பிடப்படும் மூன்று ஆண்டிற்கு மிகாத கால அளவிற்கு ஆணையத்தின் தலைவரும், உறுப்பினர் ஒவ்வொருவரும் பதவி வகித்தல் வேண்டும்.

(2) தலைவரோ, உறுப்பினர் ஒருவரோ, அரசுக்கு, எச்சமயத்திலும், எழுத்து மூலம் தெரிவித்து தலைவர் அல்லது நிகழ்வுக்கேற்ப உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம். ஆனால், அவரது பதவி விலகலானது ஏற்றுக் கொள்ளப்படும் வரையில் அவர் பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கத்தக்க மதிப்பூதியமும் படித்தொகைகளும் மற்றும் பணி வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்தபோதிலும், நபர் ஒருவர்

(a) தீர்க்கப்படாத நொடிப்பு நிலையராகி இருந்தால்;

(b) அரசின் கருத்தில் ஒழுக்கக் கேட்டினை உள்ளடக்கிய குற்றச்செயல் ஒன்றிற்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளவராக இருந்தால்;

(c) மனச்சீர்கேடுற்றவராகி, ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் அவ்வாறு விளம்பப்பட்டு இருந்தால்,

(d) செயல்பட மறுத்தால் அல்லது செயல்படத் திறனற்று இருந்தால்;

(e) ஆணையத்தின் அனுமதி இல்லாமல், தொடர்ந்தாற்போல் ஆணையத்தின் மூன்று கூட்டங்களுக்கு வராமல் இருந்தால்,

f) அரசின் கருத்தில், தம் தலைவர் அல்லது நிகழ்விற்கேற்ப, உறுப்பினர் பதவி நிலையை, அந்த நபர் பதவியில் தொடர்ந்திருப்பது பொதுமக்களின் நலனுக்குக் கேடு விளைவிக்கும் என்ற வகையில் தவறாகப் பயன்படுத்தி இருந்தால்,

அரசானது அவரைத் தலைவர் அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல் வேண்டும்.

வரம்புரை இந்த உட்பிரிவின்படி, அந்த விவரத்தில் உறுப்பினர் எவருக்கும் அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்படும் வரையில் அந்த உறுப்பினரைப்

பதவியிலிருந்து நீக்குதல் கூடாது.

(5) உட்பிரிவு (2)இன்படியோ அல்லது உட்பிரிவு (4)இன்படியோ அல்லது பிறவாறாகவோ, ஏற்பட்ட காலியிடம் ஒன்று. அரசினால் புதிதாக பெயர் குறித்து நியமிப்பதன் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் எவருடைய காலியிடத்தில் அவர் அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்டாரோ, காலியிடம் ஏற்படாது இருந்தால், அந்த நபர் வகித்திருக்கக் கூடிய எஞ்சிய கால அளவிற்கு அவர் பதவி வகித்தல் வேண்டும்.

**வரம்புரை** : அந்த தலைவர் நீங்கலாகப் பிற உறுப்பினர் ஒருவரின் காலியிடம், அந்த உறுப்பினரின் பதவிக்காலம் எந்தத் தேதியில் முடிவடைகின்றதோ, அந்தத் தேதிக்க அடுத்து முந்திய ஆறு மாதங்களுக்குள் ஏற்படுமானால், அத்தகைய காலியிடம் எதுவும் நிரப்பப்படுதல் கூடாது.

**விளக்கம்**: இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, உறுப்பினர் என்பது. உறுப்பினர்–செயலாளரை உள்ளடக்காது.

**10. ஆணையத்தால் நடைமுறைகள் ஒழுங்குமுறைப்படுத்தப்படுதல்** : (1) ஆணையானது, தேவைப்படும் போதெல்லாம் குறைந்தது மாதம் ஒரு முறையாவது கூடுதல் வேண்டும் மற்றும் தலைவர் பொருத்தமெனக் கருதக் கூடிய அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும்.

(2) ஆணையம், அதன் சொந்த நடைமுறையை ஒழுங்குப்படுத்துதல் வேண்டும்.

(3) ஆணையத்தின் அனைத்து ஆணைகளும் முடிவுகளும் அதன் உறுப்பினர்–செயலாளரால் அல்லது இதன் பொருட்டு உறுப்பினர்–செயலாளரால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவராலும் அதிகாரபூர்வமானதாக்கப்படுதல் வேண்டும்.

**6. காலியிடங்கள் முதலானவை ஆணையத்தின் நடவடிக்கைகளைச் செல்லத்தகாததாக ஆக்குதல் கூடாது** : ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் பொருளின் தகுதியைப் பாதிக்காத நிலையில் ஆணையத்தில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது அதன் அமைத்துருவாக்கத்தில் குறைபாடு எதுவும் இருக்கிறது அல்லது தலைவரால் அல்லது ஓர் உறுப்பினராகச் செயல்படுகின்ற நபர் ஒருவரைப் பெயர் குறித்து நியமித்ததில் குறைபாடு எதுவும் இருக்கிறது அல்லது ஒரு கூட்டத்தை நடத்துவதற்காகப் பிறப்பிக்கப்படும் அறிவிப்பு உள்ளிட்ட ஆணையத்தின் நடைமுறையில் முறைகேடு எதுவும் உள்ளது என்ற காரணத்தினால் மட்டுமே, ஆட்சேபிக்கப்படுதலோ அல்லது செல்லத்தகாதது ஆகுதலோ கூடாது.

**7. ஆணையத்தின் அலுவலர்களும் பிற பணியாளர்களும்** : (1) அரசு, இந்தச் சட்டத்தின்படி ஆணையத்தின் அலுவற்பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு ஆணையத்திற்குத் தேவைப்படக் கூடிய அத்தகைய அலுவலர்களையும் பணியாளர்களையும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(2) ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பிற பணி வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட அலுவலர்களும் பணியாளர்களும் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருதல் வேண்டும்.

### அத்தியாயம் III

### ஆணையத்தின் அலுவற்பணிகள்

**8. ஆணையத்தின் அலுவற்பணிகள்:** (1) 1992ஆம் ஆண்டு சிறுபான்மையினருக்கான தேசிய ஆஜணயச் சட்டத்தின் (மையச் சட்டம் 19/1992) பிரிவு 9இன்படி சிறுபான்மையினருக்கான தேசிய

ஆணையத்தின் அலுவற்பணிகளின் செயல்பாட்டிற்கு உட்பட்டு, ஆணையத்தின் அலுவற்பணிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

(a) சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காக அரசமைப்பிலும், மாநிலச் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டங்களிலும் வகை செய்யப்பட்டுள்ள பல்வேறு பாதுகாப்பு வழிமுறைகள் செயல்படுவதை ஆராய்தல்.

(b) அனைத்து பாதுகாப்பு வழிமுறைகளும் திறம்பட செயல்படுத்தப்படுவதையும் நிறைவேற்றப்படுவதையும் உறுதி செய்யும்பொருட்டு பரிந்துரைகள் செய்தல்.

(c) சிறுபான்மையினருக்காக அரசமைப்பிலும், மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களிலும் மற்றும் அரசின் கொள்கைகளிலும் மற்றும் திட்டங்களிலும் வகை செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வழிமுறைகள் செயல்படுவதை கண்காணித்தல்.

(d) சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகளைத் தவிர்ப்பது குறித்த பிரச்சினைகள் மீது ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் பகுப்பாய்வுகள் நடத்துதல்

(e) அரசு நிறுவனங்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த அமைப்புகள் ஆகியவற்றின் பணிகளில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தின் மதிப்பீட்டினைச் செய்தல் மற்றும் பிரதிநிதித்துவம் போதுமானதாகயில்லாத நிகழ்வில், விரும்பிய நிலையினை அடைவதற்கான வழிவகைகள் குறித்து கருத்துரை வழங்குதல்.

(f) மாநிலத்தில் சமுதாய நல்லிணக்கத்தை பேணி வருவதையும் மேம்படுத்துவதையும் உறுதி செய்வதற்கானப் பரிந்துரைகளைச் செய்தல்.

(g) வகுத்துரைக்கப்பட்ட கால இடைவெளிகளில் கால முறை அறிக்கைகளை அரசுக்கு அனுப்புதல்

(h) சிறுபான்மையினரின் நலன் மற்றும் மேம்பாடு குறித்து ஆணையம் முக்கியமானது எனக் கருதும் பிற விவரம் எதனையும் ஆராய்ந்து உரிய பரிந்துரையைச் செய்தல்.

(i) சிறுபான்மையினரின் குறைகளைப் பரிசீலனை செய்து, அவ்வப்போது உரிய தீர்வுகள் குறித்து கருத்துரை வழங்குதல்.

(j) சிறுபான்மையினரின் உரிமைகளும் பாதுகாப்புகளும் பறிக்கப்படுவது குறித்த முறையீடுகளை கவனித்து, அத்தகைய விவரத்தினை உரிய அதிகார அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல் மற்றும்

(k) அரசினால் அதனிடம் குறிப்பிட்டு அனுப்பப்படும் பிற விவரங்கள் எவையும்.

(2) ஆணையம், இந்தப் பணிகளில் எதனையும் ஆற்றுகையில், 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படி (மையச் சட்டம் ()) உரிமை வழக்கை விசாரணை செய்கின்ற ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும், குறிப்பாகப் பின்வரும் விவரங்களைப் பொறுத்த அதிகாரங்களையும் கொண்டிருக்கும். அதாவது

(a) நபர் எவருக்கும் அழைப்பாணை விடுத்து, அவரின் வருகையை வலியுறுத்தி, உறுதிமொழியின்பேரில் அவரை விசாரித்தல்

(b) ஆவணம் எதையும் கண்டறிந்து தாக்கல் செய்யக் கோருதல்.

(c) ஆணையுறுதி ஆவணங்களின்பேரில் சான்று பெறுதல்

(c) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொதுப் பதிவுரு அல்லது அதன் நகல் எதனையும் கோரிப் பெறுதல்.

சாட்சிகளை விசாரிப்பதற்கும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்கும் ஆணையங்களை ஏற்படுத்துதல் மற்றும்

(க) வகுத்துரைக்கப்படும் பிற விவரம் எதுவும்.

(3) அரசு, ஆணையத்தின் பரிந்துரைகளை அப்பரிந்துரைகளின்பேரில் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதப்படும் நடவடிக்கை குறித்தும் அத்தகைய பரிந்துரைகளில் எவையேனும் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருப்பின், அவற்றிற்கான காரணங்கள் குறித்தும் விளக்குகின்ற குறிப்புடன் சேர்த்து சட்டமன்றப் பேரவை முன்பு வைப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

**அத்தியாயம் IV**

**நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை**

**9. அரசு வழங்கும் மானியங்கள்**: (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்வதற்கு, அரச பொருத்தமெனக் கருதும் பணத் தொகையை, மானியங்கள் என்ற வகையில் ஆணையத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணையம், இந்தச் சட்டத்தின்படியான அலுவற் பணிகளை நிறைவேற்றுவதற்காக, அது பொருத்தமெனக் கருதும் தொகைகளைச் செலவு செய்யலாம்.

(3) தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படத்தக்க மதிப்பூதியமும் படித்தொகைகளும், பிரிவு 7இல் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்–செயலாளர், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்கள், படித்தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள் உள்ளிட்ட நிருவாகச் செலவினங்கள், உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட மானியங்களிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

**10. ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை**: (1)ஆணையத்தின் கணக்குகள், வகுத்துரைக்கப்படும் முறையிலும் படிவத்திலும் பேணி வரப்படுதல் வேண்டும். ஆணையமானது, வகுத்துரைக்கப்படும் படிவத்தில் ஆண்டுக் கணக்கு விவர அறிக்கை ஒன்றை தயாரித்தல் வேண்டும்.

(2) அரசு, இதன் பொருட்டு நியமக்கக் கூடிய அத்தகைய தணிக்கையாளரால் ஆணையத்தின் கணக்குகள் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) தணிக்கை நோக்கங்களுக்காக, உட்பிரிவு (2)இன்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர், வகுத்துரைக்கப்படும் உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகார உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) உறுப்பினர் செயலாளர், தணிக்கை அறிக்கையை அச்சிடுவதற்கும் அதன் அச்சுப்படியை அதன் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைப்பதற்கும், அத்தகைய அறிக்கையை ஆணையத்தின் அடுத்தக் கூட்டத்தில் பரிசீலனைக்காக, ஆணையத்தின் முன் வைப்பதற்கும் ஆவன செய்தல் வேண்டும்.

(5) ஆணையம், தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்படக் கூடிய குறைபாடு அல்லது முறைகேடு எதனையும் களைவதற்கு உரிய நடவடிக்கையை உடனே எடுத்தல் வேண்டும்.

(6) தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட ஆணையத்தின் கணக்குகள், தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆணையம் அதன் மீது வழங்கும் குறிப்புகளுடன், வகுத்துரைக்கப்படும் காலத்திற்குள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(7) தணிக்கை அறிக்கையில் குறைபாடுகள் எவையேனும் தெரிவிக்கப்பட்டிருக்குமேயானால், எழுத்து குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள், அந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு அந்த ஆணையில் குறிப்பிடப்படும் நடவடிக்கையை எடுக்குமாறு அரசு, ஆணையத்தைப் பணிக்காலம் மற்றும் ஆணையம் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

**11. ஆண்டறிக்கை**: ஆணையம், முந்தைய நிதியாண்டின் போதான அதன் நடவடிக்கைகளின் முழு விவரத்தையும் அளித்து, அதன் ஒவ்வொரு நிதியாண்டிற்குமான ஆண்டறிக்கையை வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் நேரத்திலும் தயாரித்து, அதன் நகல் ஒன்றை அரசுக்கு மேல் அனுப்புதல் வேண்டும்.

**12. ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும்** : (1) ஆண்டறிக்கையில் அடங்கிய அரசுக்கு தொடர்பான பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்பு மற்றும் தணிக்கை அறிக்கையுடன் இணைத்த ஆண்டறிக்கை ஆகியவற்றை அந்த அறிக்கைகள் பெறப்பட்டவுடன் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவை முன்பு வைப்பதற்கு அரசு ஆவனச் செய்தல் வேண்டும்.

(2) அத்தகைய பணத் தொகை செலுத்தப்பட்டதன்பேரில் அத்தகைய நபர் விடுவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய குற்றத்தைப் பொறுத்து அவருக்கெதிராக மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படக் கூடாது.

**அத்தியாயம் V**

**பல்வகை**

**13. ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் பொது ஊழியர்கள் ஆவர்** : இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனின்படி அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது பணிப்புரை எதனின்படி செயல்படுகின்ற அல்லது செயல்படுவதாகப் புலப்படுகின்றபோது, ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள், இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பின் (மையச் சட்டம் XLV/1860 பிரிவு 21இன் பொருளின்படி, பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**14. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு** : இந்தச் சட்டத்தின்படி அல்லது இதன்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, ஆணை அல்லது பணிப்புரையின்படி, நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், ஆணையத்தின் உறுப்பினர் எவருக்கும் அல்லது அதன் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவருக்கும் அல்லது அதன் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவருக்கும் எதிராக அல்லது அரசின் அல்லது ஆணையத்தின் பணிப்புரையின்படிச் செயல்படுகின்ற நபர் எவருக்கும் எதிராக, உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

**15. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்** : இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில், அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவை என்றோ உகந்தவை என்றோ அதற்கு தோன்றுகின்ற வகைமுறைகளைச் செய்யலாம்.

வரம்புரை ஆனால், அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுக் கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**16. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்** : (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் முன்சென்ற அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு ஊறின்றியும் அத்தகைய விதிகள், பின்வரும் விவரங்கள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் முன்சென்ற அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு ஊறின்றியும் அத்தகைய விதிகள், பின்வரும் விவரங்கள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றிற்குமோ வகை செய்யலாம். அதாவது

(a) தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படத்தக்க மதிப்பூதியம் மற்றும் படித்தொகைகள் மற்றும் பிரிவு 4இன் உட்பிரிவு (3)இன்படி தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி பற்றிய வரையறைகளும், நிபந்தனைகளும் மற்றும் பிரிவு 7இன் உட்பிரிவு (2)இன்படி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்களும் நிபந்தனைகளும்.

(b) பிரிவு 10இன் உட்பிரிவு (1)இன்படி கணக்குகள் எந்தப் படிவத்திலும் முறையிலும் மற்றும் ஆண்டுக் கணக்குகளின் விவர அறிக்கை எந்த படிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்.

(c) பிரிவு 11இன்படி ஆண்டறிக்கை எந்தப் படிவத்தில் மற்றும் எந்த நேரத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்.

(d) இந்தச் சட்டத்தின்படி கோரப்படக் கூடிய அல்லது வகுத்துரைக்கப்படக் கூடிய பிற விவரம் எதுவும்.

(3) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதிகள் அனைத்தும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் குறிப்பிட்ட ஒரு நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அதை அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவை செய்யுமானால் அல்லது அந்த விதியோ, அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படுதலோ பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அதன் பின்பு அந்த விதியோ அறிவிக்கையோ அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட படிவத்தில் மட்டுமே செயல்வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப செயல் வடிவம் பெறாது போதல் வேண்டும் எனினும் அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற் செயல் வடிவம் பெறாது போதல் வேண்டும். எனினும் அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது செயல்வடிவம் பெறாது போகச் செய்வது எதுவும், அந்த விதியின்படியோ அறிவிக்கையின்படியோ அல்லது ஆணையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

# 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின் கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 40/2010)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu StateAppointment on preferential basis in the Services under the State of Persons Studied in Tamil Medium Act, 2010 (Tamil Nadu Act No.40 of 2010) (as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2010ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

**அரசின் கீழ் வரும் பணிகளுக்கான நியமனங்களில் நேரடி ஆட்சேர்ப்புக்காக வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியைத் தமிழ் வழிக்கல்வி மூலமாகப் பெற்றிருக்கிற நபர்களுக்கு முன்னுரிமை வழங்க வகை செய்வதற்கான ஒரு சட்டம்.**

அரசமைப்பின் 345ஆம் அமைப்பு விதியின்படி, மாநிலச் சட்டமன்றத்திற்கு அம்மாநிலத்தில் பயன்பாட்டில் உள்ள மொழிகளுள் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை அந்த மாநிலத்தின் அரசு அலுவல் நோக்கங்களுக்காக ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாலும்;

தமிழ்நாடு மாநிலமானது, 1956ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் XXXIX/1956) இயற்றி, அரசமைப்பின் 345ஆம் அமைப்பு விதியின்படி இம்மாநிலத்தின் அரசு ஆட்சிமொழியாகத் தமிழ்மொழியை ஏற்றுக் கொண்டிருப்பதாலும்.

1963ஆம் ஆண்டு ஆட்சிமொழிகள் சட்டமானது (மையச் சட்டம் 19/1963) ஒன்றியத்தின் அனைத்து அரசு அலுவல் நோக்கங்களுக்காகவும் நாடாளுமன்றத்தின் அலுவல் நடவடிக்கைகளை நடத்துவதற்காகவும் ஆங்கில மொழியானது தொடர்ந்து இருப்பதற்கு வகை செய்வதாலும்;

மையச் சட்டம் 19/1963இன் பிரிவு 3(1)(ஏ)இன் முதலாம் வரம்புரையானது ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றத்திற்கு ஆங்கிலமொழி பயன்படுத்தப்படுதல் வேண்டும் என வகை செய்கிறது என்பதாலும்;

அரசமைப்பின் XVII எனும் பகுதியின் 111ஆம் அத்தியாயத்தில் உள்ள அரசமைப்பின் 348ஆம் அமைப்பு விதியானது, அந்தப் பகுதியின் வகைமுறைகள் எவ்வாறு இருந்தபோதிலும், நாடாளுமன்றம் சட்டத்தினால் பிறவாறு வகைசெய்யும் வரையில், உச்சநீதிமன்றத்தின் மற்றும் ஒவ்வோர் உயர்நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும் என வகை செய்வதாலும்

தரப்பினர்களின் வாதுரைகளைத் தயாரிப்பது, சாட்சியம் எடுப்பது, முறையே தரப்பினர்களின் வழக்குரைஞர்கள் வாதம் செய்வது, தீர்ப்புரைகளை எழுதுவது உள்ளடங்கலாக, மாவட்ட நிலை வரையிலான நீதிமன்றங்களின் மொழியாகத் தமிழ்மொழியானது பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதாலும்,

தமிழ்வழிக் கல்வி மூலமாகப் படித்தவர்கள், மைய அரசின், பிற மாநில அரசுகளின் அல்லது தனியார் துறை நிறுவனங்களின் பணிக்குத் தெரிவு பெறுவதற்கு மிகமிகக் குறைந்த வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர் என்பதாலும் மாநில அரசின் பணிகளில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது தேவையாகிறது என்பதாலும்,

அரசமைப்பின் 14ஆம் அமைப்புவிதியின்படி, வெறும் வேறுபடுத்துதல் அல்லது சமமின்றி நடத்துதல் என்பது, சமத்துவத்தைப் பாதுகாக்கும் விதியின் தடை செய்யும் எல்லைக்குள்ளான வேறுபாடு என்பதாகாது என்பதாலும், இந்தப் பிரிவின் செயற்பாட்டினை ஈர்ப்பதற்குத் தெரிவு அல்லது வேறுபாடானது நியாயமற்றது அல்லது தன்னிச்சையானது என்பதாகவும் சட்டமன்றம் கருதியுள்ள நோக்கத்தைக் கருத்திற்கொண்டால் பகுத்தறிவுக்கு உகந்த அடிப்படை எதன்மீதும் அது அமையவில்லை என்பதாகவும் காட்டப்படுதல் தேவையானதாகும் என்பதாலும்;

நேரடி ஆட்சேர்ப்புக்காக, வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியைத் தமிழ்வழிக் கல்வி மூலமாகப் பெற்ற நபர்களுக்கும் பிற மொழி வழியில் படித்த நபர்களுக்கும் இடையேயான வகைப்பாடானது, அடைய விரும்பும் நோக்கத்துடன் நியாயமான தொடர்பினைக் கொண்டுள்ளது என்பதாலும்;

அத்தகைய வகைப்பாடானது, அரசமைப்பின் 16ஆம் அமைப்பு விதியின் எல்லைகளை மீறவில்லை என்பதோட, அதன்படியான இம்மாநிலத்தின் இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு ஊறு விளைவிக்கவில்லை என்பதாலும்

1993ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்தவர்களுக்கும் (கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின்கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 45/1994 வகைமுறைகள் மீறப்படவில்லை என்பதாலும்;

தமிழ்வழிக்கல்வி மூலம் படித்த நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படவில்லையானால், இம்மாநில மக்கள், பள்ளியிலும் கல்லூரியிலும் தமிழ்வழிக் கல்வி மூலமாகக் கல்வி கற்பதனைத் தொடர்வதற்கு வாய்ப்பு எதுவும் இருக்காது என்பதாலும்

கல்வியின் நிலைகள் அனைத்திலும் மக்கள் தமிழ்வழிக் கல்வி மூலமாகக் கல்வி கற்றுக் கொள்வதை விரும்பி ஏற்றுக் கொள்வதற்கோர் இணக்கமான சூழ்நிலையை நிலவச் செய்வதன் பொருட்டுத் தமிழ்மொழி வழிக்கல்வி மூலமாகப் படித்த நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அரசின் கீழ் வரும் பணிகள் எவற்றுக்கும் நியமனம் வழங்குவதானது பகுத்தறிவிற்கு உகந்ததொரு வகைப்பாடு என்பதாலும்

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு

**1. குறுந்தலைப்பும் தொடக்கமும் :** (1) இந்தச் சட்டம் 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கையின் மூலம், குறிக்கக் கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி

(a) ‘‘நேரடி ஆட்சேர்ப்பு’’ என்பது, நடைமுறையில் உள்ள விதிகளுக்கு அல்லது ஒழுங்குமுறை

விதிகளுக்க அல்லது ஆணைகளுக்கு இணங்கிய வகையில் அரசின் கீழ்வரும் பணி எதற்கும் நபர் ஒருவரை முதல் நியமனம் செய்தல் எனப் பொருள்படும்.

(b) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்

(c) "பிற மொழிகளின் மூலமாகப் படித்த நபர்கள் என்பது, அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனம் எதற்கும் பொருந்தக் கூடிய விதிகளில் அல்லது ஒழுங்கு விதிகளில் அல்லது ஆணைகளில் நேரடி ஆட்சேர்ப்புக்காக வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதி அல்லது கல்வித் தகுதிகளைத் தமிழ் அல்லாத பிறமொழி எதனின் மூலமாகப் படித்த நபர்கள் எனப் பொருள்படும்.

[1](d) "தமிழ்வழியில் கல்வி பயின்ற நபர்" என்பது. அரசின் கீழ்வரும் பணிகளில் உள்ள பணி நியமனம் எவற்றிற்கும் பொருந்தக் கூடிய விதிகள் அல்லது ஒழுங்கு விதிகள் அல்லது ஆணைகளில் நேரடி தமிழ் வழியின் மூலம் கல்வி பயின்ற நபர் எனப் பொருள்படும்.

விளக்கம் : இந்தக் கூறின் நோக்கத்திற்காக,

(i) எஸ்.எஸ்.எல்.சி. ஆனது வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியாக இருக்கும்போது ஒருவர் எஸ்.எஸ்.எல்.சி. வரை தமிழ்வழிக் கல்வி மூலம் பயின்றிருத்தல் வேண்டும்

(ii) மேல்நிலைக் கல்வியானது வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியாக இருக்கும்போது ஒருவர் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைக்கல்வியைத் தமிழ்வழிக் கல்வி மூலம் பயின்றிருத்தல் வேண்டும்.

(iv) பட்டப் படிப்பானது வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியாக இருக்கும்போது ஒருவர் எஸ்.எஸ்.எல்.சி. மேல்நிலைக்கல்வி மற்றும் பட்டப்படிப்பைத் தமிழ்வழிக் கல்வி மூலம் பயின்றிருத்தல் வேண்டும்.

(v) பட்ட மேற்படிப்பானது வகுத்துரைக்கப்பட்ட கல்வித்தகுதியாக இருக்கும்போது ஒருவர் எஸ்.எஸ்.எல்.சி. மேல்நிலைக்கல்வி, பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பைத் தமிழ்வழிக் கல்வி மூலம் பயின்றிருத்தல் வேண்டும்][1]

(e) முன்னுரிமைக்கான காலியிடங்கள் என்பது, பிரிவு 3இன் உட்பிரிவு (1)இன் கீழ் தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களுக்குக் கிடைக்கக் கூடிய காலியிடங்கள் எனப் பொருள்படும்.

(f) அரசின் கீழ் வருகின்ற பணிகள் என்பது

(i) அரசின் கீழும்;

(ii) இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றத்தின் கீழும்;

(iii) உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனின் கீழும்

(iv) அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள கழகம் அல்லது நிறுமம் எதிலும் மற்றும்

(v) இம்மாநிலச் சட்டமன்றமானது சட்டங்களை இயற்றுவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிற பிற அதிகார அமைப்பு எதனின் கீழும், வருகின்ற பணிகளை உள்ளடக்கும்,

**3. நியமன முன்னுரிமை**: (1) அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும் மற்றும் பிரிவு 5இக்கு உட்பட்டு, நேரடி ஆட்சேர்ப்பின் மூலமாக நிரப்பப்பட வேண்டியதாக உள்ள, அரசின் கீழ்வரும் பணிகளுக்கான தமிழ்மொழியின் மூலமாகப் படித்த நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நூற்றுக்கு இருப்பது விழுக்காடு என்ற அளவிலான காலியிடங்கள் தனியே ஒதுக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி நியமனங்களுக்கான தெரிவானது வகுத்துரைக்கப்படும் அத்தகைய முறையில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) அரசின் கீழ்வரும் பணிகளுக்கான பதவிகளுக்கு நியமனம் செய்யும்போது அந்தப் பதவிக்குப் பொருந்தக் கூடிய விதிகளில் அல்லது ஒழுங்குமுறை விதிகளில் அல்லது ஆணைகளில் வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியானது மொழி ஒன்றில் ஒரு பட்டம் அல்லது பட்டயம் அல்லது கல்விச் சிறப்பு எதுவும் என்பதாக இருக்கிறநிலையில், உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எதுவும் பொருந்துதல் கூடாது.

**4. பிற காலியிடங்களுக்குப் போட்டியிடுவதற்கான உரிமையானது பாதிக்கப்படுதல் கூடாது:** தமிழ் மொழி மூலமாகப் படித்த நபர்கள், அரசின் கீழ்வரும் பணிகளுக்கான பிற காலியிட நியமனங்களில் பிற மொழி மூலமாகப் படித்த நபர்களுடன் முன்னுரிமைக்கான காலியிடங்கள் அல்லாத பிற காலியிடங்களுக்கும் போட்டியிடுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

**5. இட ஒதுக்கீடு பொருந்துதல்:** பிரிவு 3இன் கீழ் தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலான நியமனமானது, நடைமுறையிலுள்ள சட்டத்தின்படியான இடஒதுக்கீட்டினைப் பின்பற்றிச் செய்யப்படுதல் வேண்டும்.

**6. முன்னுரிமை ஒதுக்கீட்டில் காலியிடங்களை நிரப்புதல்:** பிரிவு 3இல் என்ன அடங்கியிருந்த போதிலும், முன்னுரிமைக் காலியிடங்களில்நியமிப்பதற்குத் தமிழ்மொழி மூலம் படித்த தகுதி வாய்ந்த மற்றும் பொருத்தமான நபர்கள் போதுமான அளவிற்கு இல்லையானால், அவ்வாறு நிரப்பப்படாத காலியிடங்கள் அவர்தம் வகைப்பாட்டிற்குள் பிறமொழிகள் மூலமாகப் படித்த நபர்களைக் கொண்டு நிரப்பப்படுதல் வேண்டும்.

**7.விலக்களிப்பதற்கான அதிகாரம்** : அரசானது, நியாயமான மற்றும் நேர்மையான காரணங்களுக்காக, பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசின் கீழ் வரும் பணிகளுக்கான நியமனம் அல்லது பதவி எதையும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளிலிருந்து விலக்களிக்கலாம்.

**8. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்** : (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அல்லது அதற்கு அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைதற்கு முன்பு அப்பேரவை அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமானால் அல்லது அப்பேரவை அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமானால் அல்லது அப்பேரவை அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமானால் அவ்விதி அல்லது அந்த அறிவிக்கை அல்லது அவ்வாணை அதற்குப் பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**9. இடர்பாட்டினை நீக்குவதற்கான அதிகாரம் :** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசானது, தமிழ்நாடு அரசிதழில் ஆணை

ஒன்றை வெளியிடுவதன் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ தனக்குத் தோன்றக் கூடிய இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகைமுறைகளைச் செய்யலாம்.

வரம்புரை ஆனால், அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டமானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**10. நீக்கமும் காப்பும்**: (1) 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2010) இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கருதப்படுதல் வேண்டும்.

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

## ஆக்கிரமிப்புகளை கண்டறிவதற்காக தமிழக நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான நிலங்களை முழுமையாக அளவீடு செய்ய வேண்டும்

**- உயர்நீதிமன்றம் உத்தரவு**

ஆக்கிரமிப்புகளை கண்டறிவதற்காக தமிழக நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான நிலங்கள் அனைத்தையும் அளவீடு செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மதுரை கீழவெளிவீதியை சேர்ந்த நவீன் முகைதீன் கபூர்ஷா, மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது.

எங்கள் பகுதியில் உள்ள நிலத்தை பல ஆண்டு களாக அனுபவித்து வருகிறேன். இந்த நிலையில் அந்த நிலம் தமிழக நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானது என்றும் வெளியேறுமாறும் மாநில நெடுஞ்சாலைத் துறையின் மதுரை தெற்கு மண்டல உதவி கோட்ட என்ஜினீயர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். இது குறித்து விளக்கம் அளிக்க எனக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. அதிகாரிகளின் நடவடிக்கைச் சட்ட விரோதமானது. எனவே அந்த நோட்டீசை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இதேபோல மதுரை சூர்யா நகரைச் சேர்ந்த அம்ச வள்ளி என்பவரும் தனியாக மனுத் தாக்கல் செய்து இருந்தார். இந்த மனுக்கள் நீதிபதிகள் தண்டபாணி, திலீப்குமார் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் சார்பில் வழக்குரைஞர்கள் சீனிவாச ராகவன், அன்பரசு ஆகியோர் ஆஜராகி, மனுதாரர் களின் அனுபவ பாத்தியத்தில் இருக்கும் நிலங்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான நிலங்களாக வகைப்படுத்தப்படவில்லை. ஆனாலும் அதிகாரிகள் தங்களின் அதிகாரத்தை பயன்படுத்தி எந்தவித விசாரணையும் நடத்தாமலும், மனுதாரர்களிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பாமலும் நேரடியாக மனுதாரர் களை அந்த நிலங்களில் இருந்து வெளியேற்றுவதற்கான நோட்டீசை அனுப்பி இருப்பது சட்ட விரோதம் என வாதாடினர். மேலும் அந்த வழக்குரைஞர்கள் வாதாடுகையில், இது போன்ற மற்றொரு வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற, நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சொத்தை யாராவது ஆக்கிரமித்து இருப்பது தெரிந்தால், அவர்களை உடனடியாக வெளியேற்றலாம். அவர்கள் அந்த இடத்தை காலி செய்வதற்கு 2 மாதம் அவகாசம் வழங்க வேண்டும் என்று இந்த உயர்நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டு உள்ளது எனவும் தெரிவித்தனர்.

பின்னர் அரசு வழக்குரைஞர்கள் மோகன் குமார், சரண்யா ஆகியோர் ஆஜராகி, இந்த விவகாரத்தில் ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில் பிறப்பித்த உத்தரவை பின்பற்றுவதில் அரசு தரப்புக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றனர். இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு. மனுதாரர் தரப்பினர் அரசு தரப்பில் தெரிவித்த தகவல்களை கருத்தில் கொண்டு வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் ஆகியோர் தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்த மான சொத்து நிலப்பரப்பு முழுவதையும் அளவீடு செய்து, இந்த சொத்துக்களை ஆக்கிரமித்த நபர்களை அடையாளம் காண வேண்டும். அவ்வாறு அளவீடு செய்யும்போது, மாநில நெடுஞ்சாலைத் துறை சொத்தை யாராவது ஆக்கிரமித்து இருப்பது கண்டறியப் பட்டால் அதிகாரிகள் சட்டப்படி அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னதாக, அந்த ஆக்கிரமிப்பாளர்கள் தாங்களாகவே இடத்தை காலி செய்வதற்கு 3 மாதம் அவகாசம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

நன்றி : **தினத்தந்தி 24.8.2026**

# சென்னை உயர்நீதிமன்றத்தில் 15 புதிய நீதிபதிகள் பதவியேற்பு

## தலைமை நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்

சென்னை உயர்நீதிமன்றத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 15 நீதிபதிகள் 9.8.2026 பதவி ஏற்றுக் கொண்டனர்.

இவர்களில் 5 பேருக்கு நிரந்தர நீதிபதிகளாகவும் 10 பேருக்கு கூடுதல் நீதிபதிகளாகவும் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.தர்மாதிகாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடங்களை நிரப்பும் வகையில் உச்சநீதிமன்ற கொலீஜியத்தின் பரிந்துரையை ஏற்ற 15 பேரை நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டார். அதன்படி, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 15 பேரை நீதிபதி களுக்கான பதவி ஏற்பு விழா உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் 9.8.2026 நடைபெற்றது.

இதில், கே.கோவிந்தராஜன், ரஜனீஷ் பத்தியால், என்.ரமேஷ், ஜி.கே.முத்துகுமார், ஆர்.ராஜேஷ் விவேகானந்தன் ஆகியோருக்கு நிரந்தர நீதிபதிகளாகவும் எஸ்.ரவிக்குமார், என்.திலீப்குமார் எ.மனோகரன், பி.முருகன், எம்.டி.சுமதி, எஸ்.அல்லி, திருமகள் சந்திரசேகர், எஸ்.கார்த்திகேயன், பி.முருகேசன், என்.குணசேகரன் ஆகியோருக்கு கூடுதல் நீதிபதிகளாகவும் தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

புதிதாகப் பதவி ஏற்ற நீதிபதிகளை வரவேற்று தமிழக அரசின் தலைமை வழக்குரைஞர் விஜய் நாராயண் பேசியதாவது, சென்னை உயர்நீதிமன்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 66ஆக உயர்ந்திருக்கிறது. மீதமுள்ள 9 காலிப் பணியிடங்களையும் விரைவில் நிரப்பி, காலிப் பணியிடங்களே இல்லாத நிலையை உருவாக்க வேண்டும்.

மேலும், தற்போது நியமிக்கப்பட்டுள்ள மூன்று பெண் நீதிபதிகளுடன் சேர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 13–ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் நாட்டிலேயே அதிக பெண் நீதிபதிகளைக் கொண்ட உயர்நீதிமன்றமாக சென்னை உயர்நீதிமன்றம் விளங்குவது பெருமைக்குரியது என்றார்.

தொடர்ந்து, கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்கத்தின் தலைவர் சி.பால் கனகராஜ், மெட்ராஸ் பார் அசோசியேஷன் தலைவர் சி.ஆர்.கமலநாதன், பெண் வழக்குரைஞர்கள் சங்கத்தின் தலைவர் ரேவதி, லா அசோசியேஷன் தலைவர் பி.செல்வராஜ் ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

இதைத் தொடர்ந்து, புதிய நீதிபதிகள் ஏற்புரை ஆற்றினர். அப்போது, அவர்கள் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் அவர்களது பெற்றோர் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு நன்றி தெரிவித்துப் பேசினர். நீதிபதிகள் கே.கோவிந்தராஜன், ரஜனீஷ் பத்தியால் ஆகியோர் திருவாசகம், மகாபாரதம், திருக்குறளை மேற்கோள் காட்டிப் பேசினர்.


நீதிபதி என்.திலீப்குமார் திருச்செந்தூர் முருகனை வணங்கி, புறநானூற்றுப் பாடலை மேற்கோள் காட்டிப் பேசினார். நீதிபதி என்.முருகன் பேசும்போது, கிராமத்தின் முதல் பட்டதாரியான தன்னை, நீதிபதி பணிக்க படிப்பதாக ஊர் முழுவதும் கூறிவந்த தனது தாயின் கள்ளம் கபடமில்லாத கூற்று உண்மையாகி விட்டதாகக் கூறினார்.

நிகழ்வில் சென்னை உயர்நீதிமன்ற, உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், மத்திய, மாநில அரசு வழக்குரைஞர்கள் சங்கத்தைக் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகள், நீதிமன்றப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**– நன்றி : தினமணி 10.8.2026**


THINK AHEAD. STAY AHEAD.
Bharath UNIVERSITY
30 YEARS OF EXCELLENCE
RATING AA+
பாரத் பல்கலைக்கழகம்
B.TECH
AERONAUTICAL ENGINEERING
AUTOMOBILE ENGINEERING
BIO-PROCESS ENGINEERING
BIO-INFORMATICS
BIO-MEDICAL ENGINEERING
CHEMICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
COMPUTER SOFTWARE ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
ELECTRONICS AND CONTROL ENGINEERING
ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
ELECTRONICS AND TELECOM ENGINEERING
FOOD PROCESS ENGINEERING
GENETICS ENGINEERING
INDUSTRIAL BIO-TECHNOLOGY
INFORMATION TECHNOLOGY
INSTRUMENTATION AND CONTROL ENGG.
MECHANICAL ENGINEERING
MECHATRONICS
NANO TECHNOLOGY
PRODUCTION TECHNOLOGY
B.ARCH Eligibility : As per Council of Architecture norms
M.TECH
[For Program details, please visit: www.bharathuniv.ac.in ]
EVENING PROGRAMME : B.TECH & M.TECH
MECHANICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME
Eligibility : Diploma / B.Sc.
M.S. BY RESEARCH AND Ph.D.
All Disciplines Full time and Part time
INTEGRATED PROGRAMME
B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years
MBA
[ Full time and Part time ]
MCA
HOTEL MANAGEMENT & CATERING
Courses : Diploma, B.Sc., & MBA
PLACEMENT 100%
1st among the participants from 125 Countries in International competition on Robotics
Job Placements : 100% with the highest salary package of ₹10 L.P.A.
Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP, Etc.,
Internationally acclaimed curriculum in tune with global trends.
Scholarships worth ₹12.00 crores to the meritorius students
27 Centers of excellence to promote research and industry aided / driven projects
SCHOLARSHIP (TUITION FEES GRANT) ■ 100%-State Toppers of all Boards ■ 50%-School toppers, participated in National Level Sports Competition / Event ■ 30%-Students having participated in State Level Sports Competition / Event ■ 35%-Students securing 90% above Marks in the Board examinations ■ 25%- "SARVA SIKSHA" Scheme I Scheduled Caste / Scheduled Tribe candidate I Parent being an Ex-servicemen I Physically Handicapped candidate I First Graduate candidate
HOW TO APPLY: Application forms can be obtained: In person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/-. Eligibility : As per UGC/AICTE norms.
BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. Ph 044-22290247
Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. Ph 044-42115251 / 91-98410 64199
Apply online : www.bharathuniv.ac.in
ADMISSION HELPLINE
1800-419-1441
Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity
BY REGISTRAR

Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of September 2026
SATTAKADIR - Tamil Law Journal /Monthly September 2026 / Publication First Week of Every month.
Registration of News Papers for India, Reg. No. 62767/92
Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026




On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Editor : Dr. V.R.S. Sampath**